இலவச இணைப்புடன்

தீபாவளி சிறப்பிதழ்

21.10.1984

ரூ.1.50



ஸ்ரீ வேணுகோபாலன் எழுதும் மோகினி திருக்கோலம்

ஆரம்பம்

கல்கி

அங்கமெங்கும் புத்தம் புதிய உணர்வு பெற்றிடுக.



பட்டுப் புடவைகளிலே புத்தம்புதிய கற்பனைகள். சென்னையில் மிகப்பெரிய புடவை ஷோரூம்களில் ஒன்றிலிருந்து தேர்ந்தெடுப்பதற்கு 30000 பட்டுப் புடவைகள். காஞ்சிபுரம், ஆரணி, தர்மாவரம், போச்சம்பள்ளி, சேலம், கும்பகோணம், பெங்களூர் மற்றும் பனாரஸிலிருந்து வந்த மிகச்சிறந்த ரகங்கள். ஒவ்வொரு புடவையும் உங்களுக்குப் புத்தம்புதிய உணர்வைத் தந்திடும். புத்தம்புதிய உணர்வு பெற்றிட வாருங்கள்.

லக்ஷ்மி சில்க் ஹவுஸ்

மிகப் பெரிய பட்டுப்
புடவை ஷோரூம்


பனகல் பார்க் எதிரில், (மாடியில்)
சென்னை-600 017

நீங்கள் முற்றிலும் மாறிவிடுவீர்கள்!

உரிமை: லக்ஷ்மி ஸில்க் ஹவுஸ்
(மதராஸ்) அண்ட் கம்பெனி

Market Movers/LSH/349/TM

அரசியல் தீபாவளி!


என்.டி.ஆர்.: 163 வெடி இருக்கு. இதுதான் பெரியசரம்.
பாஸ்கர்ராவ்: என்னுதுலேதான் 52 வெடி இருக்கு. என்னது தான் பெரிய சரம்.
ராம்லால்: நல்லா வெடிக்கும்னுதான் கடைக்காரர் (டூப்பளுர் — நரசிம்மராவ்) சொன்னரு. புஸ்ஸாயிடுச்சே!
ஹெக்டே: என்கிட்டே இருக்கிற பட்டாசுலே நெருப்பு இருந்துக்கிட்டே இருக்கு. எப்ப வெடிக்குமோ?
எஸ்.டி.எஸ்: என் பட்டாசு வெடிக்கல்லே. பரவாயில்லே. எல்லாத்தையும் ஒன்னு வச்சு புஸ்வாணம் கொளுத்துவேன்.
கருணாநிதி: என்கிட்டே (கூட்டணி) திரி இருக்கு. எந்தப் பட்டாசுலே வேணு வச்சுக் கொளுத்தலாம்.
சரண்சிங்: எல்லாப் பட்டாசுகளையும் ஒன்ணாப் போட்டு ஒரே திரியிலே தான் கொளுத்தணும் — அதையும் ஒருத்தர் தான் கொளுத்தணும். அதுவும் நான்தான் கொளுத்தணும்.
இந்திரா காந்தி: யாரு எவ்வளவு பட்டாசு வச்சுண்டு என்ன? தேர்தல் நெருப்பு என்கிட்டே இருக்கு. எப்ப வச்சு வெடிக்கணும்னு எனக்குத் தெரியும்.
வொஜி: அம்மா சொல்லு சொன்னு வெடிப்பேன். மூஞ்சியிலே வெடிக்கச் சொன்னாலும் வெடிச்சுப் பேன்!
கருத்து: எம். ஆர். ராஜன்.

சிறப்புப் பேட்டி

“நமக்குத் தேவை பேச்சல்ல செயல்கள் மூலமான நிரூபணங்கள்”!

கேரளத்தின் முன்னாள் சட்ட அமைச்சர்சுப்ரீம்கோர்ட் முன்னாள் நீதிபதி வி. ஆர். கிருஷ்ணய்யர். இந்நாளிலும் பல நியாயமான இயக்கங்களில் ஈடுபட்டு, நீதிக்கும் நேர்மைக்கும் துணையாக நின்று போராடும் திடமனம் படைத்தவர்.

சமீபத்தில் சென்னைக்கு வந்து இரண்டு நாட்கள் தங்கியிருந்த போது, பல்வேறு பொதுக்கூட்டங்களுக்கும், அலுவல்களுக்கும் இடையே, ஒரு மணி நேரத்துக்கு மேல் ‘கல்கி’ சிறப்புப் பேட்டிக்கு ஒதுக்கினார், ஜஸ்டிஸ் கிருஷ்ணய்யர்.

1 தற்போது இருக்கிற ஆட்சி முறையே இந்தியாவிற்கு ஏற்றது என்று நினைக்கிறீர்களா? அல்லது ஜனாதிபதி முறை ஆட்சியை நீங்களும் ஆதரிக்கிறீர்களா?

பாராளுமன்ற அமைப்பா, இப்போது அடிபடும் ஜனாதிபதி ஆட்சி முறையா என்று நீங்கள் கேட்கிறீர்கள்; இல்லையா? அப்படியானால், ஜனாதிபதி ஆட்சிமுறை அல்ல; பாராளுமன்ற அமைப்புத்தான் நமக்குத் தேவை என்று துளிகூடச் சந்தேகத்துக்கு இடமில்லாமல் சொல்லுவேன். காரணம்: இந்தப் பாராளுமன்ற அமைப்பிலேயே சாதாரண குடிமக்களுக்கு ஆட்சி முறையில் ஏதும் பங்கு கொண்டு குரல் கொடுக்க வாய்ப்பு இல்லையே? இந்தியா போன்ற இத்தனை பெரிய நாட்டில் ஜனாதிபதி முறை ஆட்சி வந்தால், மக்களை அறவே மறந்து விடுவார்கள். ஜனநாயக எதேச்சாதிகாரத்துக்கு அது ஓர் நிரந்தர அமைப்பை உருவாக்கித் தந்து விடும்.

2. இந்தியாவில் நீதி மன்றங்கள் நியாயமாக நீதி வழங்குகின்றனவா? அல்லது விசுவாசமான நீதித்துறை (Committed Judiciary) பரவாயில்லையா? அப்படியானால் எந்த விதத்தில்? விசுவாசமான நீதித்துறை என்பதற்கு உங்கள் விளக்கம் என்ன?

இந்த நாட்டில், நாம் எதைச் சொல்ல விரும்புகிறோமோ, அந்த வார்த்தைகளின் உண்மையான அர்த்தத்தைச் சரியாகப் புரிந்து கொள்ளாமலே, ‘விசுவாசமான நீதித்துறை’ போன்ற வாக்கியங்களை வெகு தாராளமாகக் கையாளத் தொடங்கி விடுகிறோம். அரசியல் சாசனச் சட்டத்தின் கீழ், இந்திய நீதித்துறை அதி முக்கியமான ஓர் அங்கம் வகிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். கூட்டாட்சி (ஃபெடரல்) அமைப்பில், நீதித்துறை ஒரு முக்கிய கருவி மட்டுமல்ல, வளர்ந்து வரும் நாடுகளில், அதிகார வர்க்க நீதி முறையி



விருந்து. சோஷலிஸ ஜனநாயக நீதிமுறைக்குத் தாவி முன்னேறும் வகையில் நீதித்துறை புரட்சிகரமான பணியைச் செய்ய வேண்டியுள்ளது.

இந்திய நீதித்துறை அப்படிச் செயல்படுகிறதா என்பதே உங்கள் கேள்வி. இந்திய நீதித் துறையைப் பொறுத்தவரை, நான் எதிர்பார்த்த அளவுக்கு அது செயல்படவில்லை. பல முறை சாதாரண மக்களின் பக்கம் இருக்காமல், அதிகார வர்க்கத்தின் பக்கமே அவர்கள் சாய்ந்திருக்கிறார்கள். வேண்டுமென்றே அவர்கள் இப்படிச் செய்வதில்லை என்று சொல்லலாம். நீதித்துறை அப்படி ஒரேயடியாகப் பாரபட்சமாக இருப்பதாக யாரும் குற்றம் சுமத்தி விட முடியாது. ஆனால் விடுதலைக்குப் பிறகு, இந்திய நீதித் துறை செயல்பட்டு வரும் விதம், சமுதாய நீதியை எதிர்பார்க்கும் சாதாரண மனிதனுக்கு அத்தனை நம்பிக்கை யூட்டுவதாயில்லை. இந்திய அரசியல் சாசனச் சட்டத்திற்குக் கட்டியம் கூறுவதும், முத்திரை இடுவதும் தானே சமுதாய நீதி?

இந்திய அரசியல் சாசனச் சட்டத்தின் முன்னுரையைப் பாருங்கள்:

''இந்தியக் குடிமக்களாகிய நாங்கள், ஒவ்வொரு பிரஜைக்கும் நீதியையும், அரசியல் — சமூக — பொருளாதார சமத்துவத்தையும், தனி மனித கௌரவத்தையும் பெற்றுத்தர உறுதி பூணுவோம்...''

மேற்கண்ட உறுதி மொழியை உண்மையாக்க, நீதித்துறை மனிதத்துவத்தோடும் புரட்சிகரமாகவும் செயல் பட்டால் ஒழிய இது சாத்தியமே இல்லை. இங்கேதான் 'விசுவாசம்' — கமிட்மெண்ட் — வருகிறது. நீதித்துறை இந்தக் குறிக்கோளுக்குக் கட்டுப்பட்டு விசுவாசமாய் இல்லாமலிருந்தால், லட்சியங்களைப் பற்றிய அக்கறை கொள்ளாமல் இருந்தால்; தானே சட்டத்தின் மொத்த உரு என்ற நினைப்புக் கொண்டிருந்தால்; சட்டத்தை விடப் பெரியது நீதித்துறை என்ற மனப்போக்குடன், ஷரத்துக்களுக்கு விபரீதமான அர்த்தம் கண்டுபிடித்துச் செயல்பட்டால், நான் இப்படிப்பட்ட நீதித்துறையை வரவேற்க மாட்டேன். அரசியல் சாசனச் சட்டம் அறிமுகப்படுத்தப் பட்ட பிறகு செய்யப் பட்ட நீதித்துறை பற்றிய ஓர் ஆய்வில், முழு உணர்வோடும் ஆழ்ந்த சிந்தனையோடும் அடித்தள மக்களையும், கடைசிக் குடிமகனையும் நினைவில் கொண்டு நீதித்துறை அமைக்கப்படவில்லை என்பதைக் கண்டறிந்தார்கள்.

சுப்ரீம் கோர்ட் விசுவாசமானதாயிருக்க வேண்டும்: ஆயிரம் முறை சொல்லுகிறேன்— விசுவாசமானதாயிருக்க வேண்டும். எதற்கு விசுவாசம்? அதிகார வர்க்கத்துக்கு அல்ல. இந்தக் கட்சிக்கோ, அந்தக் கட்சிக்கோ அல்ல. மத்தியிலோ மாநிலத்திலோ உள்ள அரசாங்கங்களுக்கு அல்ல. உயர்ந்த லட்சியங்களுக்கு. அடிப்படை விதிமுறைகளுக்கு. இந்திய அரசியல் சாசனச் சட்டத்தில் எது குறிக்கோளாகச் சொல்லப்பட்டிருக்கிறதோ அதை அடைவதற்கு. அரசியல் சாசனச் சட்டத்துக்கும் அதன் லட்சியத்துக்கும் விசுவாசமாயிருந்தால், யாரும் நீதிபதிகளைப் பற்றிக் குறை சொல்ல மாட்டார்கள். ஏனென்றால் அரசியல் சாசனச் சட்டம் தான் எசமானன். அவனுக்குத் தான் விசுவாசமாயிருக்க வேண்டும். கடைசியில் யார் அந்த எசமானன்? இந்த மக்கள் தானே? அந்த மக்களுக்குப் பதில் சொல்லும் கடமை நீதித் துறைக்கு இருந்தாக வேண்டும். அதைத்தான் நான் மக்களுக்கு விசுவாசமாயிருக்க வேண்டும், அரசியல் சாசனச் சட்டத்துக்கு விசுவாசமாயிருக்க வேண்டும் என்கிறேன். எந்த ஒரு ஆட்சிக்கும், எந்த ஒரு கட்சிக்கும் கட்டுப்பட்டுக் கையைக் கட்டிக் கொண்டிருக்கலாகாது.

3. 'ஏழைகளுக்கு இலவசச் சட்ட வசதி' என்னும் திட்டம் அதன் நோக்கங்களுக்கு ஏற்பச் செயல்பட்டு வருகிறதா?

பரம ஏழையான மக்களும், படிப்பறிவு இல்லாத மக்களும், அதிக அளவில் கிராமங்களில் வாழும் மக்களுமே உள்ள இந்தியாவில், இப்படி ஒரு திட்டம் இருப்பது மிகமிகச் சரியானது. ஏழைகளுக்கு இலவசச் சட்ட ஆலோசனை வசதி இல்லை என்றால், அது 'நீதித்துறை செய்யும் ஏமாற்று வேலையாகிவிடும். ஏனென்றால் வாதி



அமெரிக்காவிலுள்ள ஃப்ளோரிடா மாநிலத்தில் ஒரு கணவன் — மனைவி தங்களுடைய இரண்டு நாய்களையும் காருக்குள் வைத்துப் பூட்டி விட்டுப் போய் விட்டார்கள். பிராணி வதைத் தடுப்புச் சங்கத்தைச் சேர்ந்த சிலர் அதைப் பார்த்தார்கள். சொந்தக்காரர் திரும்பியதும் கூறினார்கள்: ''உங்கள் மீது நாங்கள் வழக்குப் போட்டால் உங்களுக்குக் குறைந்தது மூன்று மாத சிறைத் தண்டனை கிடைக்கும். ஆனால் இப்போது நீங்கள் கார் கதவுகளைப் பூட்டிவிட்டு இந்த நாய்கள் மாதிரியே ஒரு மணி நேரம் காருக்குள் உட்கார்ந்து சிறைத் தண்டனை அனுபவித்தால் உங்களை இதோடு விட்டு விடுகிறோம்!''

தம்பதியர் காருக்குள் ஒரு மணி நேரம் உட்கார்ந்து புழுங்கினார்கள்!

—அனிதா ராமச்சந்திரன். ஆதாரம் ஹிந்து:.



டெல்லியில் ஒரு விருந்தில் பாகிஸ்தானிய, இந்தோனேசிய தூதர்கள் சந்தித்துக் கொண்டனர். பாகிஸ்தானிய தூதுவர் கேட்டார்: ''நீங்களெல்லாம் எந்த வகையில் முஸ்லிம்கள்? உங்கள் ஜனாதிபதியின் பெயர் சுகர்னோ. அவரது மனைவியார் ரத்னாதேவி. உங்கள் நாட்டு விமான சர்வீஸோ கருடா! எல்லாம் ஹிந்துப் பெயர்கள்!''

இதற்கு இந்தோனேசியத் தூதுவர் அளித்த பதில்: ''அதனால் என்ன? சில தலைமுறைகளுக்கு முன் நாங்கள் எங்கள் மதத்தை மாற்றிக் கொண்டோம். எங்கள் முன்னோர்களையோ, கலாச்சாரத்தையோ அல்ல!''

ஆதாரம்: ஹிந்துக்களின் இதயக் குரல். தகவல்: கே. உமா.

பிரதிவாதி என்கிற இரண்டு கட்சிகளும் சமமானவை அல்ல. ஒன்று செல்வம் நிறைந்தது. மற்றொன்று 'தரித்திரம். ஏழைக்கு நீதிமன்றம் வசதி செய்து கொடுக்கவில்லை என்றால், ஏழை தனது கட்சியை எடுத்துவாதிட முடியாது இதில் இன்னும் முக்கியமான அம்சம் ஒன்று — அரசாங்கம் ஒரு பக்கமும் குடிமகன் ஒரு பக்கமும் இருப்பார்கள். அந்தக் குடிமகன் படிப்பறிவு இல்லாதவனாகவும், பாட்டாளியாகவும், ஏழையாகவும் இருந்து விட்டால், சர்வ வல்லமை படைத்த அரசுக்கு எதிராக நீதிமன்றத்திடமிருந்து நியாயம் வேண்டிப் போராட முடியாது. இங்கேதான் இலவசச் சட்ட உதவி அவனுக்குத் தேவை. வளர்ந்து வரும் நாடுகளில் நீதி வழங்கும் துறையில், ஏழைகளுக்கு இலவசச் சட்ட உதவி மிகத் தேவையானது என்று கூறுவேன்.

இந்தியாவில் நல்ல காலமாக, இருக்கிறது இந்த வசதி. அரசியல் சாசனச் சட்டம், பிரிவு 39(ஏ), ஒவ்வொரு அரசும் இந்தச் சலுகையைச் செய்து தர வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இன்னொரு பிரிவு, பிரிவு 14 — சட்டத்தின் கீழ் பாரபட்சமின்மையைக் கூறுகிறது. எல்லோருக்கும் சட்டத்தின் கீழ் பாதுகாப்பு அளிக்கக் கோருகிறது. பாரபட்சமில்லாத சட்டம் என்பது சரிதான். ஆனால் தார தம்மியம் உள்ள இரு கட்சிகளுக்கிடையே அது எப்படிச் செயல்படும்? பாருங்கள்: பணக்கார, மிகப்பெரிய, சக்தி வாய்ந்த கட்சி, (வாதியாக அல்லது பிரதிவாதியாக) ஒரு பக்கம்; மிகச்சிறிய, சக்தியே அற்ற மிக ஏழையான கட்சி ஒரு பக்கம். அதனால் தான் இரண்டாவது கட்சிக்கு எல்லா உதவிகளும் கொடுக்க வேண்டும் என்கிறேன். அப்போது தான் சரி சமமான நீதியும், சட்ட ரீதியில் ஒரே மாதிரியான பாதுகாப்பும் எதிர்பார்க்க முடியும். அதனால் தான் ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி இன்றியமையாத ஒன்று என்கிறேன்.

அது சரியான வகையில் தான் செயல்படுகிறதா என்பது உங்கள் அடுத்த கேள்வி. ஆமாம் என்பேன்.

எல்லா மாநிலங்களிலும் ஒவ்வொரு விதமான இலவசச் சட்ட வசதி இருக்கவே செய்கிறது. ஆனால் திருப்திகரமாக இல்லை என்பதைச் சொல்லத்தான் வேண்டும். எந்த விதத்தில் என்பீர்கள். ஏழை, எளிய மக்கள் தங்கள் உரிமைகளை வலியுறுத்தும் விதத்தில், தங்களைச் சுரண்டுவோரிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளும் வழி வகைகளில் உதவும் விதத்தில், இந்த இலவசச் சட்ட உதவி எங்கோ தொலை தூரத்தில் இருக்கிறது. இந்த இலவச சட்ட உதவித் திட்டம் இன்னும் முழு வளர்ச்சி அடையவில்லை. இன்னும் தவழும் நிலையில் தான் இருக்கிறது. குறிக்கோள்களை நோக்கி, நீதித்துறையின் புரட்சிகரமான மாறுதல்களை நோக்கி இன்று நடை போடவில்லை. எந்தத் தனி மனிதனுக்கும் சட்டம் அளித்துள்ள உரிமைகளைச் சுட்டிக் காட்டுவதிலும், அவற்றை அடைவதிலும் இவை இன்னும் முழுதும் வெற்றி பெறவில்லை. அப்படி நடக்கும் காலம் வந்தால், ஒரு பெரிய சமுதாய மாற்றம் இந்த நாட்டில் நிகழும்.

ஒரு சாதாரணத் தொழிலாளியையும், அவருக்கு எதிராக உள்ள தொழிலதிபரையும் எடுத்துக் கொள்ளுங்கள். இது போல இன்னும் பல உதாரணங்களை நான் சொல்ல முடியும்: உழைக்கும் விவசாயிகள், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப் பட்டோர் இவர்களை யார் ஒரு பொருட்டாக மதிக்கிறார்கள்? இவர்களுக்குத் தேவையான சக்தியை அளித்தால், சட்ட வசதி என்னும் சக்தியை அளித்தால், ஒரு மிகப் பெரிய மாற்றம் இந்த நாட்டில் நிச்சயம் உருவாகும். இலவசச் சட்ட வசதி இதைச் சாதித்திருக்கிறதா? இல்லை என்பது தான் என் பதில். பெரும்பாலும் இது ஓர் அலங்காரப் பூச்சாகவே இருந்து வருகிறது என்பது வருத்தத்திற்குரிய விஷயம். 'உதட்டுச் சாய' உதவியாகவே இருந்து வந்திருக்கிறது என்பேன். உடலைத் தொட்டால் போதுமா? உள்ளத்தைத் தொட வேண்டாமா இந்த உதவி? இதைப் புதுமையானதாக மாற்றியமைக்க வேண்டும். சட்ட வசதியைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பது; புதுச் சட்டங்களை உருவாக்குவது; புதுச் சட்டங்கள் உருவாகச் சாதகமாகக் கருத்துக்களை உருவாக்குவது; சட்டத்திற்கு நீதிபதிகள் புதிய, யதார்த்தமான அர்த்தம் வெளிப்படுத்த உதவுவது— அதாவது நீதிபதிகளில் சமூக சித்தாந்தங்களுக்கு நீதிமன்றத்தில் இடம் தரச் செய்வது...

நமக்குத் தேவை, சுதந்திரமாகச் செயல்படும் இலவசச் சட்ட வசதி வாரியங்கள். வெறுமனே கடனே என்று வேலை பார்க்கும் அமைப்புக்கள் அல்ல. நம் நாட்டில் பல மாநிலங்களில் இலவசச் சட்ட உதவி தரும் அமைப்புக்களை உருவாக்கும் கட்டளைகளை


மாபெரும்
சலுகை!
ஓர் அழகிய
எவர்சில்வர் கிண்ணம்
ரூ.2.25க்கு மட்டுமே
இது
போன்ற
3
கட்டிகளுடன்
Super Power
Regal
SAVE!
A Shaw Wallace Product
ACIL/0838/84-Tam
சூப்பர் பவர்
ரீகல்
அழுக்கைத் தகர்த்திடும்
துணிகளைக் காத்திடும்
Shaw Wallace
ஷா வாலஸின்
தரமான தயாரிப்பு
சூப்பர் பவர் ரீகல் இச்சலுகை இல்லாமலும் கிடைக்கிறது

மட்டுமே பிறப்பித்திருக்கிறார்கள். தமது அன்றாடத் தேவைகளுக்கும், ஓர் அமைப்பாக இயங்குவதற்கும் நிதி வசதிகளை எதிர்நோக்கிப் பரிதாபகரமாக நிற்கும் இவ்வமைப்புக்கள், எப்படி அந்த அரசுகளையே எதிர்த்துப் போராட முடியும்? இலவசச் சட்ட வசதி என்றாலே, பெரும்பாலும் அரசை எதிர்த்துப் போராடத்தானே? தன் பக்கம் நியாயமான காரணம் இருக்கிற குடிமகன் ஒருவனுக்கு எதிராக அநீதி இழைக்கப்படும் போது. அந்த அதிகாரவர்க்கத்துக்கு எதிராகப் போராடத்தானே வேண்டும்? தனியாக இயங்கும் சுதந்திரமும், நியாயமாகக் கிடைக்கும் நிதி வசதியும் இருந்தால் அன்றி இது எப்படிச் சாத்தியமாகும்?

அது நடக்காது. அதனால்தான் சொல்லுகிறேன்: கூடுமான வரை இந்தத் திட்டங்கள் எத்தனை செய்ய முடியுமோ அத்தனை செய்யட்டும். நீதிபதி பகவதி கமிட்டி ஏதோ ஓரளவு செய்கிறது. ஏன், உங்கள் தமிழ்நாட்டிலேயே ஒரு மிகச் சிறந்த இலவச சட்ட வசதித் திட்டம் இயங்கி வருகிறதே? நான் சொல்லுகிற புதுமையான, புரட்சிகரமான முறையில் இல்லாவிட்டாலும், சுமாரான அளவுக்காகிலும் ஓரளவு இந்தத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. இலவசச் சட்ட வாரியத்தில் இங்கே உள்ள காரியதரிசி திரு ராஜூவுக்கு இணையாக வேறு யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. அதுவும் தவிர, இரண்டு முன்னாள் நீதிபதிகள் வேறு ஆலோசனை வழங்க இருக்கிறார்கள். இவையில்லாமல், இங்குள்ள தலைமை நீதி மன்றமும் ஆரம்பத்திலிருந்தே இந்த இலவசச் சட்ட வாரியம் தனித்து இயங்க மிக்க உதவியாக இருந்து வந்திருக்கிறது. இது போன்ற சூழ்நிலை மற்ற மாநிலங்களில் இல்லை. இங்கே சாலை விபத்து நஷ்ட ஈடு வழக்குகளைத் தீர்ப்பதில் பெருமைப்படத்தக்க சாதனை புரிந்திருக்கிறார்கள். சிறைச்சாலைச் சட்டதிட்டங்கள், சிறைக் கைதிகளின் உரிமைகள் எல்லாவற்றிலுமே குறிப்பிடத்தக்க விதத்தில் இவர்கள் சாதித்திருக்கிறார்கள். இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டும்தான். ஆனால் இதுபோன்ற விஷயங்களில் ஒரே நாளில் ரோம் நகரம் கட்டி முடிக்கப்படவில்லை என்பதை நினைவு படுத்திக் கொள்வது நல்லது.

4. தற்போதைய கல்வித் திட்டம் பற்றி உங்கள் கருத்து என்ன? எந்த வித அடிப்படை மாற்றம் தேவை என்று நினைக்கிறீர்கள்? நமக்குத் தேவையான கல்வித் திட்டம்பற்றி சுருக்கமாகச் சொல்லுங்களேன்? அப்புறம்— இந்த 'காபிடேஷன்' என்னும் கட்டாய நன்கொடை: பிரதமர் இந்திரா கூடாது என்கிறார். ஹெக்டே வாங்கலாம் என்கிறாரே?

முதலில் காபிடேஷன் பிரச்னைக்கு வருகிறேன். பிரதமர் இந்திரா இதை எதிர்க்கிறார் என்று சொல்லுகிறார்கள். 'நான் காபிடேஷனுக்கு எதிரி; நான் இதைக் கடுமையாகக் 'கண்டிக்கிறேன்' என்ற வார்த்தை ஜாலங்களுக்கு ஓர் அர்த்தமுமில்லை. உங்கள் பேச்சு எப்படி இருந்தாலும், உங்கள் செயல் எப்படி இருக்கிறது என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். நமக்குத் தேவை: செயல். சட்ட ரீதியான செயல்பாடு. மத்திய அரசு ஏன் இந்த காபிடேஷன் முறையைக் கடுமையாக அடக்கி உடைப்பில் போடவில்லை? மத்திய அரசு சுண்டு விரலைக் கூட இந்த விஷயத்தில் அசைக்கவில்லை. அதனால் நான் மத்திய அரசின் இந்தப் பிரகடனங்களையே நம்ப மறுக்கிறேன். இதைச் சொல்லுவதில் நான் சற்றுவருத்தப்படுகிறேன். ஏனென்றால், பிரதமர் இந்திரா எதிர்க்கிறாராம்; ஆனால் அவருடைய காங்கிரஸ் அரசாங்கங்கள் எல்லாம் காபிடேஷன் முறையில் கும்மாளம் அடித்துக் கொண்டிருக்கின்றன. அவரது மத்திய அரசு இது பற்றி ஒன்றுமே பேச மாட்டேன் என்கிறது! மகாராஷ்டிரா, (பாஸ்கரராவ் ஆட்சிக் காலத்து) ஆந்திரா எல்லாம் நினைவில்லை? அதனால் இந்த அரசியல்வாதிகள், தாம் காபிடேஷனுக்கு எதிரிகள் என்று கூறினால் போதாது. எனக்குத் தேவை செய்கைகள் மூலமான நிரூபணங்கள். அப்படிப் பார்த்தால் நம்மிடம் எதுவுமே இல்லையே!

ராமகிருஷ்ண ஹெக்டே இதற்கு ஆதரவோ, எதிர்ப்போ தெரிவிக்கிறாரா என்பது உங்கள் அடுத்த கேள்வி. வாய் வார்த்தையாகச் சொல்லுவதை வைத்துப் பார்த்தால் — அவரும் அதை எதிர்க்கிறார். அவர் அரசே ஓர் ஆணை பிறப்பித்திருக்கிறது, காபிடேஷன் வாங்கக் கூடாது என்று. இதில் விசித்திரம் என்னவென்றால், நீதி நியாயத்தை நிலைநாட்ட இருக்கும் கர்நாடக உயர்நீதிமன்றம், காபிடேஷன் தொகை வாங்குவது, இந்நாட்டில் நியாயத்தின், தர்மத்தின் ஒரு பகுதி என்று நினைத்தது போலிருக்கிறது! இப்படிக் குளறுபடியான நீதித்துறை நினைப்புக்கள் இருந்தால், நாம் வேண்டிக் கொள்ளுவதெல்லாம், ''கடவுளே, இந்த நீதிபதிகளிடமிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்!''

அப்படித்தான் நடந்திருக்கிறது. ஒருவேளை அந்த நீதிபதிகள் சட்டரீதியாக அந்த விஷயத்தை அணுகியிருப்பார்கள். சட்டத்தைப் பொறுத்தவரை அவர்கள் வெகு சரியாகவே முடிவெடுத்திருப்பார்கள். ஆனால் என்னைப் பொறுத்தவரை, நான் நீதியும், நியாயமும் முடிவில் கிடைக்க, சட்டத்தை ஒரு சாதனமாகப் பயன்படுத்த நினைக்கும் ஒரு குடிமகன். கல்வித் துறையில் காபிடேஷன் முறை ஓர் அக்கிரமமான இணைப்பு.

இங்கே தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட பாலிடெக்னிக்குகளை வீதிகளில் கூவிக் கூவி விற்கிறார்கள். அதைத் தனியார் துறையில் விட்டுவிடுகிறார்கள். நான் கோவையிலிருந்த போது கேள்விப்பட்டேன்... ஏராளமான பாலிடெக்னிக்குகள் இங்கே தொடங்கப் போகிறார்களாம்: சரியான கட்டடங்களோ, இடமோ கூட இல்லாமல், தட்டுமுட்டுச் சாமான் போடுகிற ஓர் இடம் இருந்து விட்டால், போதும். பாலிடெக்னிக் ஆரம்பித்து விடலாம். கருவிகள் வேண்டாம், ஆசிரியர்கள் வேண்டாம், ஒன்றும் வேண்

டாம், காபிடேஷன் தொகை ஒன்று மட்டும் போதும்! தமிழ்நாட்டில் இன்னும் ஒரு சட்டக் கல்லூரி தொடங்குகிறார்களாமே? அதுவும் தனியார் துறையில்? ஐம்பது சத வீத வரும்படி காபிடேஷன் தொகையில்!

இந்த நாட்டில் ஆட்சியிலுள்ளவர்களில் எவருக்குமே 'நான் காபிடேஷன் முறைக்கு எதிரி' என்று சொல்ல அருகதை இல்லை. பைபிளில் சொல்லியிருக்கிறபடி, 'யார் குற்றம் எதுவும் செய்யவில்லையோ, அவர்கள் முதல் கல்லை வீசட்டும்!'

உங்கள் கேள்வியின் முதல் பகுதிக்கு வருகிறேன்: நமது கல்வித் திட்டத்தில் ஓர் அடிப்படைத் தவறு இருக்கிறது. அது இரண்டு வகையான மக்களை உருவாக்குகிறது. ஒரு குழந்தை பள்ளிக்குக் கிளம்புகிற போது, ஆரம்பத்திலேயே, ''நீ உயர்மட்டத்தைச் சேர்ந்த குழந்தை. அதனால்தான் உன்னை எல்கேஜிக்கும், யூ. கே. ஜிக்கும், கான்வென்ட்டுக்கும், ஆங்கில மீடியம் பள்ளிக்கும் அனுப்புகிறோம்!'' என்கிறீர்கள். ஓர் ஏழை, அரிஜன, சேரி அல்லது கிராமத்தில் வாழ்கிறவனை நினைத்துப் பாருங்கள். அவனுக்கு வெய்யில் மழையிலிருந்து பாதுகாப்புக் கூடத் தர இயலாத ஒரு கூரைக் கூடமே பள்ளிக்கூடம்! ஆசிரியர்கள் இல்லை. கட்டடம் இல்லை. இருப்பதெல்லாம் மிகச் சிறிய இடம். அதிலும் மூன்று வகுப்புகள்... ஏதேதோ கூச்சல்கள்... ஏதேதோ மொழிகள்... இது தான் ஏழைகளின் பள்ளிக்கூடம். பணக்காரர்களின் பள்ளிக்கூடத்தில் எல்லோரும் அழகாக ஆங்கிலம் பேசுவார்கள். மக்காக உடை தரித்து, 'டை' கட்டியிருக்கும் அந்தச் சிறுவர் சிறுமியரை, காரிலும் ரிக்ஷாக்களிலும் வந்திறங்குவதைப் பார்ப்பதே கண்கொள்ளாக் காட்சி.

இதுவே இந்த நாடு கல்வித் துறையில் சரிசமமான வாய்ப்பு அளிக்க உதவவில்லை என்பதைக் காண்பிக்கிறது. இப்படிப் பணக்கார வர்க்கம், ஏழை, எளிய வர்க்கம் என்கிற வர்க்க பேதத்தை ஆரம்பம் முதல் நமது கல்விக் கூடங்களிலேயே வளர்த்து நிலைநிறுத்தி விடுகிறோம் என்பதே என் வருத்தம்.

இரண்டாவது குறை, கல்வி முடிந்தவுடன் வாழ்க்கையைச் சரியாக அமைத்துக் கொள்வதில் நமது கல்வியமைப்பு உதவுவ இல்லை. முதல் தர டாக்டர்கள், முதல்தர இஞ்சினீயர்கள், முதல்தர டெக்னீஷியன்கள் உருவாக்கிவிடுகிறோம். வாஸ்தவம்தான். அவர்கள் இந்தப் படிப்பு முடிந்தவுடன் அமெரிக்காவுக்கோ, வேறு ஏதாவது நாட்டுக்கோ தம்மை ஏற்றுமதி செய்து கொள்ள நினைத்து விடுகிறார்கள். இந்த நாட்டிலேயே அவர்கள் பணியாற்ற வேண்டும். அவர்களுக்கு வெளிநாடு போக விசாவும், பாஸ்போர்ட்டும், மறுக்கப்பட வேண்டும்.

எம். பி. பி. எஸ். கல்விக்கு, ஒரு மாணவனுக்கு ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் இந்த நாடு செலவிடுகிறது. அவன் புத்திசாலியாயிருந்து எம். டி. அல்லது எம். எஸ். ஆகிவிட்டால், அவன் உடனே அட்லாண்டிக்கைக் கடந்து பறந்து அங்கே எங்காலும் வேலை தேடிக் கொள்கிறான். நாம் ஏன் இதை அனுமதிக்கிறோம்? ரஷ்யாவிலிருந்தோ, சீனாவிலிருந்தோ யாரும் இப்படி ஓடிப் போவதில்லையே? நம்முடைய மூலதனத்தை இப்படி இவர்களுக்காகச் செலவிட்டிருக்கும் போது, இப்படித் தேசப்பற்று இல்லாமல், பணம் ஒன்றே குறியாக நாட்டை விட்டும் மக்களை விட்டும், யாருடைய சேவைக்காக இந்தக் கல்வி இவர்களுக்கு அளிக்கப்பட்டதோ அவர்களை விட்டும் ஓடலாமா?

நமது கல்வி முறையில் இன்னொரு குறை— புத்தகத்தனமானது. அவர்களாகவே ஒரு தொழில் தொடங்க இது உதவுவதில்லை. குமாஸ்தாக்களை உருவாக்குகிறோம். மெக்காலே சந்தோஷப்படுவார் — சுதந்திரம் அடைந்து 37 வருஷங்களுக்குப் பின்னரும், அவர் உருவாக்கிய கல்வி முறையில் நாம் மாற்றம் எதுவும் செய்யவில்லை என்று! எஸ். எஸ். எல். ஸியோ, பி. ஏ. வோ படித்து பாஸ் செய்த ஒருவர் உங்களிடம் வந்தால், 'ஏதாவது அமைச்சரிடம் சொல்லி எனக்கு ஒரு குமாஸ்தா வேலையோ, கண்டக்டர் வேலையோ வாங்கித் தர முடியுமா?' என்று தான் கேட்கிறார். சுயமாக ஏதாவது; சிறிய அளவிலாவது, தொழில் தொடங்க அவர் முனைவதில்லை. புதிதாக எதையும் உபயோகமாகக் கண்டு பிடிப்பதில் அவர் துணிவதில்லை. இளைஞர்களை எல்லாம் ஒட்டு மொத்தமாக குமாஸ்தாக்கள் ஆக்குவதில் தான் நம் கல்வி முறை சாதனை புரிந்திருக்கிறது. புதுமை என்கிற அம்சமே மரத்துப் போய், இமிடேட் செய்கிற கல்வி முறையே நடைமுறையில் அமைந்து போய் விட்டது!


பேட்டி: சாருகேசி
புகைப்படம்: யோகா

(வி. ஆர். கிருஷ்ணய்யரின் தெளிவான ஆணித்தரமான கருத்துக்கள் அடுத்த இதழில் தொடர்கின்றன.)




முதல்வர் எம். ஜி. ஆர். நோயுற்று ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பது அறிந்து மிகுந்த மன வருத்தம் அடைகிறோம். அவர் துரிதமாகப் பூரண குணம் அடைந்து இல்லம் திரும்பி தீபாவளி கொண்டாடினால்தான் நமது தீபாவளியும் மகிழ்ச்சி நிறைந்ததாய் விளங்கும். இதற்கு அருள் புரியுமாறு இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.


நாடாளுமன்ற சட்டமன்றத் தேர்தல்களை ஒன்றாக நடத்த தமிழக அரசு கோரிக்கை
தேர்தலுக்குப் பணம்
நானும் இந்த மூட்டையிலேயே ஏதா உக்காந்துக் கலாமுங்க!
தேர்தலுக்குப் பணம்


இ.காங்கிரஸ்
மாநிலத் தலைவர்கள்
குதிரை மெலிஞ்சிருந்துன்னு கவலைப் படாதீங்க!.. நம்ம ஆளுங்க 'கொழு கொழு'ன்னு ரொம்பா இருக்காங்க!
அந்தோணி
மூப்பனார்
மாநிலத் தலைவர்களை டில்லிக்கு அழைத்து தேர்தல் முன்னேற்பாடுகள் குறித்து இ.காங்கிரஸ் மேலிடம் ஆலோசனை நடத்தியுள்ளது!


பட்டீஸ்வரம் கோயில் கோபுரம் கட்டுவதில் என் பாட்டனார் தொண்டராக இருந்தார்— ராகவானந்தம்
ராகவானந்தம் பேரன்
என் பாட்டனார் ராகவானந்தம் குதுப்மினார் கட்டுவதில் தொண்டராக இருந்தவர்



கல்கி

1984 அக்டோபர் 21
மலர் : 43 இதழ் : 12
ரக்தாக்ஷி ஐப்பசி 5



அர்ஜுனன் போல் வாழ்வோம்!

நேயர்களுக்குத் தீபாவளி வாழ்த்துக்கள். கல்கி தீபாவளி மலருக்கு காஞ்சி காமகோடி பீடாதிபதி அளித்துள்ள ஸ்ரீமுகத்தில் ''அர்ஜுனன் போல் வாழ்வோம்'' என்கிறார். ''அர்ஜுனன், நான், எனது என்ற எண்ணம் இன்றி ராஜ்ய ஆசை சிறிதும் இல்லாமல், அரசர்களின் கடமை, அதர்மத்தை எதிர்த்து யுத்தம் செய்வது என்ற உணர்வோடு செயல்பட்டான். பகவான் இதை அவனுக்கு உணர்த்தினார். நாமும் கிருஷ்ண பரமாத்மாவின் உபதேசத்தை ஏற்று, அர்ஜுனன் போலவே ஸ்வதர்மத்தை அறிந்து கொண்டு அதன்படி வாழ்க்கை நடத்துவோம். இன்று நாடு உள்ள நிலையில் ஒவ்வொருவரும் அர்ஜுனன் மாதிரி அதர்மத்தையும் அநியாயத்தையும் போக்கும் வகையில் அவரவர் ஸ்வதர்மம் செயல்பட்டு வெற்றி அடைய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.''

பரமாசார்யாளை நெஞ்சில் இருத்தி, புதுப் பெரியவரையும் வணங்கி, பீடாதிபதிகளின் பொன்மொழிகளை நமஸ்கரித்து ஏற்று அதன்படி செயல்படுவோம். ஜெயேந்திரர் அருளால் வெற்றியும் பெறுவோம். வாய்மையே வெல்லும்.

* * *

தேசத்தின் பொருளாதாரச் செழிப்பைக் கவனிக்கச் சரியான அளவுகோல் வேலை வாய்ப்பகங்களில் உள்ள பதிவேடுகளே. பொருளாதாரம் பலப்பட்டால் இப்பதிவேடுகளில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்வோரின் எண்ணிக்கை குறையும். இவ்வாறின்றி என்னதான் பசுமைப்புரட்சி என்றும் உற்பத்திப் பெருக்கம் என்றும் புள்ளி விவரங்கள் தந்து மேடையிலும் கொட்டி முழக்கினாலும் பலனில்லை. ஏழைமை ஒழியப் போவதில்லை. இந்த அடிப்படையில் பார்க்கும் போது நமது பொருளாதாரம் பரிதாபத்துக்குரிய நிலையிலேயே உள்ளதைக் காண்கிறோம். தேசிய சர்வே ஒன்று 1985–ல் வேலையற்றோர் எண்ணிக்கை நாலே கால் கோடியாக உயரும் என்கிறது. இது வேலை வாய்ப்பு அலுவலகங்கள் தந்த புள்ளி விவரங்களின் அடிப்படையில் செய்யப்பட்ட சர்வே. இந்த அலுவலகங்களில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளாமலேயே மேலும் கோடிக்கணக்கான மக்கள் வேலையின்றி அவதிப்படுகிறார்கள் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நகர்ப்புறங்களைக் காட்டிலும் கிராமங்களில்தான் வேலைவாய்ப்புக்கள் மிகவும் குறைவாக உள்ளன. எனவே விவசாயம் தொடர்பான சிறு தொழில்களை ஏராளமாகத் தொடங்கினாலன்றிக் கிராமப்புற மக்கள் வேலை தேடி நகரங்களுக்கு வருவதும் அதனால் புதிய பிரச்சினைகள் உருவாவதும் தவிர்க்க முடியாததாகவே இருக்கும். தானியங்கு பிரம்மாண்ட இயந்திரங்களை நிறுவி உற்பத்தியை ஏராளமாகப் பெருக்கினாலும் உற்பத்தியாகும் பண்டங்களை வாங்கும் சக்தி மக்களுக்கு ஏற்பட வேண்டுமல்லவா? வேலை வாய்ப்புக்கள் தானே இதைச் சாத்தியமாக்கும்? எனவே குறைந்த முதலீட்டில் அதிகபட்ச மக்களுக்கு வேலை தரக் கூடிய தொழில்களைக் கிராமப்புறங்களில் ஆரம்பிப்பது தான் புத்திசாலித்தனம். ஐந்தாண்டு திட்டங்களுக்கு எவ்வளவு பணம் செலவழிக்க வேண்டும். அதற்கு எவ்வளவு வரி விதிக்க வேண்டும் என்று சிந்திப்பதற்குப் பதில் எத்தனை பேர்களுக்கு இந்த ஆண்டு வேலை வாய்ப்பு உருவாக்கித் தரவேண்டும் அதற்கு எந்த விதமான தொழில்களை எங்கு தொடங்க வேண்டும் என்று திட்டம் தீட்டுவோர் சிந்தனையிலேயே அடிப்படை மாறுதல் தேவை. இதுவே சுபிட்சத்துக்கு வழி.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்.



1

ஊர் எங்கே போனது?

காற்றில் கரைந்து கொண்டிருந்தான் அந்த இளைஞன். இரு பக்கமும் தூள் பறந்தது. மரவர்க்கங்கள் வீச் வீச் என்று பின்னால் ஓடின. இலைகளிலிருந்து பட்சி ஜாலங்கள் குபீரென்று மேலே பறந்தன. உலகம் பூராவும் அவன் முன்னே திகும் திகும் என்று குதித்து வந்து கொண்டிருந்தது.

பின்னால் ஒரு முறை திரும்பிப் பார்த்தான். இன்னும் அந்தக் குதிரை ஆட்கள் பின்னால் வந்துகொண்டிருந்தார்கள்! கொள்ளைக்காரர்களா? அல்லது வழிப்பறிக்காரர்களா?

என்னமாக வாளைச் சுழற்றி விட்டுவந்தார்கள்.

நரி போன்று ஒரு ஊளை!

நினைத்தாலே குடல் சுருள்கிறது.

எப்படி அவர்கள் திடீரென்று தோன்றினார்கள்? எங்கே அவர்கள் ஒளிந்திருந்தார்கள்?

குதிரையை முடுக்கினான் அவன்.

ஏற்கெனவே அது சோர்ந்திருந்தது.

தலையைத் தூக்க இயலவில்லை.

கால்கள் சமயங்களில் பின்னின. இருந்தும், எஜமான விசுவாசம் அதை விடவில்லை.

கடைசித் திறன்களைக் கால்களில் பிரயோகித்துத் தரையை உதைத்து எகிறியது.

வெய்யில் ஏறிக் கொண்டிருந்தது.

பூமி மூச்சுவிட ஆரம்பித்தது.

ஆவிகள் அங்கங்கு நர்த்தனங்களாக எழுந்தன.

கண்ணைச் சுருக்கிக் கொண்டு அவன் தொலை தூரம் வரை பார்த்தான்.

அதோ பசும் செழுமைக்கு இடையே தெரிகிறதே அதுதான் ஊரா?

'சுற்றிவர ஏன் இப்படிப் பொட்டல்வெளியாக இருக்கிறது?

வயல்கள் எல்லாம் ஏன் தரிசையாகக் கிடக்கின்றன?

ஏதோ பஞ்சம் வந்தாற் போல் எல்லாம் சூன்யமாகத் தெரிகின்றனவே. ஏன்?

நினைப்பதற்கு அவனுக்கு இப்போது அதிகம் நேரமில்லை.

அடிக்கடி திரும்பிப் பார்த்துக்கொண்டே குதிரையைச் செலுத்திக் கொண்டிருந்தான்.


அந்தக் கணவாய் அருகில் வந்ததும்தான் குதிரை களைத்து விட்டது தெரிந்தது.

வாயின் இருபுறமும் கள்ளைப் போல நுரை தள்ளியது.

அதன் உடம்பில் கூட வன்மையான நடுக்கம் தெரிந்தது.

இனியும் அதனிடம் அதிகம் வேலை வாங்குவது கடினம்.

பயமும், கவலையும்மேவிட, திரும்பிஒருமுறை பின்னால் நோக்கினான்.



ஆச்சரியம்!

அவர்களைக் காணவில்லை!

கணவாய் திரும்பியதும் அவர்கள் மறைந்து விட்டார்கள்.

அவன் ஆசுவாசமானான்.

இரண்டாம் முறையும் திரும்பிப் பார்த்து அவர்கள் யாரும் இல்லை என்று தெரிந்த பிறகு, குதிரை வேகத்தைத் தளர்த்தினான்.

இரண்டு பேருமே இளைத்தார்கள்.

இப்போது குதிரை மீது நிறைய பதற்றம் ஓடியது.

அதுவரை அவன் அனுபவித்தது எல்லாம் கனவோ என்று நினைத்தான். ஒரு துர்ச் சொப்பனமோ!

அல்லது குடியிருப்பு வந்து விட்டது என்று அறிந்து கொள்ளையர்கள் அவனை விட்டு விட்டார்களோ?

வெய்யில் வறுத்தது.

அரை நாழிகையில் அந்த ஊரின் முனையை அடைந்தான்.

முதல் பார்வையில் அவன் கண்கள் குறுகின.

சேமந்தலம் ஒரு சின்ன நகரம் என்று கூறியிருந்தார்கள்.

நகரம் என்றால் இப்படியா வெறிச் சென்று இருக்கும்? ஆட்களையே காணவில்லை.

ஆட்கள் மட்டுமில்லை. ஒரு மாடு! ஒரு ஆடு, ஒரு கோழி எதையும் காணவில்லையே!

தோப்பு வழியே சென்று ஊரின்பிரதான சாலையை அணுகினான்.

தேர் ஓடும் விஸ்தாரத்தில் இருந்தது சாலை.

இருபுறமும் பெரிய பெரிய காரைவீடுகள் வெவ்வேறு விதத் திருத்தும் முகப்புகளோடு இருந்தன.

ஒன்றிரண்டு தென்னைகள் ஒதுங்கி இருந்தன.

ஒரு பழுதான வண்டி மேழ குடைசாய்ந்திருந்தது.

சாலை வெகு தூரம் நீண்டு ஒரு வெட்டுச் சாலையோடு இணைந்திருந்தது.

இவ்வளவு சும்பிரமான சாலையில் ஆச்சரியம். ஒரு மனிதப் பூண்டு இல்லை.

ஏதாவது கனவு காண்கிறானா?

சந்தேகக் கண்களுடன் சாலைக்குள் வந்தான்.

அவன் நினைத்தது சரிதான்!

அத்தனை கதவுகளும் மூடியிருந்தன. பலகணிகள் கூட சாத்தியிருந்தன.

ஒரு ஜந்துவைக் காணவில்லை.

மனத்தில் ஒரு விசித்திர திகில் தோன்ற சாலை நடுவே நின்றான். குதிரையை விட்டு இறங்கினான்.

அவன் இறங்குவதற்காகத்தான் காத்திருந்தது போல் குதிரை தொபீர் என்று கீழே சாய்ந்து கால்களை உதைத்தது. ஒரே ஆயாசம் அதற்கு!

கண்கள் இமைகளைக் கொட்டி, கடைசி அந்தம் வரை நோக்கித்திரும்பின. வெறுமை! வெறும் வெறுமை! ஒரு ஜீவன் ஒரு ஜந்து காண முடியவில்லை. அத்தனை இடமும் துடைத்து விட்டாற்போல் துப்புரவாக இருந்தது.

கண்களை இடுக்கினான்.

இதென்ன! எல்லாம் மாயமாக இருக்கிறது!

ஏதாவது வேதாள உலகத்துக்கு வந்து விட்டானா?

ஜடங்களாக வீடுகள் மட்டும் நிற்கின்றன!

ஒரு ஆள், ஒரு உயிரைக் காணவில்லையே!

இது பெரிய ஊர் என்றார்களே!

எல்லோரும் இங்கே என்று எப்படி மாயமாய்ப் போனார்கள்!

நெற்றிச் சுருக்கமோடு பாதித்தெருவரை வந்தான்.

எல்லோரும் எங்கே போனார்கள்?

அசலூரில் திருவிழாவா?

அப்படி இருந்தாலும் எல்லோருமா போவார்கள்?

அவன் கண்கள் வாசல் தரையைப் பார்த்ததும் ஸ்தம்பித்தன.

வாசலில் பெரிய பெரிய கோலங்கள் தென்பட்டன.

''இட்லி, தோசை, தந்தூர்'', ''புடவை, சல்வார்—கமீஸ், ஜீன்ஸ்'', இவையெல்லாம் என்ன என்று பார்க்கிறீர்களா? செய்தித்துறை நிறுவனம் நாட்டின் ஒருமைப்பாட்டிற்காகத் தயாரித்து வெளியிடப் போகும் படங்களின் பெயர்கள்தாம் இவை!

ஆதாரம்: இண்டியன் எக்ஸ்பிரஸ்.

தகவல்: கே. எஸ். கணபதிசுப்ரமணியம்



நிச்சயம் அவை நேற்றோ அதற்கு முந்திய நாளோ போட்ட கோலங்களாக இருக்க வேண்டும்.

தரையைக் கூடச் சுத்தமாகப் பெருக்கி மண் குவியலை ஓரமாக ஒதுக்கி இருந்தார்கள்.

இரண்டு நாள் முன்பாக இருந்தவர்கள் எங்கே மாயமாய் மறைந்தார்கள்?

''ஹோய்!'' என்று கத்தினான்.

குதிரை தலையைத் தூக்கிப் பார்த்தது.

''ஓஹோய்! எல்லோரும் எங்கே இருக்கீங்க?''

கத்தினான் அவன்.

சப்தம் வெகு தூரம் பரவி வெறுமையாகக் கரைந்தது.

மறுமொழி வரவில்லை!

என்ன களைப்பு அவனுக்கு?

வியர்வை இன்னும் அடங்கிய பாடில்லை.

மேலே நடந்தான்.

பசியும், தாகமும் அவனை வாட்டின. ''ஐயா, இங்கே யாரேனும் இல்லையா? யாருமில்லையா?'' என்று உரக்கக் கூவிக் கொண்டே போனான்.

முக்கால் தெரு தாண்டிய போது சடக் கென்று சத்தம் ஒலித்தது. திரும்பினான்.

ஒரு பழமையான கதவு நொந்தவாறு திறந்தது.

ஒரு வயோதிகர் தள்ளாடிய நிலையில் நிலையைப் பிடித்துக் கொண்டு நின்றார்.

''டேய், முட்டாள்!'' என்றார். தொண்டையில் ஒரு நரம்பு நாருக இழுத்தது.

அவன் திரும்பினான். கண்கள் சிவந்தன.

''யாரை முட்டாள் என்று சொல்லீங்க?'' என்று வாளை உருவினான்.

சிரித்தார் கிழவர்.

''நீதான்!'' என்றார் கிழவர்.

''வாயை அடக்கிப் பேசும் பெரியவரே!''

''நீ முட்டாள் இல்லையென்றால் இந்த ஊரில் ஜனங்கள் யாருமில்லை என்று தெரிந்ததும் ஓடியிருக்க மாட்டாயா?'' என்றார் கிழவர்.

''ஏன் ஓட வேண்டும்! ஜனங்கள் எங்கே போனார்கள்? அதைத்தான் நான் ஆராய்ந்து கொண்டிருக்கிறேன்'' என்றான் அவன்.

''தெள்ளத் தெளிந்த விஷயத்துக்கு ஆராய்ச்சி என்ன ஆராய்ச்சி! எல்லோரும் ஊரை விட்டு ஓடியிருக்கிறார்கள்!''

''ஏன்?''

''பெந்தாராக்கள் வந்திருக்கிறார்கள்!''

''யார் அவர்கள்!''

''மராட்டிய வீரர்கள்!''

''அவர்களுக்கு இங்கு என்ன வேலை?''

கிழவர் மீண்டும் சிரித்தார். ''அப்பா! உனக்கு நாட்டு நடப்புத் தெரியாது!''

''அது என்ன நடப்பு? சொல்லும் பெரியவரே!''

''மராட்டிக்காரர்கள் ஊருக்குள் வருவார்கள்!''

''வந்தால் என்ன?''

''கொள்ளை அடிப்பார்கள். சூறையாடுவார்கள். பெண்கள் அகப்பட்டால் மானபங்கம் செய்வார்கள்.''

''ஏன் அப்படிச் செய்கிறார்கள்?''



ஊட்டம்
அளியுங்கள் உங்கள்
தோற்ற நிறத்திற்கு,
மின்னிடும் உங்கள் மேனி
ரெயின்ட்ராப்
ஊட்டமளிக்கும் சோப்
Raindrop
Raindrop
ஆயில் ஆஃப் ஆல்மண்ட்ஸ்
டாடா தயாரிப்பு
Creative Unit-5976 Tam.

''உன்னிடம் பேச நேரமில்லை. எந்த நேரமும் அவர்கள் வருவார்கள். இங்கே நிற்காதே போ!''

என்று அவர் கதவடைக்கப் போக,

''பெரியவரே, நில்லும்!'' என்று அவன் கத்தினான்.

அவர் நின்றார்.

''ஏன் பெரியவரே! உங்களிடம் ஆண் பிள்ளைகள் இல்லையா. அவர்களோடு சண்டை போடுவதற்கு?''

இந்த முறை கிழவர் பொக்கை வாய் அனைத்தோடும் சிரித்தார்.

''பைத்தியக்காரா! அது முடிகிற காரியமா?''

''ஏன் முடியாது?''

''உனக்கு எந்த ஊர்?''

''தென் பாண்டி!''

''மராட்டியரை எப்போதாவது பார்த்திருக்கிறாயா?''

''கேள்விப்பட்டிருக்கிறேன்.''

''யமகாதகர்கள் அவர்கள்! பயம் இல்லாத பலசாலிகள்! யாரும் அவர்களை அடக்கி விட முடியாது! நவாப் படைகள் படுகிற பாடு உனக்குத் தெரியாதா?''

உண்மையில் அவனுக்கு அதிகம் தெரியாது.

சற்றே சிந்தனையோடு நிற்க, கிழவர் தமது கதவைத் தொம் என்று சாத்தினார்.

''ஹூம்!'' என்று ஒரு வீர மூச்சு விட்டான் அவன்.

தூரத்தில் குதிரை மீண்டும் எட்டிப் பார்த்தது.

உருவி இருந்த வாளை ஒரு சுழற்று சுழற்றினான்! நல்ல ஜனங்கள் இவர்கள்! தொடைநடுங்கிகள்! யாரோ கொள்ளையர்கள் வருகிறார்களாம்! இவர்கள் ஊரை விட்டு ஓடுகிறார்களாம். ஹூம்!

மேலே நடந்தான்.

சாலையின் கோடிக்கு வந்திருப்பான்.

அந்த நுட்பமான சப்தம் அவனை இழுத்தது. சற்று உன்னிப்பாகக் கேட்டான்.

ஒரு விசும்பல் சத்தம் கேட்டது. பெண் போலத் தோன்றியது.

அது வரும் வீட்டை அணுகினான்.

வாசலில் பெரிய பூட்டு தொங்கியது. வீடு ஒரு சாதாரண அந்தஸ்தில் இருந்தது. வாசலில் கூரை கொஞ்சம் சரிந்திருந்தது.

வீட்டின் விலாப்பக்கம் வழி இருந்தது.

அதற்குள் அவன் நுழைந்தான்.

வீட்டின் பின்புறம்நோக்கிஅது சென்றது.

மெதுவாக நடந்தான்.

பின்கட்டுப் பகுதியில் வீட்டின் சுவர்கள் இடிந்திருந்தன. ஒரு பகுதி வெளிவாங்கி இருந்தது.

குரல் அதன் உட்புறத்திலிருந்து வருவது தெரிந்தது.

ஓசையில்லாமல் சென்று எட்டிப் பார்த்தான்.

ஒரு கணம் கண் சொடுக்கியது.

உள்ளே தெரிந்த நிழலான முற்றத்தில் ஒரு கர்ப்பமான பெண் சற்று அலங்கோல நிலையில் இருந்தாள்.

நெற்றியில் வியர்வை. முகம் எல்லாம் சோகம்.

கைகளை மாறி மாறித் அலைத்தவண்ணம் இருந்தாள். பிரசவ வேதனையில் இருக்கிறாள் என்பது புரிந்தது.

முனகிக் கொண்டே அவள், ''நீங்க போங்க. இங்கே இருந்தா ஆபத்து! நான் என்னைக் கவனிச்சிக்கிறேன். கவலைப் படாதிங்க'' என்று கூறினாள்.

அவள் பேசிய இடத்தில் யாராவது பெரியவர்கள் நிற்பார்கள் என்று நினைக்கப் போக,

அங்கே ஒரு இளம் வயதுப் பெண் இவளுடன் நிற்பது கண்டு அவன் ஆச்சரியப் பட்டான்.

அந்தக் கர்ப்பிணிப் பெண் வயதானவள். அவளா இந்த இளம் பெண்ணை ''நீங்க!'' என்று அழைக்கிறாள்.

'ஆச்சரியமாக இருக்கிறதே!' என்று நினைத்தான்.

அந்த இளம்பெண் அதற்குள் இவனைப் பார்த்திருந்தாள்.

அவள் விழிகள் பெரிதாகின.

அவற்றில் தெரிந்தது ஆச்சரியமா, பயமா? திகைப்பா? எதுவும் புரியவில்லை.

அந்தச் சமயம் தபதப என்று ஏதோ விதக் குழப்பமான ஓசைகள் கேட்கவே, இரு பெண்களும் பரபரத்தார்கள்.

''வந்துட்டாங்க, சீக்கிரம், சீக்கிரம்!'' என்று பெண்மணி கூவ, அந்த இளம்பெண் காலை இங்கும் அங்கும் வைத்துப் பரிதவித்தாள்.

பிறகு பின்புறம் நோக்கி ஓடினாள்.

(தொடரும்)



''டாக்டரைக் கூப்பிடுங்கள்'' என்று சொன்னார் அண்ணா.

டாக்டர் மில்லர் வந்தார். ''ஆபரேஷனை ஒருநாள் ஒத்திப் போடுங்கள். நாளை மறுநாள் செய்து கொள்கிறேனே...'' என்றார் அண்ணா.

டாக்டருக்குச் சந்தேகம். ஒருவேளை தான் நன்றாக இல்லை என்கிற மாதிரி ஏதாவது எண்ணுகிறாரோ? கேட்டு விட்டார்.

''அதெல்லாமொன்றுமில்லை'' என்ற அண்ணா, கையிலிருந்த கனமான புத்தகத்தை எடுத்துக் காட்டினார். ''இதில் இன்னும் கொஞ்சம் பாக்கி இருக்கிறது. படித்து முடித்து விட்டால் தேவலை'' என்றார்!

—எழுத்தாளர் சங்கம் நடத்திய அண்ணா பவள விழா கூட்டத்தில் சட்டமன்றத் தலைவர் க. ராஜாராம் கூறியது.

—சுப்ர. பாலன்.



"எனது, பதினெறு வயதுக் கால்பந்தாட்டக் கில்லாடி. அவன், ஒரு நாள் உலகிலே மிகச் சிறந்த 'ஃபார்வர்டு' ஆவான்!"

போர்ன்விடாவின் இனிமைக் காலம்

போர்ன்விடா அளித்தவரை பாச மனங்கள்
நேசத்தோடு நினைத்து மகிழும் ஒருநாள்!

1 கிலோ பேகிலும் கிடைக்கிறது. அதன் உள்ளே ஒரு இலவசக் குவளை.

வளரும் குழந்தைகள் வேறு எந்த மால்ட்டட் பானங்களையும்விட போர்ன்விடாவை விரும்பு வதேன்? போர்ன்விடா அருந்தி வளர்ந்த இரு தலைமுறையினர் தங்களுடைய குழந்தைகளுக்கு போர்ன்விடா தவிர வேறு எதுவும் உகந்ததல்ல என்று வலியுறுத்திக் கூறுவதேன்?

அதில்...உற்சாகம் துள்ளும் சுவை மட்டுமல்ல. காட்பரியின் பிரபல பெயர் மட்டுமல்ல. அவற்றைவிட அதிகமோ அதிகம். அதுதான் போர்ன்விடா! அதோடு வளருங்கள்.

காட்பரிஸ்
போர்ன்விடா
நல்ல வளர்ச்சி,
போர்ன்விடா பயிற்சி.



OBM/3784 TAM

மருப்பு மலர்

இந்துமதி

இதுவரை...

கிருத்திகாவின் தாய் அவளை மேல் படிப்புக்குப் புதுதில்லி அனுப்பி வைக்கிறாள். அங்கே போனதும் விஷ்ணுபிரசாத் என்பவரைச் சந்திக்க வேண்டும் என்றும் அவர் அவளுக்கு உதவியாக இருப்பார் என்றும் கூறுகிறாள்.

ரயில் பயணத்தின் போதே கிருத்திகாவுக்கு அர்ஜுன் பழக்கமாகிறான். இருவரிடையே காதல் மலர்கிறது. அர்ஜுன் ராணுவ வீரன். அவன் தந்தை பாஸ்கரப்பாவும் ராணுவத்தில் உயர் அதிகாரியாகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். அவர் கிருத்திகாவின் நற்குணங்களால் கவரப்பட்டு அவர்கள் காதல் கனியத் துணை நிற்கிறார்.

இதற்கிடையில் கிருத்திகா தன் தாயாரின் கடிதத்தைப் படித்துவிட்டு வேண்டாவெறுப்பாக விஷ்ணுபிரசாத்தைக் காணச் செல்கிறாள். அவனுடன் தன் தாய் புவனேஸ்வரி பல கோணங்களில் மிக நெருங்கி இருப்பது போன்ற புகைப்படங்களைக் காட்டுகிறான் விஷ்ணு பிரசாத். அருவருப்படைந்த கிருத்திகாவைத் தகாத முறையில் நெருங்குகிறான் விஷ்ணு பிரசாத். அதிர்ச்சியுற்ற கிருத்திகா அவனிடமிருந்து தப்பிக் கல்லூரி ஹாஸ்டலுக்குத் திரும்புகிறாள். விஷ்ணுபிரசாத் அவளை ஃபோனில் அழைத்து மிரட்டுகிறான்.

கிருத்திகாவுக்கு உடனே அர்ஜுனைப் பார்க்க வேண்டும்; அவனருகில் இருந்தால் பயம் தெரியாது என்று தோன்ற ஃபோன் செய்கிறாள். அர்ஜுன் இன்னும் வீடு திரும்பவில்லை. ஆனால் அக்குடும்பத்தில் நீண்ட காலமாய்ப் பணியாற்றும் விசுவாசமிக்க ராம்சிங், தான் உடனே காரோட்டி வந்து அவளை அழைத்துப் போவதாகக் கூறுகிறான். அவனுடன் அர்ஜுன் வீடு நோக்கிப் போகும் போது பின்னால் ஒரு கார் தங்களைத் துரத்தி வருவதைக் காண்கிறாள் கிருத்திகா...

12

கிருத்திகாவும் ராம்சிங்கும் வீட்டுக்குள் நுழைந்து கூர்க்கா கேட்டைச் சாத்திய பின்பு அந்த அம்பாஸிடர் அவர்களைக் கடந்து போவது தெரிந்தது. நிச்சயமாய் அது அவர்களைத் துரத்திக் கொண்டுதான் வந்திருக்கிறது என்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்ட ராம்சிங், அந்தத் துரத்தல் தனக்கில்லை கிருத்திகாவுக்குத் தான் என்பதைப் புரிந்து கொண்டு சத்தப் படுத்தாமல் வண்டியை போர்டிகோவில் நிறுத்தி இன்ஜினை அணைத்து விட்டு நிம்மதியாய் ஒருதரம் பெருமூச்சு விட்டான். மனத்தின் படபடப்பு சற்றுக் குறைந்ததும், பயந்து போய்ப் பின் ஸீட்டில் உறைந்திருந்த கிருத்திகாவைப் பார்த்தான். அவளுக்கு இன்னமும் பிரமிப்பாக இருந்தது. விஷ்ணு பிரஸாத் இவ்வளவு சீக்கிரமாகச் செயல்படுவான் என்று நினைக்கவில்லை. டெலிபோன் பண்ணி அரை மணி நேரமாகவில்லை; அதற்குள் வண்டி நிறைய ஆட்களைப் போட்டு ஹாஸ்டல் வாசலுக்கு அனுப்பியிருக்கிறானே... ஒரு வேளை அசட்டுத் தைரியத்தில் வழக்கம் போல் தான் தனியாகக் கிளம்பியிருந்தால் என்னவாகி யிருக்கும்...?

தான் நினைத்ததை விடவும் விஷ்ணு பிரஸாத் பொல்லாதவன் பயங்கரமானவன் சட்டமோ போலீஸோ இவனை ஒன்றும் பண்ண முடியாது போலிருக்கிறது. ஏதாவது ஒரு பெரிய இடத்தின் தயவு இவனுக்கு நிரம்பக்கிடைத்திருக்க வேண்டும். அதனால் தான் 'சட்டம் காவல் நிலையம்' என்றதும் அப்படி பயங்கரமாகச் சிரித்திருக்கிறான்.... டாக்ஸியிலோ மற்ற வாகனங்களிலோ வந்திருக்கிற பட்சத்தில் தப்பித்திருக்க முடியாது. ராம்சிங் திறமையாக வண்டி ஓட்டியதால் தான் தப்பித்திருக்கிறோம்... இனி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்... தனியாக வெளியில் எங்கும் — ஏன் வெளியிலேயே போகக் கூடாது.

''என்ன மேம்சாப்... அப்படியே உட்கார்ந்துட்டீங்க. கீழே இறங்குங்க...''

அவள் பதிலே பேசாமல் கீழே இறங்கியதும் கார்க் கதவைப் பூட்டி விட்டு உள்ளே வந்த ராம்சிங் ''யார் நம்மைப் பின் தொடர்ந்தது தெரியுமா மேம்சாப்...?'' என்று கேட்டான்.

''ம்ஹூம்... தெரியாது...''

சடாரென்று வந்த பதிலில் அவள் பொய் சொல்வது புரிந்து போக- அதற்கு மேல் கேள்வி கேட்டு அவளைச் சங்கடப்படுத்த விரும்பாத ராம்சிங்,

''ஏதாவது சாப்பிடுகிறீர்களா...?'' என்று மட்டும் கேட்டான்.

''ஜில்லென்று ஒரு டம்ளர் ஐஸ்வாட்டர் மட்டும் போதும்...''

குளிர்சாதனப் பெட்டியிலிருந்து தண்ணீர் எடுப்பதற்காக அவன் சாப்பாட்டு அறைக்குப் போனபோது கிருத்திகாவும் எழுந்து உடன் போனாள்.

''என்ன மேம்சாப் இப்படிப் பயப்படுகிறீர்கள்? இந்த வீட்டுக்குள் யாரும் நுழைய முடியாது. கவலைப்படாதீர்கள்...''- தண்ணீரைக் கண்ணாடி டம்ளரில் ஊற்றி அவளிடம் தந்த ராம்சிங்; ''அர்ஜுன் சாப்

வருகிற வரை நான் உங்களுக்குத் துணையாக உட்கார்ந்திருக்கிறேன். நீங்கள் பயப்படாதீர்கள்'' —

அவன் சொல்லி முடிப்பதற்குள் வாசலில் கார் நிறுத்தப்படுகிற சப்தம் கேட்டு, அழைப்புமணி அழுத்தப்பட,

''கதவைத் திறக்காதீர்கள் ராம்சிங்... யார் என்று கேட்டுக் கொண்டு பார்த்து விட்டு அப்புறம் திறவுங்கள்...''

''நீங்கள் ரொம்ப பயந்து போயிருக்கிறீர்கள்...'' என்று ராம்சிங் சிரித்துக் கொண்டே போய்க் கதவைத் திறக்க—

கனைத்துப் போனவனாக அர்ஜுன் உள்ளே வந்தான். அத்தனை களைப்பிலும் கிருத்திகாவைப் பார்த்ததும் முகம் சடாரென்று மலர்ந்தது. உதட்டில் பெரிதாய்ச் சிரிப்பு எட்டிப் பார்த்தது.

''நீ இங்கேயா இருக்கிறாய் கிருத்திகா. காலையிலிருந்தே உன்னைப் பார்க்கவில்லையே. இப்போதும் நேரமாகி விட்டதே போனில் கூடப் பேச முடியாது போலிருக்கிறதே என்று சங்கடப்பட்டுக் கொண்டிருந்தால் நீயே இங்கே வந்திருக்கிறாய். எப்போது வந்தாய் கிருத்திகா...?''

அவனைப் பார்த்த நிம்மதியும் சந்தோஷமும் பயத்தையும் படபடப்பையும் குறைக்க 'இனி கவலையில்லை' என்கிறாற் போல் லேசாய்ப் புன்சிரிப்பாய்ச் சிரிக்க முயற்சி பண்ணி ''இப்போது தான் வந்தேன்...'' என்று பதில் சொன்னாள்.

''இப்போதா? இந்த ராத்திரியிலா...?'' மீண்டும் சந்தேகமாகக் கேட்டான் அர்ஜுன்.

''ஆமாம் வந்து பத்து நிமிடங்கள் கூட ஆகியிருக்காது...''

''தனியாகவா வந்தாய்...?''

''இல்லை. டெலிபோன் பண்ணி ராம்சிங்கை வரவழைத்துக் கூட வந்தேன்...''

சடாரென்று எதுவோ இடற அவன் முகத்தைக் கூர்மையாகப் பார்த்தான் அர்ஜுன்.



அவன் யூனிபாரத்தைக் கழற்றி ஹாங்கரில் மாட்டித் தொங்க விட்டு, கோடு போட்ட டெரிகாட் பைஜாமா ஜிப்பாவிற்கு மாறுகிறவரை பொறுமையாக இருந்த கிருத்திகா அவன் வந்து தன்னை நெருங்கிக் கட்டிலில் உட்கார்ந்து கையைப் பற்றி லேசாக முத்தமிட்டு ''ம்... சொல்லு...'' என்றதும் உடைந்துபோனாள். கரகரவென்று கண்ணீர் கோடிட அவனை அணைத்து மார்பில் முகத்தைப் பதித்துக் கேவ, பதறிப் போனான் அர்ஜுன்.

''என்ன ஆயிற்று கீர்த்தி...? ஏன் இப்படி அழுகிறாய்...? என்ன நடந்தது சொல்லும்மா...'' என்று அவளது முகத்தை நிமிர்த்திக் கண்களைத் துடைத்து, தலையை வருடி இதமாகக் கேட்டதும் — அந்த அன்பில் நனைந்து இன்னமும் அதிகம் அழுகை வர — ''அர்ஜுன்... அர்ஜுன்...'' என்று வார்த்தைகள் வராமல் தடுமாறினாள்.

''ஓ... நோ...'' என்று தாங்க முடியாதவனாக அவளைத் தன்னோடு சேர்த்து இறுக அணைத்து மிக வேகமாக முன் உச்சியிலும் முகத்திலும் முத்தமிட்டான்.

''நீ இப்படி அழுவது என்னை எவ்வளவு சங்கடப்படுத்துகிறது தெரியுமா கீர்த்தி...? மனதுக்குள் சொல்லமுடியாத வேதனை ஏற்படுகிறது. 'குழந்தை மாதிரி இருக்கிற உனக்கு எந்தக் கஷ்டமும் வரக் கூடாது. வருகிற கஷ்டமெல்லாம் என்னிடம் வரட்டும். சந்தோஷத்தை மட்டும் அவளுக்கு அனுப்பு' என்று நான் தினமும் உள்ளுக்குள் வேண்டிக் கொள்வேன். அப்படி இருக்கிற என்னிடம் விஷயத்தைச் சொல்லாமல் அழுதால் என்னால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும் கீர்த்தி...?''

மிக உருக்கமாக வார்த்தைகள் வரச் சடாரென்று நிமிர்ந்து கண்களைத் துடைத்துக் கொண்டாள் கிருத்திகா. ''ஐயாம் ஸாரி அர்ஜுன்...'' என்று புன் சிரிப்பாகச் சிரிக்க முயற்சி பண்ணித் தோற்றுப் போனவளாக மெதுவாக அன்று மாலை விஷ்ணு பிரசாத் வீட்டுக்குப் போனதிலிருந்து சற்று முன் அம்பாஸிடர் கார் துரத்திக் கொண்டு வந்தது வரை சொல்லி முடித்தாள்.

அவன் டெலிபோனில் மிரட்டிய போது அதை நான் இவ்வளவு பெரிய விஷயமாக எடுத்துக் கொள்ளவில்லை... ஆனால்..... ஆனால்...''

மேலே பேச முடியாமல் உதட்டைக் கடித்து அழுகையை அடக்க முயல, அவன் இன்னமும் அவளை நெருங்கித் தோளில் கைபோட்டுத்தன்னோடு சேர்த்துக் கொண்டு சொன்னான்:

''கீர்த்தி, முதல் முதலாக ரயிலில் நீ அறிமுகமானதும் உங்கம்மாவை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறது என்று சொன்னேனே, ஞாபகமிருக்கிறதா...? இந்த விஷ்ணு பிரசாத்துடன் சேர்த்துத்தான் பார்த்திருக்கிறேன். விஷ்ணுபிரசாத் கண்ணாடி போட்டுக்கொண்டு உயரமாய் நல்ல நிறமாய் இருக்கிறானா...?''

''அப்படித்தான் இருக்கிறான்...''

''நான் நினைக்கிற மனிதன் தான் இன்று நீ பார்த்த விஷ்ணுபிரஸாத் என்றால் நீ ரொம்ப ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் டியர்... தனியாக மட்டுமில்லை. வெளியிலேயே போகாமல் இருப்பது தான் நல்லது. அரசியல் வட்டத்தில் அதிக செல்வாக்குள்ளவன் அவன். பேருக்குத் தான் அவன் செய்வது பிஸினஸ். ஆனால் அவனது நிஜத் தொழில் ஸ்மகிளிங்தான். நிறைய அடியாட்கள் இருக்கிறார்கள். கொலை பண்ணக் கூட அஞ்சாதவர்கள்...''

''ஓ... காட்! இப்படிப் பட்டவனுடன் அம்மா தொடர்பு வைத்துக் கொண்டிருப்பது... யுநோ... அந்தப் புகைப்படங்களைப் பார்த்த போது நிஜமாகவே நான் எரிந்து போனேன் அர்ஜுன். அம்மா மீது நான் வைத்திருந்த மதிப்பு, மரியாதை, அன்பு, ஆசை, எல்லாம் தூள் தூளாகச் சிதறிப் போய் விட்டது அர்ஜுன். இப்படிப்பட்டவன் என்பதைத் தெரிந்து கொண்டிருந்தும் என்னையும் போய்ப் பார்க்கச் சொல்லி வற்புறுத்தி, ஒரு கடிதம் விடாமல் எழுதி... சீ! அம்மாதானா அவள்...? ஐ ஹேட் ஹர். அவளை நான் நெஞ்சார வெறுக்கிறேன் அர்ஜுன். அம்மா என்று சொல்லிக் கொள்ள, வெட்கமும் வேதனையும் படுகிறேன். திரும்பி அவளைப் பார்க்கக் கூட நான் விரும்பவில்லை. அவள் அனுப்புகிற பணத்தில் படிக்க, சாப்பிட, உடை உடுக்க.. ஓ... அத்தனையும் கேவலமாக வந்த பணம்... விஷ்ணுபிரஸாத் மாதிரி இருப்பவர்களால் கொடுக்கப்பட்ட பணம்... ஐ ஹேட் ஹெர், ஐ ஹேட் ஹெர்...''

உதடுகள் நடுங்கச் சொல்லி முடித்து அவமானம், ஏமாற்றம், கோபம், வெறுப்பு அத்தனை உணர்ச்சிகளும் ஒன்றாய்த் தாக்குவதைச் சமாளிக்க முடியாமல் மீண்டும் அழ ஆரம்பித்ததும்.

அர்ஜுன் இப்போது அவளை அழவிட்டான். அழுது ஓயட்டுமென்று சிறிதுநேரம் பேசாமல் இருந்தால் மனம் இலேசாகும்.

''நீ இவ்வளவு சீக்கிரம் உணர்ச்சிவசப்பட்டு நிதானத்தைத் தவற விடுவாய் என்று நான் நினைக்கவே இல்லை, கிருத்திகா. அவசரப்பட்டு அம்மாவைப் பற்றி அப்படி ஒரு முடிவிற்கு வருவது தவறு என்று நினைக்கிறேன். மே பீ பிகாஸ் ஐ ஹேவ் எ ஸாஃப்ட் கார்னர் ஃபார் விமன். பட் அம்மா நிலைமையில் இன்று நீ யோசிக்கணும். உன்னையே இவ்வளவு மிரட்டுகிற விஷ்ணுபிரசாத் உன் அம்மாவை எவ்வளவு மிரட்டியிருப்பான் என்பதை நினைத்துப்பார். இந்த வயதிலும் உன் அம்மா அழகாக இருக்கிறாள். பெண்களுக்கு அழகு சந்தோஷத்தைத் தருவதை விட ஆபத்தைத் தான் அதிகம் தருகிறது. காவிய காலத்திலிருந்தே அதிக அழகான பெண்கள் தான் அதிகம் கஷ்டமும் பட்டிருக்கிறார்கள். பாவம் உன் அம்மா... சீதை ராவணனிடம் மாட்டிக் கொண்ட மாதிரி இந்த விஷ்ணு பிரசாத் இடம் மாட்டிக் கொண்டாளோ என்னவோ? சீதைக்கு ராமன் இருந்தார். உனக்கு நான் இருக்கிறேன். ஓடிவந்து என்னிடம் சொல்லி அடைக்கலமாக ஒட்டிக் கொள்கிறாய். உங்க அம்மாவுக்கு அப்போது யார் இருந்தார்கள்? ஆண் துணையற்று வெறும்

HEARTY DEEPAVALI GREETINGS TO ALL OUR PATRONS AND WELL-WISHERS

ATTENTION DEPOSITORS



BANK

CASH CERTIFICATES
STAND GUARANTEE FOR
YOUR DEPOSITS WITH

18%

INTEREST & A SILVER GIFT



AIYSWARYA DEPOSIT

MAKES YOUR DEPOSIT DOUBLE WITH A FREE TRIP TO SINGAPORE

INDU FINANCIERS • MADRAS-600017 •

FIXED DEPOSIT

18%

INTEREST WITH A FREE HOUSE SITE*

* D.T.P. Approval No. 83-251-198

indu FINANCIERS

155, NORTH USMAN ROAD, T. NAGAR, MADRAS-600 017, PHONE: 445529

155, NORTH USMAN ROAD, T. NAGAR,
MADRAS-600 017. PHONE: 445529.

32, RANGANATHAN STREET, T. NAGAR,
MADRAS-600 017. PHONE: 447888.

220, N.S.C BOSE ROAD, GEORGE TOWN,
MADRAS – 600 001. PHONE: 25901.

24, NORTH MADA STREET, POONAMALLEE,
MADRAS – 600 056. PHONE: 69566.

194, VAKIL NEW STREET,
MADURAI – 625 001. PHONE: 34940 & 31351.

106, BIG STREET,
THIRUVANNAMALAI – 606601. PHONE: 681.

22, VANIGAR STREET,
KANCHEEPURAM – 631 501. PHONE: 3048.

41, THOPPA MUDALI STREET,
BANGALORE – 560 001. PHONE: 579585.

TAS

தூரத்து உறவினரான சமையற்காரப் பெண்மணியுடன் வாழ நேர்ந்த போது வாழ்வில் ஈடுபட்டுச் சம்பாதிக்க நேர்கிற ஒரு அழகான பெண்ணுக்கு எத்தனை கஷ்டங்கள் வராது...? எவ்வளவு சோதனைகள் ஏற்படாது...? அத்தனை கஷ்டங்களையும் சோதனைகளையும் கூட இருந்துதாங்க தைரியம் சொல்ல அவருக்கு முன்னால் நின்று காப்பாற்ற எந்த ஆணின் துணை இருந்தது...? சொல்லு கீர்த்தி...? இதையெல்லாம் நினைத்துப் பார்க்காமல் அம்மாவின் மீது மட்டும் தவறு சொல்லி அவள் முகத்தைப் பார்க்கவே பிடிக்கவில்லை என்று பகிஷ்கரிப்பது எப்படி சரியாகும்...? ம்...? அந்த நிலைமையில் விஷ்ணுபிரசாத்துக்குப் பணிவதைத் தவிர வேறு எந்த வழி அவருக்கு இருந்திருக்க முடியும்...?''

ஒரு விநாடி அவன் சொன்னதைக்கேட்டு அமைதியாக இருந்த கிருத்திகா பின், ''இல்லை அர்ஜுன்''என்று தலையாட்டினாள். ''நீங்கள் சொல்வதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. இப்படிப்பட்ட அயோக்கியனுக்குப் பணிந்து போவதை விட அவள் தற்கொலை பண்ணிக் கொண்டிருக்கலாம்...''

''ஆஹா...'' என்று வருத்தமாகவும், கேலியாகவும் சிரித்தான் அர்ஜுன். ''ஒரு அம்மா ஸ்தானத்தில் இருந்தால் தான் அவளது உணர்வுகள் உனக்குப் புரியும் கிருத்திகா. உன்னை மாதிரி ஒரு அழகான சின்னப் பெண்ணை நிராதரவாக விட்டு விட்டுத் தற்கொலை பண்ணிக் கொள்ள முன்வராத அம்மாவின் பொறுப்பை நினைத்து நான் பெருமைப்படுகிறேன். வாய்க்குச் சுலபமாகப் பேசி விடலாம் கீர்த்தி. பிரச்னையை விட்டு விலகி நின்று எதையும் சொல்லி விடலாம். ஆனால் அதற்குள் நின்று பார்க்கிறவர்களுக்குத் தான் அதன் தவிப்பும், அனலும் புரியும்...''

''அப்படியானால் அம்மா செய்ததில் எந்தத் தப்பும் இல்லை என்று சொல்கிறீர்களா...?'' — கிருத்திகா, ஆத்திரமும், ஆக்ரோஷமுமாகக் கேட்க, அப்போதும் அவன் நிதானமாகவே பதில் சொன்னான். ''நோ, நான் அப்படிச் சொல்ல வரவில்லை கிருத்திகா. இதற்காக அம்மாவைப் பார்க்கக் கூடப் பிடிக்கவில்லை என்று வெறுக்க வேண்டாமென்றுதான் சொல்கிறேன். விஷ்ணு பிரசாத் யார், எப்படிப் பட்டவன் என்பது தெரிந்த பின்னும் இப்படிப் பேசலாமா?''

''சரி, இந்த விஷ்ணுபிரசாத்தான் ராவணன். அம்மா சீதையாக அவனிடம் மாட்டிக் கொண்டு விட்டாள். மீட்க எந்த ராமனும் அவளுக்கில்லை. ஆனால் விஷ்ணு பிரசாத் சொன்ன மீதிப் பேர்கள், பம்பாயில், கல்கத்தாவில் —''

''ரப்பிஷ்!'' என்று குறுக்கிட்டு அவளை நிறுத்தினான் அர்ஜுன்.

''யாரைப் பற்றியும் உண்மை தெரியாமல் கண்டபடி பேசக் கூடாது கீர்த்தி. விஷ்ணு பிரசாத் சொன்னதை வைத்து உன் அம்மாவை நீ குற்றம் சாட்டுவது எனக்குப் பிடிக்கவில்லை. அவன் சொன்னது பொய்யாக இருக்கலாம். வேண்டுமென்றே பம்பாயிலும், கல்கத்தாவிலும் அவளுக்கு யார், யாரோ இருப்பதாகச் சொல்லி உன்னை அடையப் பார்த்திருக்கலாம். அப்படி உன் அம்மாவுக்கு ஊருக்கு ஒருவராக இருக்கிற பட்சத்தில் சென்னையிலும் இருக்க வேண்டுமே... அதுபோல் பழகினவர்களால் தனித்திருக்க முடியாதே... அப்படி யாரையும் நீ அம்மாவோடு மதுரையில் பார்த்திருக்கிறாயா...?''

அவனது கேள்விக்கு இல்லை என்று அவள் உறுதியாகத் தலையசைக்க, லேசான மனத்துடன் சிரித்துக் கொண்டே,

''அது இல்லை என்றால் மற்ற ஊர்களிலும் அவளுக்கு யாருமில்லை என்பதுதான் நிஜம். விஷ்ணு பிரசாத்தின் பேச்சை வைத்து அம்மாவின் மீது நீ வெறுப்பை ஏற்படுத்திக் கொள்ளாதே கீர்த்தி. ஏனென்றால் நீ சொன்ன விஷயங்களையெல்லாம் கேட்ட பின்பு நானும் ஊரில் இல்லாத நேரத்தில் உன்னை இங்கே விட்டுப் போவதை விட மதுரைக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டுவிட்டு வரலாமென்றிருக்கிறேன். ஏனென்றால் இந்த இடத்தை விட அது உனக்குப் பாதுகாப்பாக இருக்கும்...''

அந்த வார்த்தைகளைக் கேட்டு ஒருவிநாடி ஒன்றும் புரியாதவளாக அவனைப் பார்த்தாள் கிருத்திகா. (தொடரும்)

பேராசிரியர் கால்பிரெயித், மத்தியானம் சிறிது உறங்க எண்ணி, தமது காரியதரிசியான பெண்ணிடம், ''யாரும் என்னைத் தொந்தரவு செய்யாமல் பார்த்துக் கொள்'' என்று சொல்லிச் சென்றார். சிறிது நேரத்தில் ஒரு போன் அழைப்பு வந்தது. காரியதரிசி புரொபஸர் உறங்குவதாகக் கூறினாள். போனில் குரல், ''நான் அமெரிக்க ஜனாதிபதி ஜான்சன் பேசுகிறேன்'' என்று அறிவித்தது. அப்பெண்ணோ, ''நான் புரொபஸர் கால்பிரெயித்துக்குத்தான் காரியதரிசி. ஜனாதிபதி ஜான்ஸனுக்கல்ல'' என்று கூறிப் போனை வைத்து விட்டாள். மறுநாள் புரொபஸருக்கு மறுபடியும் போன் செய்த ஜனாதிபதி, காரியதரிசியின் கடமையுணர்ச்சியைப் பாராட்டினார்.

ஆதாரம்: விஸ்டம்.

தகவல்: டி. விஜயலட்சுமி.





ஜெர்மன் அரசு அழைப்பில் சென்ற எட்டு பிரதிநிதிகள் குழு



ஏழு நாடுகளில் எட்டு வாரங்கள்

இந்தியப் பத்திரிகையாளர்கள், பொது வாழ்வின் முக்கிய பிரமுகர்கள், மக்கள் எல்லார் மனத்திலும் அடுத்த சில நாட்களில் நாட்டில் ஏதோ சில முக்கியமான நிகழ்ச்சிகள் நடைபெற இருக்கின்றன என்னும் எண்ண ஓட்டம் இரண்டிருந்த ஒரு நள்ளிரவில் நான் பம்பாயிலிருந்து மேற்கு ஜெர்மனிக்குப் புறப்பட்டேன்.


ஜூன் 2-ந் தேதியன்று டெலிவிஷனில் மறுநாள் பஞ்சாபில் மேற்கொள்ள இருந்த இராணுவ நடவடிக்கைக்கு முன்னோடியாகப் பிரதமர் ஆற்றிய பூடகமான உரையைக் கேட்டுவிட்டு ஒபராய் ஓட்டலிலிருந்து நான் இரவு பதினொரு மணிக்கு பம்பாய் சாகர் விமான நிலையத்துக்குப் புறப்பட்ட போது என்னுள்ளும் அப்படி ஒரு எண்ண ஓட்டமே நிரம்பியிருந்தது.

மேற்கு ஜெர்மன் தூதரகம் தங்கள் நாட்டையும் அங்கு 'எனர்ஜி' சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி, புதுமைகள், சேமிப்பு ஆகியவற்றையும் சுற்றிப் பார்ப்பதற்கும் அறிவதற்கும் எனக்கு அனுப்பியிருந்த அழைப்பில் என்னைத் தவிர இன்னும் இரண்டு இந்தியப் பத்திரிகையாளர்களும், மூன்று சீனர்களும், ஒரு நேபாளப் பத்திரிகையாளரும், ஒரு தென் கொரியப் பத்திரிகையாளரும் ஆக எட்டுப் பேர் அங்கு ஒரு குழுவாகச் சுற்றுப் பயணம் செய்யப்போகிறோம் என்பது அறிவிக்கப்பட்டிருந்தது.

பயணத் தொடர்

இரண்டாந்தேதி பம்பாய் சாகர் விமான நிலையத்தில் நுழைந்த நான் சில கஜ தூரமே இருந்த அதன் சர்வதேச லவுஞ்சிற்குள் மறுநாள் மூன்றாந்தேதிதான் போக முடிந்தது. இரயில்கள், விமானங்களின் நேரக் கணக்குப்படி இரவு பன்னிரண்டு அடித்து ஒரு செகண்ட் ஆனதும் தான் அடுத்த நாள் வந்து விடுகிறதே?

விமான நிலைய நாணயமாற்றுப் பகுதியில் (ஸ்டேட் பாங்க் எக்ஸ்சேஞ்ச் கவுண்ட்டர்) நீள நீளமான கியூ வரிசைகள் நின்றன. உள்ளே நாணய மாற்றுப் பதிவு இயந்திரங்களில் கோளாறாம். அதனால் ஒரே தாமதம். பல விமானங்களில் ஸ்டுவர்ட்டுகள் வாக்கிடாக்கியுடன் நேரே கியூ வரிசைக்கே வந்து, ''இஃப் யூ மேக் எனி ஃபர்தர் டிலே... ஐ யாம் அஃப்ரைய்ட் டு ஸே— யூவில் லூஸ் த பிளேன்ட்'' என்றே எச்சரிக்க ஆரம்பித்து விட்டார்கள். பணம் மாற்றிக் கொள்ளக் காத்து நின்றவர்களும் இதற்கு ஒரு சிறிதும் சளைக்கவில்லை. ''தயவு செய்து இதை அந்தக் கவுண்ட்டருக்குள் போய் அங்கிருக்கும் ஸ்டேட் பாங்க் ஆட்களிடம் சொல்லுங்கள்'' — என்று பதிலுக்குச் சாடினார்கள். ''தாமதமும் நிச்சயமின்மையும் — எதிலும் நமது தேசிய குணங்கள்! தேசத்தை விட்டுப் புறப்படும் போது நமக்கு அவை மறந்து



○ மலைகளின் மடியில் உறங்கும் இந்நகரம் ரைன் நதிக்கரையில் உள்ளது


நா. பார்த்தசாரதி

விடக் கூடாது பாருங்கள்! அதற்காக ஸ்டேட் பாங்க் காரர்கள் அவற்றைக் கடைசி விநாடியில் நினைவூட்டி அனுப்புகிறார்கள் போலிருக்கிறது''— என்று பக்கத்தில் நின்றவரிடம் கூறினேன் நான்.

இப்படி விமான நிலையச் சடங்குகள் முடிந்து சர்வதேசப் புறப்பாட்டுக் கூடத்திற்குப் (டிபார்ச்சர் லவுன்ஜ்) போனால் அங்கே நண்பர் ராஜ்மோசன் காந்தி அமர்ந்திருந்தார். அவரும் அதே லுப்தான்ஸா விமானத்தில் பிராங்க்ஃபர்ட் வரை உடன் வருவதாக அறிந்து மகிழ்ச்சியாயிருந்தது. அவரருகில் தலையில் முண்டாசுக்கட்டு ஜிப்பா, நார்ப்பாய்ச்சிய வேஷ்டியோடு அமர்ந்திருந்த ஒரு முதியவரைப் பற்றி மிகவும் வியப்போடு ராஜ்மோகன் எனக்கு விவரித்தார்.

''இவர் பெண்ட்டா ரெட்டி! ஆந்திர விவசாயி. தமது கிராமத்தை விட்டே அதிகம் வெளியேறி அறியாத இவர் முதல் தடவையாக பிராங்க்ஃபர்ட் சென்று அங்கு இறங்கி விமானம் மாறி அமெரிக்காவிலுள்ள தன் மகனைப் பார்க்கப் போக வேண்டும்! தெலுங்கைத் தவிர வேறெந்த மொழியும் தெரியாதாம். இந்தப் பயணத்தின் முதற் சில மணி நேரங்கள் உங்களிடமோ, என்னிடமோ உண்டாக்கியிருப்பதைப் போன்ற எந்தவிதமான டென்ஷனையும் இவரிடம் உண்டாக்கவில்லை பாருங்கள்! எத்தனை நம்பிக்கை, எத்தனை பதற்றமற்ற நிலை! விடிந்து ஃபிராங்க்ஃபர்ட்டில் போய் இறங்கிய பின்பும் கூட பெண்ட்டா ரெட்டியை விமானம் மாற்றி அனுப்ப டிரான்ஸிட் பயணிகளுக்கான வழியில் அழைத்துச்சென்று கொண்டிருந்தார் ராஜ்மோகன். இவர் மகாத்மா காந்தி, ராஜாஜி ஆகியோருக்குப் பொருத்தமான பேரப் பிள்ளைதான் என்று திருப்தியாயிருந்தது. பெண்ட்டா ரெட்டிக்கு உதவி செய்து அவரை அமெரிக்காவுக்கு வழியனுப்பக் காத்திருந்த சாரணத்தால் பிராங்க்ஃபர்ட்டையும் மேற்கு ஜெர்மனியின் 'பான்' தலைநகரையும் இணைக்கும் அதிவேக

○ ரைன் நதிக்கரை பாலம் - பின்னணியில் மாதா கோவில்





ஒருவர் சக்ரவர்த்தி அக்பரைப் பார்த்து ''நீங்கள் இந்திரனுக்கும் மேலானவர்'' என்றார். அக்பர் அவையோரைப் பார்த்து, ''இது எப்படி? விளக்க முடியுமா?''என்றுகேட்டார். எல்லோரும் விழிக்க பீர்பால் எழுந்தார். கூறினார்.

''மன்னரே தாங்கள் எவரையாவது தண்டிக்க விரும்பினால் இந்த நாட்டை விட்டே துரத்திவிட இயலும். ஏனென்றால் தங்களது ஆட்சி ஒரு எல்லைக்கு உட்பட்டது. ஆனால் இந்திரனால் எவரையும் அவனது ராஜ்ஜியத்தை விட்டு வெளியே தள்ள இயலாது. அவனது ஆட்சியானது இப்பிரபஞ்ச முழுவதும் பரவியுள்ளது. இந்திரனால் செய்ய முடியாததை உங்களால் செய்ய முடியுமெனில் நீங்கள் அவனைவிடப் பெரியவர்தானே ''

நன்றி: பீர்பால் கதைகள்.

தகவல்; எஸ். முகம்மது யூசுப்.

ரயிலான 'ஏர்ப்போர்ட் எக்ஸ்பிரஸை' ராஜ்மோகன் கோட்டை விட நேர்ந்ததென பின்னால் அவரிடமே அறிய நேர்ந்தது.

பம்பாயில் லூப்தான்ஸா விமானத்துக்குள் நுழைந்த சிறிது நேரத்திலேயே விமானத்தில் நாங்கள் அமர்ந்திருந்த உயர் வகுப்புப் பகுதியில் டெல்லி பம்பாய்ப் பத்திரிகையாளர்களை நிறையப் பார்க்க முடிந்தது. இவர்களில் சிலர் ஹனோவர் தொழிற்சந்தையைப் பார்க்கப்போய்க் கொண்டிருந்தார்கள்.

விமானம் மேலெழும்பிப் பறக்க ஆரம்பித்த சிறிது நேரத்திற்கெல்லாம் பானங்கள் வழங்கத் தொடங்கியவுடன் பத்திரிகையாளர்களின் பேச்சு இதேபோல ஓர் இரவு விமானத்தில் மகாராஷ்டிரத் துணை முதல்வர் ராமராவ் அடிக் அடித்த கூத்துக்களைப் பற்றித் திரும்பியது. ஒரே சிரிப்பு மயம் தான். உணவுக்குப் பின் விமானத்தில் ஆங்கில ஸப் — டைட்டில்களுடன் இரண்டு ஜெர்மானியத் திரைப்படங்கள் காட்டப்பட்டன. லூப்தான்ஸா விமானங்களில் சிறப்பம்சங்களைப் பற்றி இங்கே கொஞ்சம் விவரித்துச் சொல்ல வேண்டும்.

விமானத்தில் பயணி நுழைகிற இடத்திலேயே ஒரு சிறிய டிராலியில் ஏழெட்டு வகையான செய்தித் தாள்கள். இதழ்களை வைத்துக் கொண்டு ஒவ்வொரு பயணிக்கும் விரும்புகிற செய்தித் தாளை விமானப் பணிப் பெண்ணே எடுத்துத் தருகிறாள். இரவு தொடங்கி மறுநாள் காலை 'பிரேக்ஃபாஸ்ட்' வரை நீளுகிற எல்லாப் பயணங்களிலும் ஒரு சிறிய டியூபில் பற்பசை — புது டூத் பிரஷ் உள்பட அழகிய பாலிதின் உறையில் போட்டு ஒவ்வொரு பயணிக்கும் தந்து விடுகிறார்கள். விமானத்தில் தங்கியிருக்க நேரும் எட்டு ஒன்பது மணி நேரம் ஷூவுடன் அமர்ந்திராமல் கழற்றிவிட்டு அணிய மெத்தென்ற கனமான புதிய காலுறைகள் இரண்டை நமக்கே அன்பளிப்பாக வழங்கி விடுகிறார்கள். விமானம் பல்கேரியாவின் தலைநகரமான ஸோபியாவுக்கு மேலே பறந்து கொண்டிருப்பதை அறிவித்துவிட்டுக் குட்மார்னிங் கூறி உள்ளே விளக்குகளைப் போட்ட போது தான் 'ஏ. சி. அறையில் இல்லை — பிராங்க்ஃபர்ட்டுக்குப் பறந்து கொண்டிருக்கிறோம்' என்பதே நினைவுக்கு வந்தது. வெந்நீரிலும், ஓடிகொலோனிலும் ஊறிய இதமான வெப்பத்துடன் கூடிய சிறுசிறு நாப்கின்கள் முகத்தைத் துடைத்துக் கொள்வதற்காக வழங்கப்பட்டன. காலைச் சிற்றுண்டி வந்தது. அப்புறம் நேரம் ஓடத் தொடங்கி விட்டது. பொழுதும் புலர்ந்தது. ஒன்பது மணி நேரம் கழிந்ததே தெரியவில்லை.

கீழே பசுமையும் அழகும், வார்த்து வைத்தாற் போன்ற சுத்தமான ஆட்டோடான் சாலைகளும், கட்டிடங்களும் தெரிய ஆரம்பித்தன. விமானம் பிராங்க்பர்ட் (மெயின்) நிலையத்தில் இறங்கப் போவதாக அறிவிப்பு ஒலித்தது.

ஓடு பாதையில் ஓடி விமானம் நின்றதும் படிகளைக் கொண்டு வந்து பொருத்துவது போன்ற தாமதங்கள் எதுவுமின்றி அப்படியே நடந்து அரைவல் லவுஞ்சிற்குள் போக ஏற்றபடி இணைக்கும் வசதி பிராங்க்ஃபர்ட் நிலையத்தில் இருக்கிறது. பம்பாயிலும் இந்த வசதி இப்போது உள்ளது.

ஐரோப்பாவின் மிகச் சிறந்த இரண்டு மூன்று விமான நிலையங்களில் பிராங்க்ஃபர்ட் மெயின் முதன்மையானது. பிரம்மாண்டமானது. நவீனமான முறையில் வடிவமைத்துக் கட்டப்பட்டிருக்கிறது. லூப்தான்ஸாவின் கேந்திர நகரமான பிராங்க்ஃபர்ட் விமான நிலையத்திலிருந்து தினசரி 600 ஃப்ளைட்டுகள் பல்வேறு திசைகளில் செல்கின்றன. ஆண்டு ஒன்றிற்கு 17.5 மில்லியன் பயணிகள் ஃபிராங்க்பர்ட் விமான நிலையத்தைப் பயன்படுத்தி வரப் போக இருக்கிறார்கள். பிராங்க்ஃபர்ட் விமானநிலையத்தை முழுமையாகச் சுற்றிப் பார்த்தாலே ஐந்தாறு மணிநேரம் சுகமாகப் பொழுது போவதே தெரியாமல் கழிக்கலாம். நூறு கடைகளும், ஒரு முழு டிபார்ட்மெண்டல் ஸ்டோரும், இருபது ரெஸ்டாரண்டுகளும், ஏராளமான ட்யூட்டி ஃப்ரீ ஷாப்புகளும் ஒரு சினிமா தியேட்டரும், பாங்குகளும், போஸ்டாபீசும், மருந்துக் கடையும், சலூனும், லாண்டிரியும் செருப்பு, பூட்டு சாவிக் கடைகளும் ஆஸ்பத்திரியும், வழிபடும் இடமும் கூட இந்தப் பல மாடி விமான நிலையத்தில் இருக்கின்றன. ஏ.பி.சி. என்ற மூன்று பிரிவுகளிலுமாகச் சேர்ந்து

மொத்தம் 60 கேட்டுகள் இங்கு உள்ளன. விமான நிலையத்தின் கீழே பாதாளரயில் நிலையம் உள்ளது. அங்கிருந்து ஜெர்மனியின் எந்த இரயில் நிலையத்திலும் போய் இறங்க இரயில் தொடர்பு உண்டு. பிராங்க்ஃபர்ட் விமான நிலைய 'அரைவல் ஹவுஞ்ஜ்' —இல் இருந்து எஸ்கலேட்டரில் கீழிறங்கினல் 'பான்ஹாஃப் ரயில்வேஸ்டேஷனை அரைசெகண்டில் அடைந்து விடலாம்.

இந்த இரயில் நிலையத்திலிருந்து லூப்தான்ஸா விமானக் கம்பெனியே தன் பயணிகளின் வசதிக்காக 'ஏர்ப்போர்ட் எக்ஸ்பிரஸ்' என்கிற அதிவேக சொகுசு ரயில் ஒன்றை விடுகிறது.

பிராங்க்ஃபர்ட்டிலிருந்து தலைநகர் பான் (Bonn) கொலோன் (Cologne) டஸ்ஸில்டார்ஃப் (Duss::ldorf) ஆகிய நகரங்களுக்கும், மேற்படி நகரங்களிலிருந்து பிராங்க்ஃபர்ட்டுக்குமாக இந்த இரயில் தினப்படி நான்குமுறை போய் வருகிறது. தரையில் ஓடும் ஒரு விமானத்தைப் போல் வேகமும், சுத்தமும், சுகமும் நிறைந்த இந்த இரயிலில் தான் நாங்கள் மேற்குஜெர்மனியின் தலைநகரான பானுக்குப் போக வேண்டும். இரயிலின் உள்ளே காலைச் செய்தித்தாள்கள், பானங்கள் உணவுவகை சகல வழங்குகிறார்கள். அதிகம் வெளியே பார்ப்பதற்கு ஏற்றபடி இருபுறமும் கண்ணுடி விண்ட் ஸ்கிரீன் பொருத்தப்பட்டிருக்கிறது. இரயில் நகரும் அதிர்ச்சியோ, ஓசையோ அறவே இல்லை. வேகத்திற்கான தலைசுற்றல், மயக்கம், வலி எதுவும் தெரிவதில்லை. வானில் பறக்கும் லூப்தான்ஸாவை விட நாலுக்கான மற்றொரு தரை மீது ஓடும் லூப்தான்ஸாவில் விரைவது போலவே உணர்கிறோம் நாம்.

புகழ் பெற்ற ரைன் நதியும், திராட்சைத் தோட்டங்களும் அமைதியான அதிக ஆளரவமற்ற அழகு ஊர்களும், பசுமை மலைகளும், தொழிற்சாலைகளும் இருபுறமும் எழுதி வைத்தாற் போன்ற காட்சிகளாக ஓடிமறைகின்றன. பழங்காலக் கோட்டைகள் கட்டிடங்கள் இடையிடையே பசிய மலை முகடுகளில் தென்படுகின்றன. பென்ஸ், வோக்ஸ்வாகன்கள் பார்க் செய்த பளிங்கு போன்ற தெருக்களில் சந்தடியோ ஆளரவமோ இல்லை. ஊர்களும், தெருக்களும், வீடுகளும், பசுமையும், எழுதி வைத்த காட்சிகள் போல் அமைதியாக விளங்குகின்றன. இரயிலுக்குள் பரிமாறும் உணவு, பானங்கள் காபி தேநீரில் ஒரு சொட்டுக் கூடக் கீழே சிந்திட முடியாதபடி இரயில் அத்தனை சொகுசாக — ஆனால் அதேசமயம் படுவேகமாக ஓடுகிறது. பிராங்க்ஃபர்ட்டுக்கும் பானுக்கும் இடையே உள்ள நெடுந்தொலைவை ஒன்றரை மணி நேரத்தில் கடந்து 'லூப்தான்ஸா ஏர்ப்போர்ட் எக்ஸ்பிரஸ்' மேற்கு ஜெர்மனியின் தலைநகரமான பான் நகர் நிலையத்தில் நிற்கிறது. காலை 10.43—க்கு அங்கே போகிற இரயில் ஒரு நிமிஷம் நின்று விட்டு 10.44—க்குப் புறப்பட்டுவிடும் என்பதால், நாங்கள் தயாராகப் பெட்டிகளுடன் கதவருகே வந்து நின்று கொண்டோம். ரயில் நிலைய பிளாட்பாரங்களைப் பார்த்த எங்களுக்கு ஒரே அதிர்ச்சி. அத்தனை பிளாட்பாரங்களிலும் சேர்த்து அப்போதிருந்த மொத்த மக்களின் எண்ணிக்கை மூன்றே மூன்றுதான். அன்று ஞாயிற்றுக்கிழமை. தெருக்கள், சாலைகள், நகர்ப்புறங்கள் எங்கும் ஆளரவமே இல்லை. தலைநகரின் இரயில் நிலையமோ சந்தடியின்றி பேச்சுக் குரல்கள், கூப்பாடுகள் இன்றி மௌன ஓவியம் போல இருந்தது. 'வீக் எண்ட்' என்றால் அப்படித்தானும்!

கீழே இறங்கினதும் பிளாட்பாரத்தில் காத்திருந்த மூன்று பேரும் எங்களை வரவேற்று அழைத்துச் செல்ல வந்திருந்த மேற்கு ஜெர்மன் அரசாங்கப் பிரதிநிதிகள்.

இரயில் நிலையத்தின் மறுபுறம் பத்திருபது கெஜ தூரத்தில் இருந்த பிரிஸ்டல் ஹோட்டலில்தான் நாங்கள் தங்க ஏற்பாடாகி இருந்தது. சாமான்களைக் காரில் போட்டு அனுப்பிவிட்டு நாங்களும் வரவேற்க வந்திருந்த ஜெர்மன் அரசின் அங்கமான 'இண்டர் நேஷன்ஸ்' நிறுவனப் பிரதிநிதிகளும் நடந்தே ஹோட்டலுக்குச் சென்றோம்.

விடிந்து வெகு நேரமாகியும் 'பான்' நகரம் இன்னும் ஞாயிற்றுக்கிழமையின் இனிய சுகமான உறக்கத்தில் உறங்கிக் கொண்டு தான் இருந்தது.

(தொடரும்)

பாடலாசிரியர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்திடம் ஒரு நிருபர் அணுகி, ''உங்கள் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லுங்கள்'' என்றார்.

''என் பின்னலேயே வாருங்கள்'' என்று நிருபரை அழைத்துக் கொண்டு பட்டுக் கோட்டையார் ஒரு மைல் தூரம் நடந்தே சென்றார். பின்னர் ஓரிடத்தில் டவுன் பஸ்ஸில் ஏறினார். ஓரிடத்தில் இறங்கி டாக்ஸி பிடித்துக் கொண்டு ஸ்டுடியோவுக்குள் நுழைந்தார். ''என்ன உங்கள் வாழ்க்கை வரலாற்றைச் சொல்லவில்லையே?'' என நிருபர் கேட்டார்.

''இதுதான் என் சரித்திரம். முதலில் நடந்தே சென்றேன். அப்புறம் பஸ் ஏறக் காசு கிடைத்தது. இப்போது டாக்ஸியில் போக வசதி உள்ளது'' என்றார் பட்டுக்கோட்டையார்.

—எஸ். முகம்மது யூசுப்.





நான் விரும்பும் வேட்பாளர்

"ஆற்றங்குறைகளைக் கண்டு கொதித்தெழுந்து அவற்றை அரங்கிலேற்றித்தீர்ப்பு காண்பவராய் ஒரு தொகுதியின் உறுப்பினர் இருக்க வேண்டும். தொகுதியின் தேவையறிந்து அவற்றைச் செய்து தருகிறவராய் அவர் இருக்க வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக மக்களால் எளிதில் சந்திக்கப்படுபவராக, பரிந்து கொண்டு அவர்களுடன் பேசுபவராக இருக்க வேண்டும். இந்த எல்லாத் தகுதிகளும் உடைய வித்தியாசமான அரசியல்வாதி எங்களூர் எம். பி. பெயர்: டாக்டர் அ. கலாநிதி.'' (கல்கண்டு)

அன்று போலக் குள்ளமான உருவம். சிவந்த நிறம். முகத்தில் எப்போதும் குடிகொண்டிருக்கும் புன்சிரிப்பு. 'டிரிம்'மான டிரஸ். வார்த்தைக்கு, வார்த்தை கலைஞரைப் பற்றியும், பேராசிரியரைப் பற்றியும் பேச்சு. தமிழக முன்னேற்றத்துக்கான சிந்தனை. இது தான் எங்கள் டாக்டர் அ. கலாநிதி. பகட்டாகப் பளபளக்கும் இன்றைய அரசியல் உலகில் அமைதியாக, இப்படி ஓர் அரசியல்வாதி இருக்க முடியுமா? என்று வியக்கும் அளவுக்கு ஒரு நல்ல தேர்ந்த, திறமை வாய்ந்த அரசியல்வாதியாகத் திகழும் டாக்டர் கலாநிதிதான் நான் விரும்பும் வேட்பாளர்.

புரசைவாக்கத்தில் தனது டாக்டர் தொழிலை நடத்தும் இவரை மிக எளிதில் சந்திக்கலாம். நோயாளிகள் கூட்டம் இவரைச் சுற்றி நூற்றுக்கணக்கில் இருப்பார்கள். இருந்தாலும் அவரைச் சந்திப்பதில் சிரமம் இல்லை. தனது தொகுதி மக்களின் குறைகளைக் கேட்டு அவர்களுக்கு ஆவன செய்திட அலுவலகம் ஒன்றைத் தனது கிளினிக்கின் மாடியிலேயே வைத்திருக்கிறார்.

உங்களது குறைகளை நீங்கள் யாராக இருந்தாலும் நேரில் அலுவலகத்தில் சென்று முறையிடலாம். உங்கள் குறைகளை அவை நியாயமானதாக இருந்தால், கட்சிக் கண்ணோட்டம் பாராது அதனை நிச்சயமாக உங்களுக்குத் தீர்த்து வைப்பார். அநியாயமாக வேலையில் இருந்து எடுக்கப்பட்டவர்களையும், டிரான்ஸ்பர்கள் செய்யப்பட்டவர்கள், பதவி இறக்கம் செய்யப்பட்டவர்கள், மற்றும் விடுதலைப் போராட்ட வீரர்களில் ஓய்வு ஊதியம் முறைப்படி கிடைக்காமல் போனவர்கள் இப்படிப் பல தரப்பட்ட மக்களுக்கு இவர் ஆற்றியுள்ள தொண்டுகள் ஏராளம்.

இவரது கிளினிக்கில் இவர் மருத்துவக் கட்டணமாக மிகக் குறைந்த தொகையைத் தான் வாங்குகிறார். முப்பது, நாற்பதுஎன்று கட்டணம் வாங்கும் டாக்டர்களுக்கு மத்தியில் இவர் வித்தியாசமானவர் தானே! எங்கள் குடும்பம் கடந்த இருபது வருடங்களாக இவரிடம் தான் டிரீட்மெண்ட். நான் ஆரம்பத்தில் எப்படிப் பார்த்தேனோ அதே மாதிரித்தான் இப்போதும் இருக்கிறார். நடுவில் அரசியலில் புகுந்து எம். பி. ஆகிவிட்டாலும் பந்தா சமாசாரமெல்லாம் இவரிடம் கொஞ்சம் கூடக் கிடையாது.

சரி, இவர் என்னதான் அப்படி மத்திய சென்னைத் தொகுதிக்குச் செய்திருக்கிறார்?

எனக்குத் தெரிந்தவரை ஒரு நீண்ட பட்டியலே போடலாம். அவைகளில் சில...

சென்னையில் துரித ரயில் பாதை, அண்ணா நகரில் ரயில்வே புக்கிங் ஆபீஸ், தமிழில் ரிசர்வேஷன் பாரம்,டிரான்ஸ்பார்மர் அண்ட் ஸ்விட்ச்கியர் கம்பெனியை மத்திய அரசு ஏற்கச் செய்தது. நின்று போயிருந்த பம்பாய் – ஜனதா ரயில் மீண்டும் ஓடச் செய்தது. அந்தமானுக்குச் சென்னையிலிருந்து விமானக் கட்டணச் சலுகை. ஆவடி படை உடை தொழிற்சாலையில் பனியன் உற்பத்தி, நுங்கம்பாக்கத்தில் எலெக்ட்ரானிக் டெலிபோன் எக்ஸ்சேஞ்ச், நுங்கம்பாக்கத்தில் சுரங்கப்பாதை, என்று நிறைய காரியங்கள் இவர் தூண்டுதலின் பேரிலேயே நிறைவேறியுள்ளன.

தெருவிளக்கு எரியவில்லை, சாக்கடைப் பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை என்ற சாதாரண பிரச்சினைகள் ஆனாலும் சரி, அல்லது இலங்கைத் தமிழர் போராட்டம், பின்னியில் தொழிலாளர்கள் போராட்டம் போன்ற பெரிய பிரச்சினைகள் ஆனாலும்சரி, அவைகளில் இவர் காட்டும் அக்கறையும், கவனிப்பும் பாராட்டுதல்களுக்கு உரியது.


இவரைப் பற்றி காரவன் ஆங்கில இதழ் சொல்லுகிறது:

''தமிழ்நாட்டின் மிகச் சிறந்த நாடாளுமன்ற உறுப்பினர் யார் என்று கேட்டால் சந்தேகத்துக்கிடமின்றி டாக்டர் ஏ. கலாநிதி தான்!''

எதிர்க்கட்சியில் இருக்கும் போதே இவ்வளவு சாதிக்கிற டாக்டர் கலாநிதி அரசியலில் ஒரு கிடைத்தற்கரிய மாணிக்கம்.

சென்னை-7 சாவித்திரி

தமிழ் நாட்டின் மிகச்சிறந்த எம்.பி.



நான் விரும்பும் வேட்பாளர்

215 நிறுவனங்களின் பாராட்டைப் பெற்றவர்

பம்பாய் வடமேற்கு தொகுதியிலிருந்து ஸ்ரீ ஹஸ்ஸ்புக்ரா அவர்கள் வேட்பாளராக நின்று தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறேன்.

அவர் நாடு சுதந்திரம் அடைந்த பிறகு 1948—ல் மேற்கு பாகிஸ்தானிலிருந்து வந்து பம்பாயில் குடியேறினர். கடந்த 36 ஆண்டு காலமாக அயராது பொது நலனுக்காக உழைத்து வருகிறார். அவர் சாதனைகளில் சில:

கல்வித்துறை:

- அவர் வசிக்கும் சாந்தா குருஸ் (கிழக்கு) பகுதி 20 வருடங்களுக்கு முன் கல்வி வசதியுடன் இல்லை. அதை உணர்ந்து ஒரு சிறிய பள்ளியை 1961—ல் தொடங்கினார். அந்தப் பள்ளி இன்று 'கலினா எஜுகேஷன் சொஸைட்டி' என்ற ஸ்தாபனமாகி 2000 குழந்தைகள் படிக்கிறார்கள்.
- மேற்கண்ட சாதனையைக்கண்டு வடபம்பாயில் பிரசித்தியுடன் நடந்து வரும் சாதனா எஜுகேஷன் சொஸைட்டி' என்ற ஸ்தாபனம் இவரைத் தலைவராகச் சமீபத்தில் ஏற்றுக் கொண்டது. இவர் மேற்பார்வையில் கீழ் நிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளி, காலேஜ் வகுப்புகளில் 4000 மாணவர்கள் குஜராத்தி ஆங்கில மொழிகளில் பயின்று வருகின்றனர்.
- பம்பாய் யூனிவர்சிடி இவரை செனட் மெம்பராகத் தேர்ந்தெடுத்து கௌரவித்தது.

குடியிருப்புத்துறை:

- மத்திய தர வகுப்பினர் வசிக்கும் அரசாங்கம் கட்டிக் கொடுத்த குடியிருப்புகளை முதன் முதலாக 200 அங்கத்தினர்களுக்கு ஒரு சொற்ப செலவில் சொந்தமாக அடைய வழிகாட்டினார். அந்தப் பகுதியின் கூட்டுறவு சங்கத்தின் தலைவராகத் திறமையுடன் விளங்குகிறார்.
- பம்பாய் வாழ் மற்ற அரசாங்க குடியிருப்பு சங்கங்களின் அங்கத்தினர்கள் இவரை, எல்லாக் காலனிகளுக்கும் தலைவராகத் தேர்ந்தெடுக்க அந்தப் பதவியைப் புகழுடன் நிர்வகித்தார்.
- மகாராஷ்டிர அரசு இவரை வீட்டுவசதி வாரிய நிர்மாணக் குழுவின் அங்கத்தினராக நியமனம் செய்து கௌரவித்தது.

கலாசார உறவு

- பம்பாய் பாரதி கலா மன்றத்தின் கட்டிடம் கட்ட, நிலம் தேவைப்பட்டபொழுது, இவர் பம்பாய் நகரப் பேராட்சி அவையின் மூலம் தகுந்த இடத்தில் நிலம் கிடைக்க ஏற்பாடு செய்து, தமிழுக்கும், பாரதிக்கும் தன்னாலான சேவை செய்தார்.
- 1972முதல் இந்தியா — செக்கோஸ்லோவாகியா கலாசார ஸ்தாபனத்தின் தலைவராகப் பணியாற்றி வருகிறார். செக் அரசாங்கம் இவரது சேவையைப் பாராட்டி 30—வது சுதந்திர விழாவில் தங்கப் பதக்கம் அளித்துக் கௌரவித்தது.

பொதுத் தொண்டு:

- 1968 முதல் 1978 வரை பம்பாய் மாநகராட்சியின் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதன் மிகச் சிறந்த சபைத் தலைவராகவும், பல குழுக்களிலும் சாதி, இன, மொழி, மத வேறுபாடு இல்லாமல் அனைவருக்கும் உழைத்து, எல்லோருடைய ஏகோபித்த அன்பையும், ஆதரவையும் பெற்றார்.
- அரசு அமைக்கும் குழுக்களில் பல பதவிகள் ஏற்றுத் திறம்பட உழைக்கிறார். சமீபத்தில் ஆடை தயாரிக்கும் தொழிலாளர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்க இவரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழு இயங்கியது. அதன் சிபாரிசுகளை அரசுக்குச் சமீபத்தில் சமர்ப்பித்தார்.
- மிகத் .தெளிவாகவும், நயமாகவும் ஆங்கிலம், ஹிந்தி, உருது, பஞ்சாபி மொழிகளில் பேசும் மேடைப் பேச்சாளர்.
- சென்ற ஆண்டு இவரது 60—வது பிறந்த தின விழாவில் 215 பொது நல ஸ்தாபனங்கள் இவரை மாலையிட்டுக் கௌரவித்தன.

அனைவரையும் சமமாகப் பாவித்து, அன்புடன் பணியாற்றும் எங்கள் பகுதியின் காங்கிரஸ் (இ) தலைவர் ஸ்ரீ ஹஸ்ஸ்புக்ரா தான் என் வேட்பாளர். நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் முன்னேற்றத்திற்கும் பாராளுமன்றத்தில் திறமையுடன் நிச்சயம் பாடுபடுவார். இம்மாதிரி நாணயமுள்ள, சுயநலமில்லாத நல்லவரும், வல்லவரும், பேச்சாளரும், பண்பாளரும் நம் நாட்டுக்குத் தற்சமயம் அவசியம் தேவை.

பம்பாய்-98 பிச்சுமணி

பெண்ணென்று பிறந்துவிட்டால்...

ஆணென்று பிறந்துவிட்டால்...

என் சகோதரியின் கணவர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருந்தார். அவள் அவசர பண உதவிக்கு என்னை நாடியபோது என் சம்பாத்தியத்திலிருந்து பணம்கொடுத்து உதவினேன். இதைப் பிறகு என் கணவரிடம் கூறிய போது அவருக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. 'எல்லாம். சம்பாதிக்கிற திமிர்தான் உனக்கு' என்று ஏசினார். அந்த மனப்புண்ணின் வடு இன்னும் அழியவில்லை.

கே. ராஜேஸ்வரி, காஞ்சிபுரம்

அரசே இப்படிச் செய்யலாமா?

பேருந்து ஓட்டுனர் பயிற்சிக்கு எல்லாத் தகுதிகளுடனும் மனு செய்திருந்த என் தோழியைத் தேர்ந்தெடுக்கவில்லை. பெண்களுக்குப் பயிற்சி கிடையாதாம். இப்படி அரசாங்கமே வித்தியாசம் பாராட்டுகிறதே.

R. B. விசாலாக்ஷி, கரூர்

பொறுப்பை உதறும் பிரபுக்கள்

ஆபீஸிலிருந்து பஸ் பிடித்துக் களைத்துப் போய் வீடு வந்து சேர்ந்தால்... பரீட்சை பற்றிய உணர்வின்றி அப்பாவுடன் டீ. வி. பார்த்துக் கொண்டிருக்கும் குழந்தைகள். 'கொஞ்சம் அவர்களுக்கும் பாடம் சொல்லிக் கொடுக்கக் கூடாதா' என்று கேட்டால் அது அவர் வேலை இல்லையாம்! அம்மாதான் சொல்லித்தர வேண்டுமாம்! சமையல்.... அதை ஆண்களா செய்ய முடியும். ; வேலைக்கும் போய் வீட்டுப் பொறுப்பையும் முழுமையாகச் சுமந்து... ஏழு ஜன்மங்களுக்கும் போதும்!

இந்திரா கண்ணன், சென்னை-80

பழமையில் ஊறித் திளைத்து...

ரேடியோ இன்ஜினியரிங்பயின்று அதற்குத் தேவையான எல்லாக் கருவிகளையும் வைத்துள்ளாள் என் தோழி. மாமாவின் ரேடியோவை ரிப்பேர் செய்ய அவள் முன்வந்த போது. 'நீ கரண்டியைப் பிடிக்கும் வழியைப் பார். நாங்கள் கடையில் கொடுத்து ரிப்பேர் செய்து கொள்கிறோம்' என்று முகத்தில் அறைந்து விட்டார் மாமா.

கே. பாமா, கோடம்பாக்கம்

வெட்கக் கேடு!

என் சக ஊழியை ஒருத்தியின் கணவர் முதல் தேதியன்று அவளைத் தேடி அலுவலகம் வந்து விடுவார். சம்பளக் கவரை அப்படியே அவளிடமிருந்து வாங்கிக் கொண்டு தாராள மனதுடன் பஸ் கட்டணம் ஐம்பது பைசாவும், காப்பிக்கு ஐம்பது பைசாவுமாக ஒரு ரூபாய் கொடுத்துவிட்டுச் செல்வார்!

ஸரோஜா தாஸ், திருவனந்தபுரம்

உரிமைக்குப் போராட உரிமையில்லை

பெண்ணுரிமை இயக்கம் தொடர்பாக நடந்த ஊர்வலம் ஒன்றில் கலந்துகொள்ள





வாசகர் பங்கு

ஆவலுடன் புறப்பட்டாள் ஒரு பெண். உடனே 144 தடை உத்தரவு விழுந்தது—அவள் பெற்றோர்களிடமிருந்து. 'வேலையற்றவர்களுடன் சேர்ந்து நேரத்தை வீணடிக்காதே' என்று காரணம் கூறினார்கள் அவர்கள்.

எஸ். வில்சன், நாகர்கோவில்

ராமனிருக்கும் இடம்தான் அயோத்தியா ?

என் தோழியின் கணவருக்கு வேறு ஊருக்கு மாற்றலாகி விட்டது. கணவனின் வற்புறுத்தலின் பேரில், பதவி உயர்வு, சீனியாரிடி எல்லாம் பாதிக்கப்படும் என்று தெரிந்தும் அவளும் அதே ஊருக்கு மாற்றல் வாங்கிக்கொள்ள வேண்டியதாகி விட்டது.

எஸ். ராதா, சென்னை-14

பண்பற்ற செயல்

என் தோழியுடனும் அவள் கணவருடனும் பேசி மகிழ்ந்து கொண்டிருந்தபோது ஸ்ரீதேவி ரொம்ப அழகாக இருப்பதாக அவர் கூற, அவளும் போட்டிக்கு கமலின் அழகைப் பாராட்டினாள். அவருக்கு வந்த ஆத்திரத்தில் மனைவியின் கன்னத்தில் ஓங்கி அறைந்தே விட்டார். நான் இருப்பதைக் கூடப் பொருட்படுத்தவில்லை!

எஸ். மீனு, திருக்கோவிலூர்

பிரளயமா வந்துவிடும்?

உறவினர் வீட்டில் திதி. எல்லாம் முடிந்து நாங்கள் சாப்பிடவே மதியம் இரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டது. அதற்குப்பிறகு பெண்கள் சாப்பிட வேண்டும். கர்ப்பிணியான அந்த வீட்டு மருமகளின் முகத்தில் அதீத களைப்பு. சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் அவள்பட்ட வேதனை.. பெண்கள் ஆண்களுடன் சேர்ந்து சாப்பிட்டால் பிரளயமா வந்துவிடும்?

கே. சங்கரன், திருச்சி-10

முதல் தரப் போலித்தனம்

தாயன்பில் திளைத்து, தமக்கையுடன் வளர்ந்து செழித்து, தன்னவளுடன் இரண்டறக் கலந்து முடிவில் தனக்குப் பிறக்கப் போகும் குழந்தை மட்டும் ஆணாக இருக்க வேண்டும் என்று கவலைப்படுவதும், பெண் குழந்தை பிறக்காமல் இருக்கப் பல வழிகளைக் கையாள்வதும் 'சம உரிமை' என்ற சொற்களுக்கே இழுக்கு.

ஜி. எஸ். குமார், பெங்களூர்-50

நாக்கில் நரம்பின்றி

கூட்டம் நெரிந்த பஸ்ஸில் மகளிர் இருக்கையில் சிறிது இடம் இருந்தது. ஓர் ஓரத்தில் அமர்ந்திருந்த பெண் ஒதுங்கி அமர்ந்து அருகில் நின்றிருந்த ஆண்களை உட்காரும்படி கூறினாள். அங்கிருந்த மற்றொருவர் அவள் செய்கையைப் பற்றி மிக விரசமாகப் பேசியதும் அந்தப் பெண் கூனிக் குறுகிப் போனாள்.

லலிதா மகாதேவன், திருநெல்வேலி-6

வாய்ச்சொல்லில் வீராடி!

பெண்ணுரிமை பற்றி வாய் கிழிய மேடையில் பேசிவிட்டு வந்தார் என் தோழியின் கணவர். அதைத் தொடர்ந்து மனைவி தன் அம்மாவுக்கு உடல் நிலை சரியில்லாததால் ஊருக்குப் புறப்பட்ட போது அவளை அறைந்து ஊருக்குப் போகக் கூடாது என்று தடுத்து விட்டார்.
ஏ. ஜாஹிதா அஜீஸ், புதுக்கோட்டை

உள்ளொன்று வைத்துப் புறமொன்று...

பெண்களுக்குச் சகலத்திலும் சம உரிமை தர வேண்டும் என்பதில் தீவிரமாக உள்ள திராவிட கழகத்தில் தலைவரான தன் தந்தை அவர் சொத்தில் தனக்குச் சிறிதும் பங்கு வைக்கவில்லையே என்று இன்றளவும் வருந்தும் பெண்ணை எனக்குத் தெரியும்.
எம். தங்கவேல், கோவை-3

பொன்னான வாய்ப்பு நழுவியது!

பெற்றோருடன் லண்டனில் தங்கிப் படித்துக் கொண்டிருந்த பொழுது லக்ஸம்பர்க்கில் நடந்த ஐரோப்பிய பார்லிமெண்ட் கூட்டத்துக்குக் கல்லூரிக் குழுவுடன் போக நான் பட்டபாடு எனக்குத்தான் தெரியும். பெற்றோர்கள் இந்தியா திரும்பியபோது இங்கிலாந்திலேயே தங்கிப் படிப்பை முடித்து விட்டுத் திரும்புகிறேன் என்று கெஞ்சினேன். அவர்கள் இணங்கவில்லை. நான் ஆணாக இருந்திருந்தால் கதையே வேறாக இருந்திருக்கும்.
எஸ். சுசரிதா, சென்னை-92

என்ன அவமானம்!

தேர்தல் நேரத்தில் வாக்குச் சாவடியில் பணியாற்றத் தேர்ந்தெடுக்கப்படும் ஆசிரியர்களுக்கு வருவாய்த்துறை உயர் அதிகாரிகள் முன்னுரை வகுப்பு நடத்துவதுண்டு. அவ்வாறு நடக்கவிருந்த ஒரு வகுப்புக்கு இளநிலை எழுத்தாளராகிய என்னை உதவியாளராக நியமித்திருந்தார்கள். வகுப்புக்குள் நுழைந்த என்னை முன்பின் தெரியாத உயர் அதிகாரி கேட்ட முதல் கேள்வி 'ஏன் அம்மா உங்கள் அலுவலகத்தில் ஆண்களே இல்லையா?' என்பதுதான். என்னை அலுவலகத்துக்குத் திருப்பியும் அனுப்பி விட்டார்.
ரோகிணி, திருச்சி-1

ராகமாலிகா வழங்கும் பட்டுப்புடவையைக் குலுக்கல் முறையில் பரிசாகப் பெறுபவர்

திருமதி கமலா நாராயணன்
1/448, பழைய கல்பாத்தி,
பாலக்காடு-678 003.
(காண்க கல்கி 14-10-84)


இலவச இணைப்பு
சட்டம்
என்ன
சொல்கிறது?
கல்கி
KALKI


வளரும் குழந்தைகளுக்கு சுவையான
துணையாக விளங்கும் பால் பிஸ்கட்
Milk Bikis
BRITANNIA
Milk Bikis
சத்துமிகுந்த,
சுவையான பிஸ்கட்.
பிரிட்டானியா
LINTAS BIN MB 10 2013 TM

சட்டம் என்ன சொல்கிறது?



× வழக்கறிஞர் திருமதி ஜெயந்தி நடராஜன்

சட்டங்கள் — ஒரு சின்ன முன்னுரை:

சட்டம் நம் தினசரி வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டது. பிறப்பிலிருந்து இறப்பு வரை, ஏதேனும் ஒரு விதத்தில் நம் வாழ்க்கை சட்டங்களால் நடத்திச் செல்லப்படுகிறது என்றால் மிகையில்லை. பிறப்புப் பதிவுச் சான்றிதழ் இல்லாமல் ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட முடியுமோ? இறப்புப் பதிவுப் பத்திரம் இல்லாமல் இன்ஷ்யூரன்ஸ் மற்றும் சொத்துக்களை வாரிசுதாரர் பெற முடியுமோ...?

சட்டம் என்றால், சட்டசபையில் உருவாகி, சட்டமாகி, நீதிமன்றங்கள் மூலமாக, நீதிபதிகள் வழியாக வழங்கப்படும் சட்டங்கள் மட்டுமே அல்ல. மனித நாகரீகம் கருதி, சட்டம் போலவே — ஏன் தெய்வக் கட்டளைகள், மாதிரியே சிலவற்றை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். உதாரணமாக, 'யாரையும் கொல்லாதே!' என்கிறோம். ஒரு நாட்டில் மட்டுமே அமலில் இருக்கக் கூடிய சட்டம் அல்ல இது. பாஸிஸ, எதேச்சாதிகார அமைப்பில் கூட, மனித உயிர்களின் விலை மதிப்பை உணராத நாடுகளில் கூட, ஒரு சமூக நாகரீகம் கருதி, இதை நடைமுறைப்படுத்தி வருகிறோம்; இல்லையா?

அப்படியானால் யுத்தங்களில் ஒரு சிப்பாய் இன்னொரு சிப்பாயைக் கொல்கிறானே என்று கேட்பீர்கள். அது போர் முறை. அது குற்றமாகாது. தூக்கு மேடையில் சுருக்குக் கயிற்றை இழுத்துக் கொல்கிறாரே பணியாளர்? அது அவரது வேலை. சட்டம் அநுமதி வழங்கியுள்ள பணி.

மது விலக்கை எடுத்துக் கொள்ளுங்கள்: ஒரு மாநிலத்தில் குடித்தால் குற்றம். சற்றுத் தள்ளி, இன்னொரு மாநிலத்தில் அது சட்டப்படி குற்றமேயில்லை...!

இந்த வெளியீட்டில், உங்களுக்குச் சட்டம் சம்பந்தமான சில ஆதாரமான விவரங்களை, கூடுமானவரை விளக்கமாகச் சொல்லுவது தான் எனது முயற்சி.

1. சொத்துக்கள் வாங்கும் முன்:

ஒரு நிலத்தையோ, வீட்டையோ வாங்கும் முன், எந்த எந்தப் பத்திரங்களைப் பரிசீலிக்க வேண்டும்? முதலில்—

1. மேற்படி சொத்தை விற்பவரிடம், சொத்து சம்பந்தப்பட்ட எல்லா தஸ்தாவேஜுகளையும் காண்பிக்கச் சொல்லுங்கள்.
2. சப் — ரிஜிஸ்திரார் அலுவலகத்திலிருந்து, அன்றைய தேதி வரையிலான பதிமூன்று வருடங்களுக்கான வில்லங்கப் பத்திரம் கொடுக்கச் சொல்லுங்கள்.
3. விற்பவரின் குடும்பம் பற்றிய தகவல்களை ஆராயுங்கள். இந்துவாயிருந்தால், அவர் கூட்டுக் குடும்பத்திலிருந்து தனியே பிரிந்து வந்தவராயிருப்பின், பாகப்பிரிவினை செய்ததற்கான பத்திரங்களைப் பார்வையிடுங்கள்.

இவை மூன்றுமே, குறிப்பிட்ட சொத்து விற்பனை செய்யத் தகுதியானதா என்பதைத் தெரிவித்துவிடும்.

இலவச இணைப்பு — பகுதி 1

திருமதி ஜெயந்தி நடராஜன்



விற்பவர், மூல தஸ்தாவேஜு பத்திரங்களைக் காண்பிக்க முடியவில்லை என்றால், அவர் ஏன் அப்படிக் காண்பிக்க முடியவில்லை என்பதற்கான காரணங்களை ஆராயுங்கள்.

மூல தஸ்தாவேஜுகளின் சான்று அளிக்கப்பட்ட பிரதிகளைக் காண்பித்தால், உடனே திருப்தியடைந்துவிடாதீர்கள். மூல தஸ்தாவேஜுகள் காண்பிக்க இயலாமைக்குத் தகுந்த காரணங்கள் உள்ளனவா என்று பாருங்கள். ஏனென்றால் மூலப் பத்திரத்தை அடமானம் வைத்திருக்கும் சாத்தியக் கூறு இருக்கிறது. குறிப்பாக, நகரங்களிலுள்ள சொத்துக்களைப் பொறுத்தமட்டில் இப்படி நடப்பதுண்டு.

வில்லங்கப் பத்திரம், குறிப்பிட்ட சொத்து அடமானம் ஏதும் வைக்கப்பட்டிருக்கிறதா என்பதையும், அதன் மீது வேறு வகையான பாத்தியதை ஏதும் இருக்கிறதா என்பதையும் காண்பிக்கும். அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் மீது பாத்தியதை கொண்டாடப் பன்னிரண்டு வருஷங்கள் மட்டுமே அநுமதிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், சொத்தை அடமானமாகப் பெற்றுக் கொண்டவர், முப்பது வருடங்கள் வரை பொறுத்திருந்து, பிறகு கூட நடவடிக்கை எடுக்க முடியும். அதனால், முப்பது வருடங்களுக்கான வில்லங்க சர்டிபிகேட் இல்லாமல் போனாலோ, விற்பவரின் பொருளாதார நிலை பற்றிய சந்தேகங்கள் எழுந்தாலோ, குறிப்பிட்ட சொத்தை நீங்கள் வாங்கப் போவது பற்றி, பொது விளம்பரமாக ஒரு செய்திப் பத்திரிகையில் வெளியிட்டு விடுவது நல்லது.

ஆதார தஸ்தாவேஜுகள், விற்பவரின் பெயரிலேயே இருந்தால், அவர் சொத்தைக் குறைந்த பட்சம் பன்னிரண்டு வருஷங்களுக்காவது வைத்திருந்தால் ஆதார (மூல) தஸ்தாவேஜு சரியானது என்று கொள்ளலாம்.

அப்படி இல்லாமல் இறந்து போன மூதாதையர் எவருடைய பெயரிலாவது சொத்து இருந்தால், சரியாக விசாரணை செய்து அந்தச் சொத்து, விற்பனை செய்பவரின் இடைவிடாத பாத்தியதையில் இருந்ததா என்பதைத் தெளிவாக்கிக் கொள்ளுங்கள். அதன் மீது வழக்கு ஏதும் இருக்கிறதா என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள். குறிப்பிட்ட சொத்து, தாவாக்களுக்குக் கட்டுப்படாதது என்று விற்பனைப் பத்திரத்தில் குறிப்பிட்டிருந்தாலும், பிறகு வாங்குகிறவரைச் சில வேளைகளில் வழக்குகளில் சிக்க வைத்துவிடும். விற்பவர் முஸ்லிமாக இருந்தால், விசாரணை ஒரு விதத்தில் சுலபம்! ஒரு விதத்தில் கஷ்டம்! சுலபத்திற்குக் காரணம், முஸ்லிம் சட்டத்தில் கூட்டுக் குடும்பச் சொத்து என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால் வாரிசுதாரர் சொத்து உரிமை, முஸ்லிம் சட்டத்தில் சற்றுச் சிக்கலானது; தவிர சொத்தில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் ஒரு முஸ்லிம் உயில் எழுதி வைத்து விட முடியாது என்பது மட்டுமல்ல; பங்குதாரர்கள் கிட்டத்து உறவிலிருந்து வெகு தூரத்து உறவினர் வரை இருப்பார்கள்.

2. முதல் மனைவி — இரண்டாவது 'மனைவி'

சில தமிழ் சினிமாக்களில், கதாநாயகி, 'நீங்கள் இன்னொருத்தியைக் கல்யாணம் செய்து கொள்ளலாம் — எனக்குச் சம்மதம்தான்!' என்று கதாநாயகனிடம் எழுதிக் கொடுத்துவிட்டு, விக்கி விக்கி அழும் காட்சிகளைப் பார்த்துவிட்டு, சில பெண்கள் என்னைக் கேட்பதுண்டு; இது மாதிரி நடப்பது சாத்தியமா? இப்படிக் கணவன் ஒரு காகிதத்தில் எழுதி வாங்கிக் கொண்டு விட்டு, இன்னொரு பெண்ணைச் சுலபமாகக் கல்யாணம் செய்து கொண்டு விடலாமா? தன் முதல் மனைவிக்குக் குழந்தை பிறக்கவில்லை என்று, அவளுடைய சம்மதத்துடன் இன்னொருத்தியைத் திருமணம் செய்து கொள்ளுகிறான் என்று வைத்துக் கொள்ளுவோம். இரண்டாவது மனைவி கருத்தரித்த பிறகு, முதல் மனைவிக்கும் குழந்தை பிறக்கிறது. இந்த இரண்டு குழந்தைகளின் நிலைமை என்ன?

முதலில் இந்தச்' சம்மதம்' அல்லது முதல் மனைவியின் 'ஒப்புதல்' என்பது சட்டப்படி செல்லுபடியாகாது. இந்து சட்டப்படி சொல்லுகிறேன்: 'இரண்டாவது மனைவி' என்ற அந்தஸ்துக்கே இங்கு இடமில்லை. சென்னை பலதார மணச் சட்டம் 1949—ன்படி, முதல் மனைவியை விவாகரத்துச் செய்யாத வரை, இரண்டாவது மனைவியாக ஒருத்தியைத் திருமணம் செய்து கொள்ள முடியாது. அவனைப்பொறுத்த வரை அவள் இரண்டாவது பெண் மணி. அவ்வளவுதான். இரண்டாவது மனைவியாக முடியாது. அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்கும் சட்டப்படி அந்தஸ்து, உரிமை ஏதும் இல்லை. முதல் மனைவிக்குப் பிறந்த குழந்தைக்கு மட்டுமே சட்ட உரிமை அல்லது அந்தஸ்து உண்டு.

இரண்டாவது மணம் செல்லாது என்பது மட்டுமல்ல, அந்தக் கணவர் குற்றவியல் சட்ட 494 பிரிவுப்படி தண்டனைக்குள்ளாவார். சினிமாக்களில் தவறுக, கதைப் போக்கிற்காக இப்படி காண்பிப்பதை, சில சுயநலமிக்க கணவன்மார்களும், ஏதுமறியாத அபலைப் பெண்களும் நம்பிவிட வேண்டியதில்லை!

3. பெண்களுக்குச் சொத்துரிமை

பழங்காலத்தில் எல்லாம், இந்துப் பெண்களுக்குச் சொத்தில் ஏதும் உரிமை கிடையாது. (ஏன், சுதந்திரம் கூடக் கிடையாது.) மனு சாத்திரத்தில்—

குழந்தைப் பிராயத்தில் தகப்பனும்
இளமையில் கணவனும்
முதுமையில் மகனும்
பெண்ணைக் காப்பாற்ற வேண்டும்.
பெண்ணுக்குச் சுதந்திரம் தேவையில்லை

என்றுதானே சொல்லப்பட்டிருக்கிறது? அதையெல்லாம் தாண்டி நாம் எவ்வளவோ தூரம் வந்து விட்டோம். 1937—ல் உருவான சட்டம், முதல் முதலாக, விதவைப் பெண்களுக்குச் சில உரிமைகள் வழங்கியது. மொத்தத்தில், இதை இந்துப் பெண்களின் ஆயுள் உரிமை அல்லது அநுபவ உரிமை என்ற விதத்தில் தான் வழங்கினர்கள். இதில் கூட, அவள் அந்தச் சொத்தை அநுபவிக்கலாமே தவிர, சட்டம் ஒப்புக் கொள்ளக்கூடிய அவசியங்கள் தவிர, பராதீனம் செய்ய முடியாது. 1956—ல் ஒரு சட்டம் வந்தது. பழங்காலத்தில் விதித்திருந்த தடைகளை எல்லாம் தூர எறிந்தது.

இதன்படி, ஒரு மகளோ, விதவையின் மகளோ, அல்லது விதவை மருமகளோ —எல்லோருமே ஒரே தட்டில் வைத்து மதிக்கப்பட வேண்டும். தங்களுக்குக் கிடைக்க வேண்டிய சொத்துக்களில் பெண்கள் உரிமை பெற்றதோடு, ஆண்களுக்குச் சமமாகவும் இவர்கள் இவ்விஷயத்தில் மதிக்கப் பட்டார்கள். ஆகவே இந்து சட்டப்படி இன்று, ஓர் ஆணுக்கு என்ன உரிமைஉண்டோ அதைப் போலச் சரிசமமான உரிமை பெண்களுக்கும் உண்டு.

4. இன்னும் வேறு என்ன உரிமைகள்?

இந்த 1956 சட்டப்படி இன்னும் என்ன என்ன உரிமைகள் என்று கேட்கலாம்.

பழங்காலத்தில் இந்து விதவை மறுமணம் செய்து கொள்ளலாகாது. 1856—ஆம் வருடச் சட்டம் அதை மாற்றி அமைத்தது. ஆனல் முதல் கணவனின் சொத்தில் ஏதும் உரிமை கொண்டாட முடியாது என்றது. 1956—ஆம் வருடச் சட்டம் இன்னும் ஒருபடி மேலே சென்று, அவள் மறுமணம் செய்து கொண்டாலும், முதல் கணவரின் சொத்தில் அவளுக்குப் பாத்தியதை உண்டு என்றது. இதில் இன்னும் ஒரு விசேஷம் என்ன, தெரியுமா? அந்த விதவை தூய்மையானவளாயிருந்தால் தான் சொத்தில் பங்கு உண்டு என்ற கட்டுப்பாட்டையும் தளர்த்தி விட்டது!



5. மணமாகாத பெண்களுக்கு...

திருமணம் ஆகாத பெண்ணுக்கு (அதாவது மகளுக்கு), குடும்பத்திலுள்ள பிற உரிமையுள்ள அங்கத்தினரைப் போலவே பராமரிப்புத் தொகை பெற உரிமை உண்டு. இந்தத் தொகை, குடும்பத்தின் அந்தஸ்தையும், அந்தப் பெண்ணின் நியாயமான தேவைகளையும், வாரிசுதாரருக்கு விட்டுச் சென்றிருக்கும் சொத்தின் மொத்த மதிப்பையும் பொறுத்தே நிச்சயிக்கப்படும்.

பராமரிப்புத் தொகை என்றுசொல்லும்போது, இந்து தத்து பராமரிப்பு சட்டம் 1956—ன்படி, அந்தப் பெண்ணுக்கு நியாயமான திருமணச் செலவுகளையும் சேர்த்துக் கொள்ள உரிமை உண்டு.



6. கணவனுடன் வாழ முடியாத பெண்ணுக்கு?

ஒரு இந்து மனைவியை, அவள் கணவன் அவளது ஆயுள் முழுதும் வைத்துக் காப்பாற்ற வேண்டும். அவள் தனியே பிரிந்து வாழ நேரும் சந்தர்ப்பத்தில், அவளுக்குப் பராமரிப்புச் செலவைக் கணவன்கொடுத்துவிட வேண்டும். பிரிந்து வாழ நேரும் சந்தர்ப்பங்களுக்கு உதாரணம் சொல்கிறேன்:

1. நியாயமான காரணங்கள் ஏதும் இல்லாமல் அவளை விலக்கி வைத்தல்.
2. அவளுடைய சம்மதம் இல்லாமலும், அவள் விருப்பத்துக்கு எதிராகவும் ஒதுக்கி வைத்தல்.
3. அவளைக் கொடுமைப்படுத்துதல், அவன் கூட வாழ இயலாத கொடூரமானநிலை உருவாக்குதல்.
4. கணவனுக்கு மிகப் பயங்கரமான, தீவிர தொழுநோய் பீடித்திருத்தல்.
5. அதே வீட்டிலேயே கணவன் இன்னொரு பெண்ணைக் கொண்டு வந்து வைத்துக் கொள்ளுதல்; அல்லது இந்து மதத்திலிருந்து மாறிவிடுதல்.

இந்தப் பெண்ணுக்கும் உரிமை மறுக்கப்படும் நிலைமை எப்போது உருவாகும் என்று கேட்கலாம். அவள் தூய்மையற்றவளாக இருந்தாலோ, இந்து மதத்திலிருந்து மாறிப் போனாலோ மட்டுமே உரிமை மறுக்கப்படும்.

7. முறை தவறிப் பிறக்கும் குழந்தைகளுக்கு?

ஒரு புகழ் பெற்ற ஆங்கில எழுத்தாளர் சொன்னார்:

''முறை தவறிய குழந்தைகள்என்று யாருமே இல்லை. முறை தவறிய பெற்றோர்தான் உண்டு.''

உண்மைதானே?

திருமண பந்தத்திற்கு அப்பாற்பட்டு, முறை தவறிப் பிறந்த குழந்தைகளுக்கும், நியாயமான வகையில் முறையாகப் பிறந்த குழந்தையைப் போலவே சொத்தில் உரிமை உண்டு.

8. பெண்ணுக்குச் சொத்தில் ஆயுள் முழுதும் உரிமை

இந்து சட்டப்படி, ஒரு பெண்ணுக்கு ஆயுள் முழுதும் சொத்து உரிமை என்கிறார்களே, அப்படி என்றால் என்ன என்று பலரும் கேட்பதுண்டு. முன்பு குறிப்பிட்டது போல, அந்தப் பெண் தன் ஆயுள் உள்ள வரை, தனக்குப் பாத்தியதை உள்ள சொத்தை அனுபவிக்கும் உரிமை மட்டுமே என்பதாகும். அவள் அதைப் பிறருக்கு உரிமையாக்க முடியாது. இது பழைய சட்டம் என்பதை இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன். இப்போது 1956 சட்டப்படி அவளுக்கும் பரிபூரண உரிமை மட்டுமல்ல, மற்றவர்களைப் போல, அவளும் விற்க வேண்டும் என்றால் அந்தச் சொத்தை விற்கலாம். சட்டத்தடை ஏதும் இல்லை.

9. தத்து எடுத்தல்

இந்து குடும்பங்களில், தத்துஎடுத்துக் கொள்வது என்பதும் 1956 சட்டத்திற்குப் பிறகு, புரட்சிகரமான மாறு

தலை அடைந்தது. 50 வருஷங்களுக்கு முன்பு, இதையே ஒரு வழக்கறிஞர் கேள்விப்பட்டிருந்தால் திடுக்கிட்டுத் துள்ளியிருப்பார்! இந்த விஷயத்திலும் பெண்களுக்கு எதிரான ஒரு தடை நீக்கப்பட்டிருக்கிறது. பெண்களும் தத்து எடுத்துக் கொள்ளலாம். திருமணமான பெண்ணாயிருந்தால், கணவருடைய சம்மதம் பெற்றே தத்து எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படியில்லாத பட்சத்தில், 1. திருமண பந்தம் விலக்கிக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். 2. கணவர் காலமாகியிருக்க வேண்டும். 3. கணவர் இல்லறத்தைத் துறந்திருக்க வேண்டும்; 4. இந்துமதத்திலிருந்து கணவர் மாறிப் போயிருக்க வேண்டும். தத்து எடுத்துக் கொள்ளும் பெண் சுயபுத்தியோடு இருக்க வேண்டும்; மைனராக இருக்கக் கூடாது என்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நல்ல ஆரோக்கியமான கணவருடன் வாழும் மனைவி, அவளாகவே தத்து எடுத்துக் கொள்ளக் கூடாது என்பது இயற்கையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த விஷயத்தில் சில முக்கியமான கட்டளைகளை நினைவு வைத்துக் கொள்ள வேண்டும்:

1. உங்களுக்கு ஏற்கெனவே ஓர் ஆண் குழந்தையும் பெண் குழந்தையும் இருக்கின்றன என்றால், நீங்கள் மறுபடியும் ஓர் ஆண் குழந்தையையோ பெண் குழந்தையையோ தத்து எடுத்துக் கொள்ளக் கூடாது.

2. தத்து எடுத்துக் கொள்ளும் பெற்றோரை விட, தத்து எடுத்துக் கொள்ளப்படும் குழந்தை 21 வயது குறைந்தவனாகவோ, குறைந்தவளாகவோ இருக்க வேண்டும்.

பெண் குழந்தைகளையும் தத்து எடுத்துக் கொள்ளலாம் என்பது புதுமையான புரட்சிகரமான, மாறுதல். தத்து எடுத்துக் கொள்ளுதல் என்பதே சமச்சடங்குகளையும், வைதிகச் சடங்குகளையும் ஒரு பிள்ளை செய்ய வேண்டும் என்று இருந்த மனோபாவம் மாறிவிட்டது என்பதைத்தான் இது காட்டுகிறது.

10. முஸ்லிம் சொத்து உரிமைச் சட்டம்:

முஸ்லிம் பெண்களுக்குச் சொத்துரிமை என்ன என்று கேட்கலாம். இங்கே விவரித்துச் சொல்ல இடமில்லாவிட்டாலும், ஒரு கோடிகாட்ட விரும்புகிறேன். முஸ்லிம் சட்டத்தை இரு கூறாகப் பிரித்திருக்கிறார்கள் — ஷியா சட்டம், ஸுன்னி சட்டம் என்று. இந்த ஷியா சட்டத்திலும் நாலு பிரிவு உண்டு.

ஒரு முஸல்மான் தன்னுடைய சொத்தில் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் (ஈமச் செலவுகள், கடன்கள் தீர்த்ததுபோக) உயில் எழுத முடியாது. மூன்றில் இரு பங்கு வாரிசுதாரர்களுக்குச் சேரும். ஆனால் மூன்றில் ஒரு பங்குக்கு மேல் உயில் எழுதுவதற்கு வாரிசுதாரர்கள் சம்மதம் தெரிவிக்கலாம். இஸ்லாமிய அல்லது முஸ்லிம் சட்டத்தில் இன்னொரு முக்கிய விஷயம் என்னவென்றால், இந்து



சட்டம் மாதிரி, பிதுரார்ஜித, சுயார்ஜித சொத்துக்கள் என்று வேறுபாடே கிடையாது. ஹிந்துக்களுக்கு உள்ளது போல், பிறப்பினால் மட்டுமே உரிமை கொண்டாடும் வழக்கமும் முஸ்லிம் சட்டத்தில் இல்லை. முஸ்லிம் சொத்துரிமைச் சட்டத்தில் உள்ள பல விளக்கங்களை இங்கே எழுத வசதி இல்லை. ஓர் உதாரணம் மட்டும் சொல்லலாம்:

ஒரு முஸ்லிம், தனது தாய், தந்தை, இரண்டு பெண்கள், அப்பாவின் அப்பா, அம்மாவின் அம்மா, பிள்ளையின் பெண் எல்லோரையும் விட்டுவிட்டு இறந்து விடுகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். பெண்கள் இருப்பதால், அப்பா ஆறில் ஒரு பகுதியையும், அம்மாவும் ஆறில் ஒரு பகுதியையும், பெண்கள் ஒவ்வொருவரும் மூன்றில் ஒரு பகுதியையும் எடுத்துகொள்ளுவார்கள்;

பெண்களுக்கு நியாயமான பங்கைக் கொடுக்கும் அம்சத்தை இதில் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

11. கிறிஸ்தவ சொத்துரிமைச் சட்டம்:

1925—ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட, இந்திய வாரிசுதாரர் சட்டத்தின் 5—ஆம் பகுதி, கிறிஸ்தவர்களுக்கு மட்டுமேயான வாரிசு உரிமை பற்றிக் கூறுகிறது. ஓர் ஆண் அல்லது பெண்ணின் மூன்றில் ஒரு பங்குச் சொத்து. விதவை மனைவிக்கோ அல்லது மனைவியை இழந்த கணவருக்கோ சேரும். மூன்றில் இரண்டு பங்கு நேர்வழி வாரிசுதாரருக்கு (lineal descendants) சேரும்.

உதாரணமாக, மனைவியையும் நான்கு குழந்தைகளையும் விட்டுவிட்டு ஒரு கிறிஸ்தவர் இறந்து விடுகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். விதவை மனைவிக்கு மூன்றில் ஒரு பங்கு; மீதி மூன்றில் இரண்டு பங்கை நான்கு குழந்தைகளும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

இதுதவிர, திருவிதாங்கூர் கிறிஸ்தவர்களின் வாரிசுச் சட்டம் ஒன்று இருக்கிறது. இது அப்படிப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு மட்டுமேயானது. இந்தச் சட்டத்தின் வரம்புக்கு அப்பாற்பட்டு, வெகு நாட்களாக வழக்கத்திலுள்ள சில பழக்கங்களுக்கு ஏற்பவும் இந்தச் சட்டம் செயல்படும்.

12. வீட்டு வாடகைக் கட்டுப்பாடு சட்டம்

'சொந்த வீடு உள்ளவனுக்கு ஒரு வீடுதான் சொந்தம்; வாடகை வீட்டில் இருப்பவனுக்கு இருக்கிற வீடெல்லாம் சொந்தம்' என்றொரு வசனம் சொல்வதுண்டு. 'வருஷா வருஷம் வாடகை உயர்த்தி விடுகிறார் வீட்டுக்காரர். சின்னதாக ஒரு குடிசை போட்டுக் கொண்டு, நம்முடையது என்று ஒன்று இருந்து விட்டால் வம்பே இல்லை. காலி செய்து கொண்டு போகிற அவஸ்தையும் இல்லை' என்று சொல்பவர்களும் உண்டு. ஆனால்—

வாடகை வீட்டில் இருப்பவர் படும் தொல்லைகளை ஓரளவு அகற்றும் பொருட்டு, முதன் முதலாக வாடகை கட்டுப்பாடு ஆணை 1941—ல் கொண்டு வரப்பட்டது. பிறகு, 1946—ல் சட்டமாக்கப்பட்டு, 1960-ல் சில மாற்றங்களுக்கு உள்ளாகி,



1973—ல் நிரந்தரமாகச் சட்ட வடிவில் வந்து விட்டது.

பெருநகரங்கள், முனிசிபல் நகரங்களில் மாத வாடகை நானூறு ரூபாயும், அதற்கு மேலும் உள்ள குடியிருப்பு வீடுகள் தவிர, வாடகை வரம்பு இன்றி எல்லா வகையான கட்டடங்களுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும்.

சட்டத்தில் உள்ள காரணங்கள் அல்லாமல், குடியிருப்பவரை வெளியேற்ற முடியாது. முக்கியமான காரணங்கள் இதோ:

1. வேண்டுமென்றே வாடகையைக் கொடுக்காமல் இருத்தல்.
2. வாடகைக்குக் கொடுக்கப்பட்ட கட்டடத்தை, எதற்குக்கொடுத்தோமோ, அதற்கு மாறாக வேறு காரணங்களுக்கு உபயோகித்தல்.
3. சட்ட விரோதமான, கீழ்த்தரமான நடவடிக்கைகளுக்குக் கட்டடத்தைப் பயன்படுத்துதல்.
4. சரியான காரணங்கள் எதுவுமின்றி, வீட்டுச் சொந்தக்காரரின் வீட்டு உடைமையை ஒத்துக் கொள்ள மறுத்தல்.

பெருவாரியான சந்தர்ப்பங்களில், வாடகையைக் கொடுக்காமல் இருப்பது ஒன்றே அதிக அளவில் நடைபெறும் நிகழ்ச்சியென்று சொல்லலாம். வாடகை கொடுக்கப்பட வேண்டிய தினத்திலிருந்து பதினைந்து நாட்களுக்குள் வாடகை கொடுக்காமல் இருப்பது; வீட்டுக்காரர் இரண்டு மாத முன்னறிவிப்புக் கொடுத்தும் கூட, வாடகையைக் குறித்த தேதியில்

கொடுக்காமல் தட்டிக் கழிப்பது — இவை வேண்டுமென்றே செய்யப்படும் செயல்கள் என்கிறது சட்டம்.

வீட்டுச் சொந்தக்காரருக்கே வீடு தேவைப்படும் சூழ்நிலையில், குடியிருப்பு வீடாயிருந்தால் அப்படிக் கேட்கும் அந்த வீட்டுச் சொந்தக்காரருக்கு அதே ஊரில் வேறு வீடு ஏதும் சொந்தமாக இருக்கக் கூடாது.

குடியிருப்பு வீடு அல்லாத கட்டடங்கள் விஷயத்தில், அந்தக் கட்டடத்தைக் காலி செய்யச் சொல்லும் உரிமையாளருக்கு, வேறு எந்தக்கட்டடமும் அதே ஊரில் சொந்தமாக இருக்கக் கூடாது.

இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலுமே வீடு அல்லது கட்டட சொந்தக்காரர் மட்டுமின்றி, அவரது குடும்பத்தைச் சேர்ந்த யாரும் கேட்க உரிமை உண்டு. ஆனால் அப்படிக் கேட்கிறவருக்கும் வேறு எந்த வீடு அல்லது கட்டடம் அந்த ஊரில், சொந்தத்தில் இருக்கக் கூடாது.

ஒரே வீட்டில், ஒரு பகுதியில் இருக்கும் வீட்டுச் சொந்தக்காரர், அடுத்த பகுதியில் குடியிருப்பவரை தமக்கு அதிக இடம் தேவை என்று காரணம் காட்டி, காலி செய்யச் சொல்லலாம். இவ்விஷயத்தில் சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யாமல் இருக்க, ஒரு வழியும் செய்யப்பட்டிருக்கிறது.

1. தனக்குக் கூடுதலாக, இடம் தேவை என்று குடியிருப்பவரைக் காலி செய்யச் சொல்லிவிட்டு, ஒரு மாதத்துக்குள் அதில் குடி புகவில்லை என்றால்;
2. அல்லது, அப்படி வீட்டைப் பெற்றுக் கொண்டு விட்டபிறகு ஆறு மாதங்கள் அதில் இருந்து விட்டு, பிறகு காலி செய்துவிட்டால்—



முன்பு குடியிருந்தவர், மறுபடியும் வாடகைக் குடியிருப்புச் சட்டத்தின் கீழ், தமக்கே மறுபடி அந்தவீட்டை வாடகைக்குக் கொடுக்கச் சொல்லி விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

இன்னொரு காரணத்துக்கும் வீட்டுக்காரர் குடியிருப்பவரைக் காலிசெய்யச் சொல்லலாம் — ரிப்பேர் செய்ய, அல்லது இடித்துக் கட்ட வேண்டும் என்று. வீட்டுச் சொந்தக்காரர் இந்தப்பிரிவை துஷ்பிரயோகம் செய்யாமல் இருக்கும் பொருட்டு, ஒரு வழிவகை சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது, வீட்டுச் சொந்தக்காரர் ஒரு மாதத்திற்குள் இடித்து விடவோ, ரிப்பேர் செய்து விடவோ துவங்கவில்லையானால், முன்னால் குடியிருந்தவர், தமக்கு மறுபடியும் அந்த இடத்தை வாடகைக்கு விடச் சொல்லிக் கேட்கலாம். நியாயமான வாடகையை நிர்ணயிக்கவும் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டம் இடம் தருகிறது. வீட்டுச்சொந்தக்காரரோ, குடியிருப்பவரோ, இருவருமே இதற்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். குடியிருப்பவரைப் போலவே, வீட்டுச் சொந்தக்காரரும் விண்ணப்பிப்பது உண்டு!

வீட்டுச் சொந்தக்காரரின் 'கொடுமை' எல்லாருக்கும் தெரிந்தது தான். ஆனால் குடியிருப்பவரும், என்றைக்கோ நிர்ணயித்த வாடகையையே தொடர்ந்து கொடுத்துக் கொண்டு குடியிருப்பதையும் பலர் உணர்வதில்லை. வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் ஒரு முக்கிய பிரிவு இருக்கிறது. குறிப்பிட்ட சில வசதிகளை வீட்டுச் சொந்தக்காரர் திடீரென்று நிறுத்தி விட்டால், அவற்றை மறுபடி செய்து கொடுக்க, குடியிருப்பவர் நீதிமன்றம் மூலம் விண்ணப்பித்துக் கொள்ளலாம். வசதிகள் என்றால் — தண்ணீர், மின்சாரம், விளக்குகள், போக்குவரத்து வழி, மாடிப்படி வழி, லிஃப்ட், டாய்லெட் அறைகள்.

ஆனால் தகுந்த, நியாயமான காரணங்கள் வீட்டுச் சொந்தக்காரரின் பக்கம் இருந்தால், இப்படி எந்த ஒரு வசதியையும் நிறுத்திக் கொண்டு விட அவருக்கும் வகை செய்கிறது இந்தச்

சட்டத்தின் இன்னொரு பிரிவு. உதாரணமாக, குடியிருப்பவர் மின்சாரக் கட்டணத்தைக் கட்டாமல் இருப்பது போன்றவை இந்தக் காரணங்களில் ஒன்று.

வாடகைக் கட்டுப்பாடு அலுவலரின் ஆணையை எதிர்த்து, 'அப்பலெட்.' அதிகாரியிடம் மனுச் செய்துகொள்ளலாம். மறுபரிசிலனை விசாரணைக்கு உயர்நீதி மன்றத்துக்கும் செல்ல வழி இருக்கிறது.

13. காபிரைட் உரிமை:

காபிரைட் என்பது கலை, இலக்கிய, சினிமா, நாடக இசைத் துறையில் ஒருவருக்குத் தனிப்பட்ட உரிமை அளிப்பது. முதல் உரிமையாளர், முதன் முதலாக அதை உருவாக்கியவரே.

முதலில் அப்படி ஒரு கலைப் படைப்பை உருவாக்கியவர், பத்திரிகையில் வேலை பார்க்கும் எழுத்தாளர் என்றால், வேறு எந்த ஒப்பந்தமும் அந்தப் பத்திரிகை உரிமையாளரையும் அதை எழுதிய ஆசிரியரையும் பாதிக்காத வரையில், அந்தப் பத்திரிகை முதலாளியே அதன் முதல் உரிமையாளர்.

புகைப்படங்கள், ஓவியங்கள், முழு உருவப் படங்கள், திரைப்படங்கள் இவற்றைப் பொறுத்தவரை, இவை யாருக்காக உருவாக்கப்பட்டதோ, அவர்கள் கொடுக்கும் விலைமதிப்புக்காக, அவர்களுக்கே முதல் உரிமை.

அரசாங்கத்திற்காகச் செய்யப்பட்ட இது போன்ற பணிகளில், அரசுக்கே முதல் காபிரைட் உரிமை உண்டு.

காபிரைட், சட்டப்படி செல்லுபடியாக வேண்டும் என்றால், சம்பந்தப்பட்டவர்கள் எழுத்து மூலம் செய்து கொண்ட ஒப்பந்தம் ஏதும் இருந்தாக வேண்டும்.

படைப்பாளியின் வாழ்நாள் முழுவதும் காபிரைட் உரிமை உண்டு. என்பது மட்டுமல்ல, அதற்குப் பிறகும் 50 வருஷங்களுக்குக் காபிரைட் செல்லுபடியாகும்.

புனை பெயரில் எழுதியிருந்தாலோ, பெயரே போடாமல் எழுதியிருந்தாலோ கூட காபிரைட் உரிமை, வெளியிடப்பட்ட நாளிலிருந்து ஐம்பது வருஷங்களுக்கு உண்டு. புகைப்படங்கள் திரைப்படங்கள், அரசுத்துறை படைப்புகள் எல்லாவற்றுக்கும் இந்த ஐம்பது வருட வரையறை உண்டு.

சட்டப்படி முன்னுரிமை படைத்த படைப்பாளியின் அனுமதி இன்றி, அவரது படைப்பைக் கையாண்டால் அது குற்றமாகும். நல்லெண்ண நோக்கோடு, காபிரைட் செய்யப்பட்டது என்பதை உண்மையாகவே அறியாது மீறப்பட்டால் ஒழிய, இவற்றுக்குத் தண்டனை உண்டு. காபிரைட் உள்ள படைப்புக்களை உபயோகித்து, விற்று, வாடகைக்குக் கொடுத்துச் சம்பாதித்து, வியாபாரப் பொருளாகப் பயன்படுத்தினால் இவை காபிரைட் மீறல் குற்றங்களில் அடங்கும்.

சில, காபிரைட் உரிமை மீறல் குற்றங்களிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கின்றன.

தனிப்பட்ட படிப்பு, அல்லது ஆராய்ச்சியின் பொருட்டோ, விமர்சனங்களின் பொருட்டோ, விஷயங்களை விவாதிக்கும் பொருட்டுக் கையாண்டாலோ, இதை மீறல் என்று சொல்லுவதில்லை.

தடை கோரியும், நஷ்ட ஈட்டுத் தொகை கோரியும் காபிரைட் மீறல் வழக்குகளைப் போடலாம். காபிரைட் சட்டம் கொண்டு வரப்பட்டதன் முக்கிய நோக்கங்கள் இரண்டு:

1. ஒரு படைப்பாளியின் படைப்பின் பலனை, அவரைத் தவிர வேறு யாரும் அநுபவித்து விடுவதைத் தடுப்பது.
2. அந்தப் படைப்பாளியைப்போலவே இன்னொருவர் சுயமாக, அதே போன்ற ஒரு படைப்பை உருவாக்குவதில் தமது சொந்தக் கற்பனைத் திறனை உபயோகித்திருக்கும் பட்சத்தில், அவரது முயற்சிகளையும் தடுக்காமல் இருப்பது.

ஒருமுறை நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் முன்பு, ஒரு காபிரைட் வழக்கு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி அய்யர் சொன்னார் கிண்டலாக: ''நான் எப்படி பிரதிவாதிக்கு எதிராக, வாதிக்குச் சாதகமாகத் தீர்ப்புச் சொல்ல முடியும் — இருவருமே மூன்றாவது நபரிடமிருந்து காபி அடித்திருக்கும் போது?''

14. மான நஷ்ட வழக்கு

மான நஷ்ட வழக்குகள் என்றால் என்ன என்று முதலில் தீர்மானித்துக் கொள்ளுவது நல்லது.

''அவன் மீது மான நஷ்ட வழக்குப் போடுவேன்!'' என்று கோபா

தொடர்ச்சி 47 பக்கம் பார்க்க

அழகுககும இளமைக்கும் சாரதா'ஸ் பட்டுப் புடவைகள்



SARATHA'S
MADRAS & TRICHY

சாரதா'ஸ்

(முகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு அதிர்ஷ்டமான இடம்)

தன் பில்டிங்	
மவுண்ட் ரோடு	N.S.B. ரோடு
சென்னை-600 002	திருச்சி-620 002
போன் : 87177	போன் : 27077

தீபாவளி முடிய ஞாயிற்றுக்கிழமை விற்பனை உண்டு



...ஏனெனில் ஒவ்வொருவரும் தங்கள் கற்பனைக்கு
ஏற்றவாறு வாழ்விற்கு வடிவம் கொடுக்கின்றனர்

உங்கள் அருகாமையில் உள்ள மஃபத்லால் அங்கீகாரம்பெற்ற ரீடெய்ல் ஸ்டோருக்கு விஜயம் செய்து எங்களுடைய மிகவும் நவீனமான டிசைன் தொகுப்பைக் காணுங்கள்.





வேசத்தில் சர்வ சாதாரணமாகச் சொல்லி விடுவது வழக்கம். ஒருவருக்குப் பிடிக்காத வார்த்தைகளை இன்னொருவர் சொல்லிவிட்டார் என்பது தான் இதில் சாதாரணமாக நிகழ்ந்திருக்கும். நடைமுறையில்வெறுமனே மரியாதைக் குறைவாகப் பேசிவிட்டால் மட்டுமே அவர் மீது மான நஷ்ட வழக்குத் தொடர்ந்து, நஷ்ட ஈடு கேட்க முடியாது.

சரியாகச் சொல்ல வேண்டுமானால், ஒருவரது அந்தஸ்தைப் பொது மக்கள் பார்வையில் குறைக்கும் அளவுக்கு, வெளிப்படையாகக் குறை கூறி இருந்தால் மட்டுமே மான நஷ்ட வழக்குத் தொடர வாய்ப்பு உண்டு. பொது மக்கள் என்றால் ஏதோ உயர்ந்த நிலையில் உள்ள முக்கிய சமூகப் புள்ளிகள் என்று அர்த்தமல்ல. மயிலாப்பூர்—பாரிமுனை பஸ்ஸில் பயணம் செய்யும் சாதாரண பொதுஜனம் ஆகவும் இருக்கலாம். ஒரு குறிப்பிட்ட நபரை, சமூகத்தில் அவரது கௌரவத்துக்கு இழுக்கு உண்டாகும் வகையில் பேசிவிட்டதாக, சிந்தனைப் பக்குவம் உள்ள நபர்கள் (Right thinking people) மனத்தில் படவேண்டும். இன்னார்மீது இன்ன காரணத்துக்காக மான நஷ்ட வழக்குத் தொடரப் போவதாகப் பத்திரிகையில் அறிவிப்புச் செய்துவிடுவது உண்டு. மான நஷ்ட வழக்கைத் தொடருமுன், தனக்குத் தேவையான சாட்சியங்களைத் தயார் செய்து வைத்துக் கொள்ளுவது நல்லது. தமது கௌரவம் உண்மையிலேயே பாதிக்கப்பட்டிருப்பதாக நம்பும் பட்சத்தில், தமது வழக்கில் வெற்றியின் சாத்தியக் கூறுகள் பற்றி அறிந்து கொள்ள இது உதவும்.

சட்டசபையிலும், பாராளுமன்றத்திலும் பிரதிநிதிகள் சொல்லும் சில குற்றச்சாட்டுகளுக்கு, இந்த மான நஷ்ட வழக்கிலிருந்து விலக்குஅளிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் பிரதிநிதிகள் என்ற முறையில், அவர்கள் சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிட எதுவும் தடையாக இருக்கலாகாது என்பதே இதன் நோக்கம்.

அது போலவே, தனது முன்னாள் ஊழியரின் நடத்தை பற்றி, அவர் வேலை ஏற்கப் போகும் மற்றொரு நிறுவனத்தின் தலைவருக்கு, எடுத்துச் சொன்னால், அது தவறாக இருந்தாலும் கூட, அதற்குச் சட்டப்படி பாதுகாப்பு உண்டு.

ஓர் ஊழியர் மிக மோசமான நடத்தையுள்ளவர் என்று அறிந்த நிறுவனத் தலைவர், அவர் இன்னொரு நிறுவனத்தில் வேலைக்கு அமர்வதும் சமூகத்திற்கு இழைக்கும் துரோகமே என்று கருதலாம். அதை அவர் வெளிப்படையாகச் சொல்லி, மான நஷ்ட வழக்கில் மாட்டிக் கொள்ள விரும்பாமல் இருக்கலாம். ஒரு தனி மனிதனுக்குக் கிடைக்கும் பலனைவிட, சமூகத்திற்கு நஷ்டமோ, துன்பமோ விளையக் கூடாது என்பது இங்கே கருத்தில் கொள்ளப்படுகிறது.

மூன்றாவதாக, பொது மக்களின் நலன் கருதித் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் (நூல் வழியாக, மேடை நாடகம் மூலமாக, அல்லது முக்கியப் புள்ளிகளின் சில வெளிப்படையான பேச்சு அல்லது நடவடிக்கைகள் மூலமாக). இவற்றில் உள்ள நியாயத்தை நிர்ணயிப்பது எப்படி? அவை நேர்மையான எண்ணத்தோடு தெரிவிக்கப்பட்ட கருத்தாகவோ செய்யப்பட்ட செயலாகவோ இருக்கவேண்டும். கெட்ட எண்ணத்தோடு, தெரிவிக்கப்பட்டிருப்பது நிரூபணமாகி விட்டால், அந்த நபரால் தெரிவிக்கப்பட்ட கருத்து மான நஷ்ட வழக்கிற்கு உள்ளாகிவிடும். அதனால், தெரிவிக்கப்படும் கருத்துக்கு நியாயமான காரண காரியம் (Justification) இருக்க வேண்டும். குறிப்பிட்ட பேச்சு உண்மையாகவே தரக் குறைவானதாய் இருந்து, நிரூபணமும் ஆகிவிட்டால் நஷ்ட ஈடு செய்ய வேண்டியதாகிவிடும்.

15. புரோ நோட்டுக்கள்:

பிராமிஸரி நோட்டுக்களைத்தான் சுருக்கமாக புரோ நோட்டு என்கிறோம். ஒரு குறிப்பிட்ட நபருக்கு,



ஒரு குறிப்பிட்ட தொகையை, அவர் கேட்கிற போது கொடுப்பதாக ஒப்புக் கொள்ளும் பத்திரம். இந்தப் பத்திரத்தில், குறிப்பிட்ட வார்த்தைகள்தாம் உபயோகிக்கப்பட வேண்டும் என்று நிபந்தனை ஏதும் இல்லை. அர்த்தம் சரியாக இருக்க வேண்டும். உதாரணம்:

''100, வாரன் சாலை, மயிலாப்பூர் சென்னை—4—ல் வசிக்கும் ராமன் என்பவருடைய மகனை கிருஷ்ணனாகிய நான், 200, மவுண்ட்ரோடு, சென்னை—2—ல் வசிக்கும் சீனிவாசனுக்கு, அல்லது அவர் உத்தரவு பெற்ற நபருக்கு இன்று நான் அவரிடமிருந்துபெற்றுக்கொண்டரூ.1000-ஐ (ரூபாய் ஆயிரம் மட்டும்) ஒன்பது சதவீத வட்டியுடன், கேட்கப்படுகிற போது திருப்பிக் கொடுப்பதாக உறுதி கூறுகிறேன்.''

இடம்:

தேதி: கையொப்பம்.

பணம் பெற்றுக் கொண்டவர், புரோ நோட்டில் 25 பைசா மதிப்புள்ள ரெவின்யூ ஸ்டாம்பு ஒட்டி, கையெழுத்திட வேண்டும். இது தற்போது சிலவேளைகளில் கிடைப்பதில்லை. அதற்குப் பதிலாக இரண்டு இருபது பைசா விலையுள்ள ரெவின்யூ ஸ்டாம்புகளை ஒட்டிக் கையெழுத்திடலாம். சாட்சிக் கையெழுத்து தேவையில்லை. ஆனால் பின்னாளில் ஏதானும் தகராறு எழுமானால் அதற்குச் சாட்சி உதவியாயிருக்கும்.

புரோ நோட்டில் தேதி இருக்க வேண்டும். புரோ நோட்டு மூன்று வருஷங்களுக்குத் தான் செல்லுபடியாகும். அதற்குப் பிறகு புரோ நோட்டைப் புதுப்பிக்க வேண்டும். இடையே கொடுக்கப்பட்ட பணத்தை வரவு வைத்துக் கொண்டு விடலாம், புதுப்பிக்கப்படும் புரோ நோட்டில்.

16. குழந்தைகள் பாதுகாப்பு

பெற்றோரில், தகப்பனாரோ, தாயாரோ இறந்துவிட்டால் யாரிடம் குழந்தைகள் இருக்க வேண்டும்? இந்து சட்டப்படி, மைனர் குழந்தைகள் விஷயத்தில் முதலில் தகப்பனாருக்குத்தான் உரிமை. தகப்பன் இல்லாது போனால் தாயாருக்கு உரிமை.

ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தையைப் பொறுத்தவரை, தாயாருக்குத் தான் வளர்க்கிற உரிமை உண்டு. இருந்தாலும் கூட, குழந்தையின் நன்மை மட்டுமே கருத்தில் கொள்ளப்பட்டு, குறிப்பிட்ட வழக்கின் பின்னணி ஆராயப்பட்டு, அதன் அடிப்படையில் நீதி மன்றம்தான் குழந்தை யாரிடம் வளர வேண்டும் என்று தீர்மானிக்க வேண்டும்.

தாயாரோ, தகப்பனாரோ மறுமணம் செய்து கொண்டு போய்விடும் போது அசாதாரண வழக்குகள் உருவாகும். ஒரு இந்து விதவை மறுமணம் செய்து கொள்வதால் மட்டுமே தனது குழந்தையை வைத்துக் கொள்ளும் உரிமையை இழந்து விடுவதில்லை. ஆனால் அவள் மாமனாருக்கு, குழந்தையை வைத்துக் கொள்ளும் உரிமைமறுக்கப்படுவதற்கில்லை. தகராறு ஏற்பட்டால் நீதிமன்றமே குறிப்பிட்ட வழக்கின் பின்னணியை ஆய்ந்து தீர்ப்பு கூற முடியும்.

தமிழ் வடிவம்: சித்தார்த்

வண்ணப்படம், புகைப்படம்: யோகா



நான் கொண்டு வந்த மிட்டாய் பொட்டலத்தைப் பையிலிருந்து எடுத்தேன். என் பெண் நீமா தந்திருந்த சிவப்பு நீலப் பென்சிலையும் எடுத்தேன். உறைபனியில் ஒரு பள்ளம் தோண்டி, அவற்றை அதனுள் வைத்தேன். ''ஊரில் நமக்குப் பிரியமானவர்களுக்கும், நெருங்கியவர்களுக்கும் மிட்டாய் கொடுக்கிறோம். எவரெஸ்ட் எப்போதும் என் அன்புக்குரியதாக இருந்து வந்திருக்கிறது. இப்போது, நெருக்கமாகவும் வந்து விட்டது'', என்று எண்ணிக் கொண்டேன். பள்ளத்தை மூடிய போது மௌனமாகப் பிரார்த்தனை செய்தேன். நன்றியையும் செலுத்தினேன். ஏழுதரம் நான் எனது கனவு மலைக்கு வந்திருக்கிறேன். இந்தத் தடவை — ஏழாவது — கடவுள் அருளால் கனவு நனவாகி விட்டது.

—டென்ஸிங் தமது சுயசரிதையில் எழுதியது. கோ. வீ. ராஜேந்திரன்.

இலவச இணைப்பு
பகுதி II

சட்ட சம்பந்தமாக, சாதாரணமாக எழும் சில கேள்விகளும் அவற்றுக்கான பதில்களும்.

பதில்கள் அளித்தவர்: சட்டக்கல்லூரி பேராசிரியரும் வழக்கறிஞருமான திரு. ஆர். எம். கிருஷ்ணராஜு



○ வழக்கறிஞர் திரு. ஆர். எம். கிருஷ்ணராஜு

1. உயில் என்றால் என்ன?

தன்னுடைய ஆயுட் காலத்துக்குப் பின்னர் தன்னுடைய சொத்துக்களைப் பற்றிய ஏற்பாடுகளை வெளிப்படுத்தும் சட்டபூர்வமான விருப்பங்களையே உயில் என்று இந்திய மரபுரிமைச் சட்டம், பிரிவு 2 (h) சொல்லுகிறது. தான் இறந்த பிறகு, தன்னுடைய சொத்துக்களை யார், எப்படி அடைய வேண்டும் என்று, ஒருவர் உயிருடன் இருக்கும் போதே தெரிவிக்கும் ஆசைகளுக்குப் பெயர் தான் உயில்.

2. யார் வேண்டுமானாலும் உயில் எழுதலாமா?

பதினெட்டு வயதைக் கடந்த, வயது வந்த, சித்த சுவாதீனமுள்ள எவரும் தம்முடைய சொத்துக்களைப் பற்றி உயில் எழுதலாம்.

3. உயிலைப் பதிவு செய்தாக வேண்டுமா?

உயிலைப் பதிவு செய்தாக வேண்டுமென்று கட்டாயமில்லை. விரும்பினால் பதிவு செய்து கொள்ளலாம். இந்தியப் பதிவுச் சட்டத்தின் 17—ஆவது பிரிவு, சில வகையான பத்திரங்களை மட்டுமே கட்டாயம் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறது. உயில் அந்த வகையைச் சேர்ந்தது அல்ல. ஆகையால் உயிலைப் பதிவு செய்ய வேண்டிய கட்டாயமோ, அவசியமோ இல்லை.

4. உயில் எழுதத் தேவையான விதிகள் என்ன?

ஏதாவது சொத்து இருக்க வேண்டும் என்பது தான் கஷ்டமான விதி! மற்றதெல்லாம் ரொம்ப சிம்பிள் தான்: நீங்களே எழுதிக் கையெழுத்திடலாம். நீங்கள் கூறி, மற்றவர் எழுதியதில் கையெழுத்தோ அல்லது கைரேகையோ பதிக்கலாம். எக்காரணத்தினாலாவது உங்களால் கையெழுத்திடவோ, கைரேகை பதிக்கவோ சாத்தியமில்லை என்றால், உங்கள் உத்தரவின்படி, உங்களுக்காக வேறு யாராவது கூட கையெழுத்திடவோ, கைரேகை பதிக்கவோ செய்யலாம்.

உயிலுக்குக் குறைந்தது இரண்டு சாட்சிகளேனும் இருக்க வேண்டும். அல்லது இரண்டு சாட்சிகள் முன்னர், உயிலைத் தம்முடையது என்று உயில் அளித்தவர் ஒப்புக் கொள்ள வேண்டும்.

5. உயில்களில் பல வகைகள் உண்டா?


உண்டு. முக்கியமாக இரண்டு வகைகள்: ஒன்று உரிமை பெற்ற உயில்கள். மற்றொன்று உரிமை அற்ற உயில்கள்.

ஒரு ராணுவ வீரர் போர்ச் செயல்களில் ஈடுபட்டிருக்கையில், தன்னுடைய சொத்துக்களைப் பற்றிய உயிலை, எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ உருவாக்கலாம். அப்படிப்பட்டவை உரிமை பெற்ற உயில்கள். அவற்றைத் தம் கைப்பட எழுதினால் கையெழுத்திட வேண்டிய, அல்லது சான்று ஒப்பமிட, அவசியமில்லை. வேறு எவரேனும் எழுதியதாக இருப்பின், உயில் அளித்தவரின் கையொப்பம் மட்டும் இருந்தால் போதும். கையெழுத்தும் இல்லை என்றால், உயில் அவரால் அளிக்கப்பட்டது என்பதை மெய்ப்பித்தாலே போதுமானது.

இராணுவ, விமான, கப்பற்படையைச் சேர்ந்தவர்கள், இரண்டு சாட்சிகள் முன்னிலையில் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்திக் கூட உயில் உருவாக்கலாம். மற்றெல்லா எழுதப்பட்ட, சான்றுக் கையொப்பமிட்ட உயில்களும் உரிமையற்ற உயில்கள் வகையைச் சேரும்.

6. உயில்களை ரத்துச் செய்ய இயலுமா?

உயிலை அளித்தவர், உயிர் துறப்பதற்கு முன், தாம் அளித்த உயிலை ரத்து செய்யலாம். இது உன்னதமான ஒரு தன்மை.



7. செவிடரும், குருடரும், ஊமைகளும் உயிலை உருவாக்கலாமா?

உருவாக்கலாம். அவர்களுக்குத் தாங்கள் மேற்கொண்டிருக்கும் காரியத்தைப் பற்றி நன்கு தெரிந்திருந்தால்.

8. உயிலைச் செல்லாது என்று சட்டம் எப்போது சொல்லும்?

உயிலை அளித்தவருக்கு, சட்டப்படியான தகுதிகள் இல்லையென்றால் உதாரணமாக, வயது வராதவர், சித்த சுவாதீனம் இல்லாதவர்.

உயில் மோசடியாகவோ, பொய்யாகவோ, வற்புறுத்தலாலோ உருவாக்கப் பட்டிருந்தால்.

உயில் நடைமுறையிலுள்ள சட்டங்களுக்கு முரண்பட்டதாக இருந்தால்.

9. கோர்ட் அவமதிப்பும் பற்றி, பாமரர்களும் புரிந்து கொள்ளுகிற மாதிரி சொல்லுங்கள்?

எந்த மாதிரிப் பாமரர்கள்? கோர்ட்டுக்கு ஏற்கெனவே போன பாமரர்களா? இனி போகப் போகிற பாமரர்களா?

நீதிமன்றத்தின் தீர்ப்பு, டிகிரி, கட்டளைகள், உத்தரவு போன்றவற்றை வேண்டுமென்றே மீறும் சிவில் அவமதிப்புக்களையும், எழுத்து மூலமாகவோ வாய்மொழியாகவோ, சைகைகளாலோ அல்லது வேறு வகையாலோ, நீதிமன்றங்களின் அதிகாரங்களைக் குறைத்தோ அவமதித்தோ, நீதிமன்ற நடவடிக்கைகளுக்குக் குந்தகமோ, தடையோ ஏற்படும்படியாக மேற்கொள்ளப்படும் கிரிமினல் அவமதிப்புக்களையும் 'தண்டிக்கிற' அதிகாரத்தை உயர்நீதி மன்றங்களும், உச்ச நீதி மன்றமும் பெற்றுள்ளன.

சுருக்கமாகக் கூறப்பட்டுள்ள இந்தப் பதிலில், நீதிமன்ற அவமதிப்பு என்ற வார்த்தைக்கு விளக்கம் கூற, லார்ட் டென்னிங்கையும் நீதிபதி கிருஷ்ணய்யரையும் மேற்கோள் காட்டி எழுத ஆரம்பித்தால், இந்த இலவச இணைப்பு தாங்காது! ஒன்று சொன்னால் புரிந்து கொள்வீர்களா?

நீதிமன்றங்களின் புனிதத்தையும், மேன்மையையும் புரிந்து கொள்ளாமல் அவற்றைக் களங்கப்படுத்துவது வேறு; நீதிமன்றங்களின் கண்ணியங்களையும் கடமைகளையும் காக்கக் கவலையோடு தரப்படும் நியாயமான விமர்சனங்கள் வேறு.

10. கணவனோ, மனைவியோ விவாகரத்துச் செய்ய விரும்பினால், சட்டப்படி என்ன செய்ய வேண்டும்?

இந்து திருமணச் சட்டம் 13–வது விதியின் கீழ், கீழ்க்கண்ட காரணங்களில் ஒன்றேனும் நிரூபிக்கப்பட வேண்டும்:

1. திருமணத்திற்குப் பிறகு, வேறொரு நபருடன் தானாக விரும்பி உடலுறவு கொள்ளுதல்.
2. திருமணத்துக்குப் பிறகு துன்பப்படுத்துதல்.
3. மனு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னர், இரண்டாண்டுகளுக்குக் குறைவில்லாமல் பிரிந்து இருத்தல்.
4. மதம் மாறி இந்து என்ற நிலையை இழந்திருத்தல்.
5. குணப்படுத்த முடியாத அளவிற்குச் சித்த சுவாதீனம் இழந்திருத்தல்; அல்லது
6. தொடர்ந்தோ, இடைவிட்டோ பொறுத்துக் கொள்ள இயலாத அளவிற்கு மன அமைதி இழந்தவராக இருத்தல்.
7. குணப்படுத்த முடியாத, தீவிரமான தொழுநோயால் பீடிக்கப் பட்டிருத்தல்.
8. தொற்றக் கூடிய பால்வினை நோயால்பாதிக்கப்பட்டிருத்தல்.
9. இல்லறத்தைத் துறந்து, சந்நியாசி ஆதல்.
10. ஏழாண்டுகளுக்கோ, அதற்கு மேலாகவோ உயிரோடு இருப்பதாகவே அறியாமல் இருத்தல்.



இவை, சில முக்கிய காரணங்கள் தாம். மற்ற எல்லாக் காரணங்களையும் சட்டத்தில் இருக்கிறபடி சொன்னால் உங்களுக்குத் தலை சுற்றும்!

11. ஓராண்டுக்கு முன்னர் விவாகரத்துச் செய்து கொண்ட மனைவி கிரிமினல் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து, ஜீவனாம்சம் பெறப் போவதாகக் கணவனை மிரட்டுகிறாள். இது சாத்தியமா?

சாத்தியம்தான். விவாக ரத்துச் செய்து கொண்ட பின்வரும், மறுமணம் செய்து கொள்ளாத வரையில், மனைவி என்ற அந்தஸ்தின் அடிப்படையில் அவளுக்கு ஜீவனாம்சம் கோரும் உரிமை உண்டு.

12. மாதம் ஒன்றுக்கு அறுநூற்றைம்பது ரூபாய் சம்பளம் பெறுபவர் ஒருவர். தொழிற்சாலையில் வேலை செய்யும் போது, விபத்தில் சிக்கி ஊனப்பட்டு விட்டால், நிர்வாகத்திடமிருந்து நஷ்டஈடு பெற என்ன செய்ய வேண்டும்?

ஒன்று — தொழிற்சாலை நிர்வாகத்தின் மீது சிவில் வழக்குத்தொடர்ந்து, நஷ்ட ஈடு தொகையைக் கோரலாம்;

மற்றொன்று — ஆயிரம் ரூபாய் வரை சம்பளம் பெறும் தொழிலாளர்கள் அனைவரும் விபத்தில் ஏற்பட்ட ஊனங்களுக்காக, 1923—ஆம் வருடத்திய வேலையாள் இழப்பீடு சட்டத்தின் மூலம் மனு தொடர்ந்து, விபத்து, வேலையில் ஈடுபட்டிருந்த போது நிகழ்ந்தது என்பதை நிரூபித்து, தொழிற்சாலை நிர்வாகத்திடம் நஷ்ட ஈடு கோரலாம்.

ஆனால் இரண்டில் ஏதாவது ஒரு பரிகாரத்தையே நாட வேண்டும்.

13. வீட்டுச் சொந்தக்காரர் ஒருவர் வடநாட்டு யாத்திரைக்குப் போனவர், ஆறு மாதங்களாகியும் திரும்பி வரவில்லை. குடியிருப்பவர், வீட்டுக்குரிய வாடகையை என்ன செய்ய வேண்டும்?

வீட்டுச் சொந்தக்காரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்டின் முகவரி தெரியவில்லை என்றால், வாடகைப் பணத்தை அவர்களுடைய முகவரி தெரிகிற வரை, தமிழ்நாடு கட்டிடங்கள், வாடகைக் கட்டுப்பாட்டு சட்டம் 9—ஆவது பிரிவின்படி, நியமிக்கப்பட்ட அதிகாரியின் கோர்ட்டில் செலுத்தி விடலாம்.

14. வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொண்டிருப்பவர், அண்டை அயலில் இருப்பவர்களுக்கு இடையூறாக நண்பர்களுடன் குடிப்பதும் கூச்சலிடுவதுமாக இருக்கிறார். வீட்டை விட்டு அவரைக் காலி செய்ய முடியுமா?

பேஷாக முடியும், அவருடைய செயல்களும், நடத்தையும் அண்டை அயலாருக்குத் தொல்லையாக இருக்கிறது என்பதை மெய்ப்பித்தால்.

15. ஒரு கலர் டி. வி. வாங்கி, இரண்டு வாரங்கள் உபயோகித்த பிறகு அதன் தரத்தில் அதிருப்தி அடைந்திருக்கிறார். கடைக்காரரிடமிருந்து தாவா செய்து, டி. வி.யின் விலையைத் திரும்பப் பெற முடியுமா?

கேவியட் எம்ப்டர் (Caveat Emptor) அதாவது 'வாங்குவோரே, ஜாக்கிரதை!' என்ற அற்புதமான சட்ட விதி, தாவா செய்து, டி.வி.யின் கிரயத் தொகையைப் பெற முடியாது என்கிறது.



வாங்குபவரின் அஜாக்கிரதையை எல்லாம் சட்டம் அநுமதித்தால் கடைக்காரர்களின் கதி அதோ கதிதான்!

16. இந்து திருமணச் சட்டத்தில் ஏகப்பட்ட மாறுதல்களாமே?

இருக்காதோ பின்னே? எத்தனை யுகங்களுக்குத் தான் புரோகிதர் வைத்து, அம்மி மிதித்து அருந்ததி பார்த்துத் தாலி கட்டிக் கொண்டிருப்பதாம்? திருமண வயதடைந்த ஆணும் பெண்ணும்,
இரண்டு மாலைகள்,
இரண்டு சாட்சிகள் —
போதுமே! பிறக்கிற குழந்தைகளுக்கும், பெண்ணுக்கும் சட்டத்தின் பாதுகாப்பும் அங்கீகாரமும் அமோகமாகக் கிடைத்து விடுகிறது!



17. 1956—க்குப் பிறகு, இந்துக்கள் மரபுரிமைச் சட்டப்படி, பெண்களுக்குப் பெரிய அளவில் பலன்கள் ஏற்பட்டிருக்கின்றனவாமே? சுருக்கமாக என்னென்ன என்று சொல்ல முடியுமா?

1. மகன்களுக்கும், மனைவிமார்களுக்கும் ஈடாக, மகள்களுக்கும் புதிய அந்தஸ்து கிடைத்திருக்கிறது.
2. தகப்பனார் சொத்தை மகன்கள் மட்டும் பெற்று அநுபவித்துக் கொண்டிருந்த காலம் மலையேறி விட்டது. மகன்களுக்கும், மகள்களுக்கு இணையாக சமபாத்தியதை கிடைத்து விட்டது— தகப்பனாரின் விருப்புறுதிசெய்யப்படாத சொத்துக்களில். (தகப்பனார் இறப்பதற்கு முன்னர், எந்த ஏற்பாடுகளும், செய்யாமல் விட்டுச் சென்ற சொத்துக்களே, சட்டத்தின் மொழியில் விருப்புறுதி செய்யப்படாத சொத்துக்கள் (Intestate) Properties எனப்படுகின்றன.)
3. திருமணமான மகள்களுக்கும், திருமணமாகாத மகள்களுக்கும் ஒரே மாதிரியான வாரிசு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

சுருக்கமாக இதுதான். இன்னும் விவரங்கள் வேண்டுமானால், உங்களுடைய குறிப்பிட்ட பிரச்சினையுடன் வழக்கறிஞரைப் பாருங்கள்.

18. வீட்டில் மனைவியை அடைத்து வைத்துவிட்டு, கொடுமையும் படுத்திக் கொண்டு, திருமணமாகாதவன் போல் நடித்தும் பல பேரிடம் வரதட்சணை வாங்கிக் கொண்டு வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் ஒரு நபரைச் சட்டம் தண்டிக்க, என்ன நடவடிக்கை தேவை?

குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பு (Criminal Procedure Code) படி, குற்றமிழைக்கும் எவர் மீதும், யார் வேண்டுமானாலும் போலீசிடமோ, மாஜிஸ்திரேட்டிடமோ பிராது கொடுத்து, குற்றத்தை உரிய முறையில் மெய்ப்பித்து, தண்டனை வாங்கிக் கொடுக்கலாம்.

ஆயிரம் அனுதாபங்களைக் காட்டினும், ஒரு சரியான நடவடிக்கையே சமுதாய நன்மைக்கு ஏற்றது.

'நீதியை நிலைநாட்ட அரசு மேற்கொண்டு அமலாக்கும் நெறிமுறைகளுக்குப் பெயரே சட்டங்கள்' என்கிறான் சட்ட வல்லுனன் சால்மண்ட்.

'அரசாங்கத்தின் வாயிலாக வெளிப்படும் மக்களின் விருப்பங்களுக்குப் பெயரே சட்டங்கள்' என்கிறான் ஆலண்ட்.


சட்டம் எதுவானால் என்ன? நம்முடைய உரிமைகளைப் பேணுகிற, காக்கிற, வளர்க்கிற விதிகள் மட்டுமே நீடித்தும், நிலைத்தும் நிற்கும். சட்டங்களால் வாழ்க்கையின் நியதிகள் நிச்சயிக்கப்பட்டிருக்கின்றன. சட்டங்கள் இல்லை என்றால் —

யோசித்துப் பாருங்கள். உங்கள் அழகான மனைவியோடு நீங்கள் உலா போக முடியுமா?

தொகுப்பு: சாருகேசி

[பி.கு: இந்த இலவச இணைப்பில் கண்டதுதவிர வாசகர்களுக்குச் சந்தேகங்கள் இருந்தால் தபால் கார்டில் சட்டம் என்ன சொல்கிறது? என்று தலைப்புத் தந்து எழுதி அனுப்பலாம். வழக்கறிஞரிடம் கலந்தாலோசித்து உரிய பதில்களை கல்கியில் வெளியிட முயல்கிறோம். ஆசிரியர்.]

ரமா விஜயம்



கிணு. கிணு. என்ற சைக்கிள் மணியின் ஓசையைக் கேட்டு, கதவைத் திறந்து பார்த்தேன். தபால் காரர்தான். ஒரு கவரைக் கொடுத்தார், என்னிடம்.

யார் எழுதி இருப்பார்கள்? என்று கவரைக் கவனித்தவாறே கதவை மூடப் போன நான் 'ஹலோ' என்ற குரலைக்கேட்டு, நிமிர்ந்து பார்த்தேன். எங்கள் ஊர்ப் பெண்ணான 'ரமா'! பெரிய பணக்காரியான அவள் என் வீடு தேடி வந்திருக்கிறாளே என்று ஆனந்த அதிர்ச்சி எனக்கு.

''வா, ரமா, உள்ளே வா, உட்கார்'' என்று மிகக் கனிவாக உபசரித்தேன்.

நல்லவேளையாக ஓர் எலுமிச்சம்பழம் இருந்தது. அதை ஜூஸ் செய்து எடுத்து வந்து கொடுத்தேன் பவ்யமாக.

பத்திரிகை ஒன்றை நாசூக்காகப் புரட்டிக் கொண்டிருந்த ரமா, பெங்களூரில் கூட என்ன வெயில். என்றபடி ஜூஸை அருந்தினாள்.

ரமா, எங்கள் ஊரில், என்னோடுதான் படித்தாலும், நெருங்கிப் பழகவில்லை. நாங்கள் சாதாரண ரகம் — அவர்கள் மிகப் பெரிய பணக்காரர்கள். — அவளோடு பேசுவதே பெரும் பேறு என்று கூட ஒரு காலம் எண்ணி இருக்கிறேன். இப்போது என்னைப் பார்க்க வந்திருக்கிறாள்.

''ஆமாம் ரமா, நீயும் இந்த ஊரில் தான்இருக்கிறாயா? நாங்கள் இந்த ஊருக்கு வந்து நாலு மாதமாயிற்று. நாம், இனி அடிக்கடி சந்தித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். உன் வீடு இந்தத் தெருவில் தான் இருக்கிறதா? என் விலாசம் உனக்கு எப்படித் தெரிந்தது? நம் ஊரில் சொன்னார்களா? உன்னைப் பார்த்ததில் எனக்கு மிகவும் சந்தோஷம்'' என்று மூச்சு விடாமல் பேசினேன். ஒரே உற்சாகம் எனக்கு.

அவள் நடந்து வந்திருப்பதால் இதே தெருவில் தான் அவளும் இருக்க வேண்டுமென்றும், ஒரு காலம் எட்டாக்கனியாக நான் எண்ணி இருந்த அவள் சிநேகம் இப்போது தானாகவே கிட்டியது என்றும், இன்னும் என்ன என்னவோ எண்ணி சந்தோஷப்பட்டுக் கொண்டேன்.

''உன் விலாசத்தைத் தெரிந்து கொண்டு நான் வரவில்லை. இந்த வழியாக காரில் போய்க் கொண்டிருந்தேன். கார் டயர் பங்க்சர் ஆயிற்று. எனவே ஸ்டெப்னி மாட்ட, காரிலிருந்து இறங்கி நின்றேன். அப்போது நீ தபால் வாங்க வருவதைப் பார்த்தேன். தெருவில் நின்று கொண்டிருப்பதை விட இங்கு சற்று நேரம் இருந்து விட்டுப் போகலாம் என்று வந்தேன் அவ்வளவுதான்'' என்றாள்.

அப்போது தான் பார்த்தேன். கார் ஒன்று சற்று தூரத்தில் ஸ்டெப்னி மாற்றப்பட்டுக் கொண்டிருந்ததை — நான் விழித்துக் கொண்டிருக்கும்போதே, ரமாவும் புறப்பட்டுச் சென்றாள் காரை நோக்கி — மிடுக்காக.

தலையில் யாரோ ஓங்கிச் சம்மட்டியால் அடித்தது போல் அதிர்ந்து போனேன்.

என். கே. ஏசுவரி



ஸூப்பர் ரின்
அதிக வெளுப்பொளி பாய்ச்சுது...

இதற்கு ஈடுநிற்க டிட்டர்ஜெண்ட் வில்லை எதுவுமே இல்லை.

உற்றுப் பாருங்கள்
இப்போது ஸூப்பர்
ரின் வில்லையை—
கண் கவரும் புதிய
மேலுறை, புதுமை
கமழும் நறுமணம்.




வயதில் சிறியவன்;
இசையில் பெரியவன்!

குமரன் காலனியில் கோடி வீடு.

118, குமரன் காலனி, வடபழநி, சென்னையில். இது இப்போது பிரபல மான ஒரு நபரின் முகவரி.

ஊகித்திருப்பீர்களே? மாண்டலின் சீனிவாஸ் வீடுதான்.

சீனிவாஸ் அமெரிக்காவில் கச்சேரிகள் செய்யப் புறப்பட்டுப் போயிருக்கிறார். ('போயிருக்கிறான்' என்றெழுதக் கைவரவில்லை. வாசிக்கிற வாசிப்பு, அரசவைக் கலைஞராக அவரை உயர்த்தியிருக்கிற உயரத்தில், உருவத்தில் சிறிய அந்தக் கலைஞனை மரியாதையாகக் குறிப்பிடுவது தான் சரி!)

செப்டம்பர் 26, வியாழன் மாலை வரை, சீனிவாஸ் அமெரிக்கா புறப்படும் நாள் நிச்சயமாகவில்லை. அன்று தாம்பரத்திலுள்ள தன் நண்பன் வீட்டுக்குப் போயிருப்பதாகச் சொன்னார் தகப்பனார் சத்திய நாராயணா. ''விஸா இரண்டொரு நாளில் கைக்கு வரும் என்று எதிர்பார்க்கிறோம். கிடைத்த வுடன் கிளம்பி விடுவோம்.''

செப்டம்பர் 27; வெள்ளியன்று விஸா கிடைத்து, சீனிவாஸ் இப்போது அமெரிக்கா போய்ச் சேர்ந்தாகி விட்டது.

சீனிவாஸுக்குப் பதினைந்து வயதாகிறது. வீட்டிலேயே தான் படிப்பு. ஆந்திரா மெட்ரிக் எழுதப் போகிறாராம்.

குடியிருக்கும் வீடு, குரு சுப்பராஜு அவர்களுடையது. ஒரு விதத்தில் பார்த் தால் 'குருகுல வாசம்' தான் சீனிவாஸுக்கு!

''ஏன் மாண்டலின் கற்றுக் கொடுத் தீர்கள்?'' என்று கேட்டேன் குரு சுப்ப ராஜு அவர்களிடம்

''அவன் ஆறு வயதிலிருந்தே மாண்ட லின் வாசிப்பான். வயலின், வீணை என்று தான் எல்லோரும் வாசிக்கிறார்களே என்று தான் மாண்டலின் கற்றுக் கொண்டான். சீனிவாஸின் தகப்பனார் சத்தியநாராயணா வும் என் சீடர்தான். ஓரிநட் வாசிப் பார்.''

ஆந்திராவில், மேற்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள பாலக்கோலுதான் இந்த குரு, சிஷ்யர்கள் எல்லோரும் பிறந்த ஊர்.

''உங்களுக்குச் சங்கீதப் பொறுத்தவரை தஞ்சாவூர் ஜில்லா எப்படியோ, அப்படி எங்களுக்கு மேற்கு கோதாவரி ஜில்லா. சிட்டிபாபு, ஈமனி சங்கர சாஸ்திரி, வீணை காயத்ரி, பாலமுரளி கிருஷ்ணா எல்லாம் இந்த ஜில்லாக்காரர்கள்தாம். இதோ இப் போது சீனிவாஸும் இந்த ஜில்லாதான்...'' என்றார் குரு சுப்பராஜு.

ஒருநாளைக்கு ஐந்து மணி, ஆறு மணி நேரம் வாசிப்பாராம் சீனிவாஸ். ''சுவாமி மாதிரி உட்கார்ந்து கொண்டு அப்படியே வாசித்துக் கொண்டிருப்பான்'' என்றார் குரு. (குருவும் இலேசுப்பட்டவரல்ல; பாலக் கோலிலிருந்து பாலக்காடு வந்தவர், செம் பையிடம் இசை பயில!)

''எப்படி சீனிவாஸின் மாண்டலினில் கர்நாடக இசை தோன்றியது?''

''கிளாஸிகல் மியூசிக் சொல்லித் தரு கிறேன். மாண்டலினில் வாசிக்கக் கற்றுக் கொள்கிறாயா?'' என்று கேட்டேன் அவ னிடம். ''சரி'' என்றான் உற்சாகமாக. முதல் முதல் பகுதாரி ராகத்தில் தியாகராஜ ரின் கிருதியான 'ப்ரோவ பாரமா' தான் கற்றுக் கொடுத்தேன். அப்போதே ஆரோகணம், அவரோகணம், கற்பனை சுவ ரம் எல்லாம் சொல்லிக் கொடுத்தேன். அப்புறம் அவ்வளவு சிரமம் இருக்கவில்லை. அப்படிப்பட்ட மூளை சீனிவாஸுக்கு.... கற்பனை இருக்கிறது. சொன்னால் புரிந்து கொண்டு அப்படியே வாசிப்பதில் கெட்டிக் காரன். கோடியில் ஒருவருக்குத் தான் அப்படி இருக்கும்'' என்று சீடருக்கு சர்ட்டிபி கேட் கொடுத்தார் குரு.

இப்போது சீனிவாஸுக்கு 75 ராகங்கள் அத்துபடி. கீர்த்தனைகள் 250–க்கு மேல் தெரியும்.

சீனிவாஸ்தான் மூத்த பையன். இவ ருக்குக் கீழே ஒரு தம்பி, இரண்டு தங்கைகள்.

மேடையில் சிரித்த முகமாக இருப்பது போலவே, வீட்டிலும் தமாஷாகப்பேசி விளை யாடுவாராம் சீனிவாஸ்.

அமெரிக்கப் பயணத்தில், சீனிவாஸுடன் வயலினுக்குத் திருவள்ளூர் பார்த்தசாரதி யும், மிருதங்கத்துக்கு ஸ்ரீமுஷ்ணம் ராஜா ராவும் போயிருக்கிறார்கள். துணைக்கு? தகப்பனார் சத்தியநாராயணா.

நவம்பர் கடைசியில், சீனிவாஸ் இந்தியா திரும்புவார். அமெரிக்க ரசிகர்களையும் வியக்க வைத்த செய்திகள் பிறகு வந்து கொண்டே இருக்கும்.

-சாருகேசி

வண்ணப்படம்: ஓம். சுப்பிரமணியம்

பிரபுவின் சொந்தக் கருத்து!





சைலே...ன்ஸ்

வாஹினி ஸ்டுடியோவின் மூன்றுவது தளம். நீல நிற பேண்ட்டும், கறுப்பு நிறத்தில் சட்டையும் போட்டுக்கொண்டு பிரபு.

விசாரித்தபோது 'நேர்மை' படப்பிடிப்பு என்றார்கள். பில்லா கிருஷ்ணமூர்த்தி, கையில் 'பேடு'டன் ஓடிவந்து, பிரபுவிற்கு வசனத்தைச் சொல்லிக் கொடுத்தார்.

பிரபுவிடம் இரண்டு நிமிடம் வாயைக் கொடுத்தேன். அவரது சமீபத்திய படங்களின் சரிவுக்குக் காரணமெல்லாம் அவர் அல்லவாம். ''சரியான கதைதானு என்று யோசித்துப் பார்க்காமல் படங்களை ஒப்புக் கொண்டு விட்டேன். அதனால் வந்த வினை தான்'' என்றவர், ''இது என் சொந்தக் கருத்து!'' என்றும் சொல்லி வைத்தார்.

'ராகங்கள் மாறுவதில்லை'க்கு அப்புறம் அதுபோல் தனக்கு நல்ல கேரக்டர்கள் எதுவும் கிடைக்கவில்லை என்று வருத்தம் கொண்டாடினார்.

தீபன் சக்கரவர்த்தி

ஏ. வி. எம். ஸ்டுடியோ ஆரார் தியேட்டர். கங்கை அமரன் இசையில் தீபன் சக்கரவர்த்தி. 'தரை மேல் ஆடும் தாமரையே'' என்று ஜானகியோடு டூயட் பாடிக் கொண்டிருந்தார்.





ரிகார்டிங் முடிந்து, பேசிக் கொண்டிருக்கையில், தீபன் சக்கரவர்த்தியிடம், ''உங்கள் பாடல்கள் பலவும் ஹிட்டாகி இருக்கின்றன. ஆனாலும் இன்னும் உங்களுக்கு மார்க்கெட் சூடு பிடிக்கவில்லையே...ஏன்?'' என்றேன்.

''என்ன செய்வது? இளையராஜா, கங்கை அமரன் இசை அமைப்பில் நான் பாடுகிற படங்கள் தான் வெளியாகின்றன. எம். எஸ். வி., சங்கர் கணேஷ் போன்றவர்களின் இசையிலும் பாடியிருக்கிறேன் ஆனால் படங்கள் ரிலீசாகவில்லை. ரிலீஸாகிற மாதிரியான படங்களில் அவர்கள் வாய்ப்பளித்தால், முன்னேறலாம்'' என்றார்.

டீ. வி. வெள்ளிவிழா நிகழ்ச்சியில் இவர் பாடியதைப் பாராட்டி, தொலைக்காட்சி நிலையத்தாருக்கு ஏராளமான கடிதங்களாம். நடிகை பத்மினி பாராட்டியதோடு 'ஐ லவ் யுவர் சாங்க்ஸ்' என்று எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுத்தாராம்.

கோவில் நிகழ்ச்சிகளுக்கு இளையராஜா இசை அமைக்கிறார் என்றால் அதில் நிச்சயமாக தீபனுக்கு நான்கு பாட்டு இருக்குமாம். நினைவிருக்கிறதா, பழைய நடிகை

ராஜகாந்தம்? — இவர் அம்மாவைப் பெற்ற பாட்டி!

ஸ்ரீதேவி

கமலஹாசன் இந்திக்குப் போன சூட்டோடு திரும்பி வந்து, மீண்டும் தமிழ்ப் படங்களில் நடிக்க ஆரம்பித்து விட்டார். அடுத்த 'பூமராங்' ஸ்ரீதேவி.

இந்தி 'மூந்தானே மூடிச்சு' படப்பிடிப்பில் ராஜேஷ்கன்னாவுடன் நடனமாடிக் கொண்டிருந்த ஸ்ரீதேவியுடன் இரண்டு நிமிடம் பேசினேன்.

''ஜனவரியிலிருந்து மீண்டும் தமிழ்ப்படங்களில் நடிக்கப் போகிறேன்'' என்றார்.

''டைரக்டர்கள்?'' என்றேன்.

''அது முடிவாகவில்லை. இரண்டு தயாரிப்பாளர்களுக்கு கால்ஷீட் கொடுத்திருக்கிறேன்'' என்றார்.

லூஸ் மோகன்

மயிலாப்பூர் சித்திரக்குளத் தெருவில் ஒரு உள்ளடங்கிய வீட்டில் குடி இருக்கிறார், லூஸ் மோகன்.

'பாண்டிச்சேரி மாநில லூஸ்மோகன் ரசிகர் மன்ற'த்தைத் திறந்துவைத்து, திறப்புரை(!) ஆற்றிவிட்டு வந்தாராம்.

சினிமா, சினிமா இல்லாத நாட்களில் ரேடியோ, அதுவும் இல்லாத நாட்களில் மேடை நாடகங்கள் என்று ரொம்ப பிஸியாக இருக்கிறாராம். ''நிறைய வாய்ப்புகள் வந்ததால் வாழ்க்கைத்தரம் பெரிதாக உயர்ந்து விடவில்லை என்றாலும் கஞ்சிக்குக் கஷ்டமில்லை'' என்றார்.

இவர் தந்தை லூஸ் ஆறுமுகம் நடிப்பையே வாழ்க்கையாகக்கொண்டு, ஏழைமையில் கஷ்டப்பட்டுச் செத்தாராம்.

தன் மனைவியைப் பெருமையோடு நினைவு கூர்ந்தார்: ''சான்ஸ் எதுவும் இல்லாமல் சாப்பாட்டுக்குச் சிரமப்பட்ட போதெல்லாம் 'நீங்க நிச்சயமா ஒருநாள் புகழுக்கு வருவீங்க'ன்னு அவள்தான் தைரியம் கொடுப்பாள். அதுபோலவே எனக்கும் ஒரு காலம் வந்துச்சு!''

பாரதிராஜா

திரைப்படக் கல்லூரிக்கு வந்து சிறப்புரை ஆற்றினார் பாரதிராஜா.


'' 'உங்கள் எல்லாப் படத்துப் பாடல் காட்சியிலும் வெள்ளை டிரஸ் வருகிறது. ஸ்லோமோஷன் வருகிறது. இதை மாற்ற மாட்டீர்களா?' என்கிறார்கள். பொதுவாகப் பாடல் காட்சியில் நடிகர்களுக்கு மூவ்மெண்ட் கொடுப்பதில் கூட எனக்கு உடன்பாடு கிடையாது.

ஆனால் எல்லாப் பாடல்களையுமே மூவ்மெண்ட் இல்லாமல் காட்டினால் ரசிகர்களுக்கு போர் அடித்து விடும். அதனால்தான் ஒரு பாட்டை மட்டும் 'ஓவர்லாப்' பாக வைத்துக் கொள்கிறேன்.

பாடல் காட்சி என்பதே யதார்த்தம் இல்லாத ஒன்று. ஒரு சொப்பன நிலையை உணர்த்துவது. வெள்ளை நிற உடை, ஸ்லோமோஷன் இதெல்லாம் ஒரு கனவு மயமான நிலையை உணர்த்தக் கூடியது. அதனால்தான் அவைகளை என் பாடல் காட்சிகளில் படமாக்குகிறேன்!'' என்றார்.


இன்னும் 3 வருடங்களுக்குப் பிறகு சினிமாத் துறையின் மீது தனக்கிருக்கிற வேகத்தைக் 'குறைத்துக் கொள்வாராம். ''அப்புறம், இரண்டு ஆண்டுக்கு ஒரு படம் தான் எடுப்பேன்'' என்றார்.

—சம்பத்ஜீ



நீலகிரி மாவட்டம் வெலிங்டன் ஜிம் கானா கிரவுண்டில் ஒரு எக்ஸிபிஷன் கிரிக்கெட் மாட்ச் நடந்தது. பிரபல தமிழ்நாடு, கர்நாடக மாநில விளையாட்டு வீரர்கள் பங்கு பெற்றனர். ஸ்ரீகாந்த் விளையாட வந்த போது, கூட்டத்தில் பலத்த ஆரவாரம். ஆனால் அவர் 8 ரன்களை எடுத்திருந்தபொழுது ரன் அவுட்டாகி விட்டார். அம்பயரும் அவுட் கொடுக்க ஸ்ரீகாந்த் வெளியேறும் பொழுது 'கூட்டத்தில் எல்லோரும், ''அவுட் இல்லை. இரும்பிப் போய் ஆடுங்கள்'' எனக் கத்தினார்கள். எதிர் அணி கேப்டன் விஸ்வநாத் மற்ற ஆட்டக்காரர்களிடம் அபிப்பிராயம் கேட்டார். கடைசியில் அவர் திரும்ப விளையாடுவதா? வேண்டாமா என்று 'டாஸ்' போட்டதில் ஸ்ரீகாந்துக்குச் சாதகமாக விழுந்து அவர் மீண்டும் ஆடினார்

—எஸ். மோகன்.





அத்தியாயம் 26

ரத்தத் திலகம்!

கிழக்கு வீதியில் சூரிய கோலம் வரைய ஆகாய மங்கை நீர் தெளிப்பது போலச் சின்ன தூறல் சண்டது.

எவ்வகையிலும் விடிகிறபோது கோட்டைப் பாலங்கள் விழுந்து கதவுகள் திறக்கப்படும் என்று உக்கிரப் பெருவழுதிப் பாண்டிய மாமன்னர் எதிர்பார்த்து, அனைத்து வீரர்களுடன் ஆயத்தமாகக் காத்திருந்தார். அவரது வீரமார்பில் உழிஞை மாலை புரண்டது. தலைக்கு மேலே வெண் சக்கரக் குடை.

ஐப்பசியை நினைவுபடுத்த எங்கும் வெள்ளை வெளேரென்று முகண்டைக் கொடிகள் பூத்து அழகு தந்தன.

அகழி ஓரங்களில் பீர்க்கங்கொடிகள் பொன்னிறப் பூக்களைக் கொண்டை முடித்துக் கொண்டிருந்தன.

தூறல் நின்று கிழக்கு வாசல் மெல்லச் சிவந்து வந்தது. கோட்டைக் காவல் எப்பொழுதும் போல கவனமாக இருந்தது.

கோட்டைக் கதவுகளின் உச்சி வளைவான கற்சுவரின் நடுவே, செங்கழுநீர்ப் பூவை ஏந்தியிருக்கும் இரு யானைகளுக்கு மத்தியில் வீற்றிருக்கும் கஜலட்சுமியின் சிற்பம்.

விடியற்காலையில் அந்தச் சிற்பத்துக்கு வழிபாடு செய்வது வழக்கம். அன்று காலையும் வழிபாடு நடத்தக் கோட்டைத் தலைவர் குறிப்பிட்ட சில வீரர்களுடன் வந்திருந்தார். அங்கே தெய்வம் நின்று கோட்டையைக் காக்கிறது என்பது நம்பிக்கை.

நெய்யில் வெண்கடுகை அரைத்து, அதனை அங்கே அப்பி வழிபடுவர். அந்த வழிபாட்டைச் செய்து கொண்டிருந்த போது...

இரவு, கானக்கோட்டை வீரர்களோடு வீரர்களாக ஐக்கியமாகி விட்ட பாண்டிய வீரர்களுடன், காளிங்கன் மாறுவேடம் தரித்துப் புகுந்தான்.



கோவி. மணிசேகரன்

கற்கவி மீது சாரங்கட்டி நெய்யில் அரைத்த வெண்கடுகை அப்பிக் கொண்டிருந்த சமயம் பார்த்து, திபுதிபுவென்று நூற்றுக் கணக்கான பாண்டிய வீரர்களுடன் புகுந்த காளிங்கன், அங்கிருந்தவர்களை வெட்டி வீழ்த்தியதுடன் முப்பிரிவுப் பாலங்களை இறக்கவும் தூக்கவும் பயன்படுத்தப்படும் மிக வும் கனத்த வடக் கயிறுகளை வெட்டவும் துணிந்தான். சக்கரங்களில் சுற்றப்பட்டிருந்த அந்த மூன்று கனத்த வடக்கயிறுகளையும் காளிங்கன் வீரர்கள் வாட்களை உருவி, ஒருசேர வெட்ட, அதற்குள் கானக்கோட்டைக்குச் செய்தி எட்டி வேங்கை வீரர்கள் வருவதற்குள், முப்பிரிவு பாலங்கள் தணார், தணார், தணார் என்று அகழியில் விழுகின்றன.

கோட்டைக் கதவங்களின் தாழ்ப்பாள்களைப் பெருத்த யுத்தத்துக்கிடையே காளிங்கன் அகற்றி விட்டான். கதவங்கள் திறந்து பட்டன.

பாண்டியப் படைகள், கணமும் தாமதியாமல் புற்றீசல் போலப் புறப்பட்டுக் கோட்டையுள் பிரவேசிக்கின்றன.

ராஜ ரதத்தில் பாண்டிய மாமன்னர் உக்கிரப் பெருவழுதியும், அவரைத் தொடர்ந்து பெருந்தானைத் தலைவன் காவிதி அழகன் நம்பியும் கோட்டையுள் நுழைகிறார்கள்.

அடுத்து ஏனைய தளபதிகளும் புரவிகளிலும், யானைகளிலுமாக உள்ளே நுழைகிறார்கள். ஏறத்தாழ பத்தாயிரம் வீரர்கள் உள்ளே நுழைந்ததால் கோட்டை தாங்குமா என்றாகி விட்டது.

யார்தாம் எதிர்பார்த்திருக்க முடியும்?

வழக்கமாக மூற்றுகையை நீடிக்கவைத்து, எதிரிகளை அல்லோலகல்லோலப்படுத்திப் பின்னர் வேங்கைப் படைகள் வெளியில் வந்து போரிட்டுத் துரத்தும்.

இது வழக்கத்துக்கு மாறாக நடந்து விட்டது.

செய்தி கேட்டு அதிர்ந்து போனான், வேந்தன் வேங்கைமார்பன்.

கானப்பேர் சேனாதிபதிகள் சுறுசுறுப்புக் காண்கிறார்கள். தலைமைத் தளபதியான தென்னவன் வேளான் விரைந்து படைகளை வியூகம் வகுக்க ஆணை பிறப்பிக்கிறான்.

எதிர்பாராத நிலை ஏற்பட்டதால் வீரர்கள் விழித்தும் விழிக்காததுமாய் அரண்டு எழுந்து வாட்களை உருவிக் கொள்கிறார்கள்.

எவ்வாறு இது நேர்ந்தது என்று வேந்தன் வேங்கைமார்பன் விசாரித்து அறிகிறான். அவனது நினைவில் காளிங்கனே காட்சி தருகிறான். எப்படியோ சுரங்கங்களை அறிந்து செயல்பட்டிருக்கிறான். உள்நாட்டுத் துரோகிகளால் தாமே பல வலிமை வாய்ந்த ரகசியங்கள் பலவீனப்பட்டுப் போகிறது...

விரைந்து குளித்து முடித்துத் தெய்வவழிபாட்டை முடித்துக்கொண்டு கவசம் பூண்ட

வட்டுடை — போராடை தரித்துக் கொள்கிறான், வேங்கைமார்பன்.

தனது கருநீலப் புரவியில் ஆரோகணித்து வேங்கைவனம் நாடி விரைகிறான்.

கோட்டையின் ஏழு மதில்களையும் வென்று உள்ளே நுழைய வேண்டும். அவ்வளவு சீக்கிரம் நுழைந்து விட முடியாது. அதற்குள் திருமேனியைக் கண்டு திரும்பி விடலாமே!

பாண்டிய வீரர்கள் கோட்டைக்குள் பிரவேசித்து விட்ட செய்தி வேங்கைவனத்துக்கு எட்டி இருந்தது.

தியாகவல்லி மருண்டு போய்க் கவனிக்கிறாள். அப்போது திருமேனி உள்ளே குளித்துக் கொண்டிருந்தாள்.

புரவியில் வந்திறங்கிய வேங்கைமார்பன், தியாகவல்லியைக் கவனிக்கிறான். அவளது கண்கள் கலங்கிக் காணப்படுகின்றன.

''உன் அண்ணன் காளிங்கன் நன்றாகவே பழி வாங்கி விட்டான் தியாகவல்லி! போகட்டும். திருமேனி எங்கே?''

''குளிக்கிறார்கள்.''

வேங்கைமார்பன் குரல் கேட்ட திருமேனி, விரைந்து குளித்து முடித்து ஈரம் சொட்டும் உடலில் ஒரு மஞ்சள் சேலையைப் போர்த்திக் கொண்டு அப்படியே அவசரமாக வந்து நிற்கிறாள்.

அவளது அழகு, ஈரக்கோலத்தில் குளுமையாகப் பிரகாசிக்கிறது.

முதன் முறையாக முடி தரித்து, போராடை தரித்து வாள் சகிதமாக வந்து நின்ற வீரமார்புத் திருவுருவைத் தரிசிக்கிறாள் திருமேனி! மன்மதன் வீரக்கோலம் பூண்ட மகோன்னத அழகனாகத் தெரிகிறான் வேங்கைமார்பன்.

வேங்கைகள் இரண்டும் ஓடிவந்து சுற்றிச் சுற்றி உறுமுகின்றன.

''திருமேனி! வேங்கைக் கோட்டைக்குள் இதுவரை யாரும் நுழைந்தது கிடையாது. உன் நாட்டு வஞ்சகன் செய்த சதி, பரபரப்பில் ஆழ்த்தி விட்டது. எனக்கு விடை கொடு!''

''கொஞ்சம் இருங்கள். உள்ளே சென்று குங்குமம் இட்டுக் கொண்டு வந்து விடுகிறேன்!'' என்று கூறி உள்ளே நுழைந்தவளைக் கைப்பற்றி இழுத்த வேங்கைமார்பன், தனது வாளை உருவி, கட்டைவிரலை அதனில் கீறிக் குங்குமமாக வைக்கிறான்.

அதே ரத்தத்தை அவளும் தொட்டு வேங்கைமார்பன் நெற்றியில் இடுகிறாள்.

போர்க் குழப்பத்தில் சிந்திக்கத் தவறி விட்டாள். அவள் தனது கட்டை விரலைக் கீறி ரத்தத் திலகமிடுவாள் என்றுதான் வேங்கைமார்பன் எதிர்பார்த்தான். அதனாலென்ன? எல்லாம் ஒன்றுதான் என்ற சமாதானம்...

''சென்று வாருங்கள், பிரபோ! மாலைக்குள் வெற்றிமுரசம் எனது காதுகளில் ஒலிக்க வேண்டும்.''

"திருமேனியின் இந்தக் கற்கண்டு சொல் கேட்டு இனிப்பு நிறைந்த வெற்றிப் பெருமிதத்துடன் சிரிக்கிறான் வேங்கைமார்பன்.

அவன் விடைபெறுகிற போது, ''தியாகவல்லி! கவனம்! இது போர்க்காலம். வேங்கைகள் மருளலாம். பிடித்து அடைத்து வைத்திருப்பது நல்லது'' என்று கூறி விட்டுப் புரவியில் ஆரோகணித்துத்தட்டிவிட...

அது நாலு கால் பாய்ச்சலில் பறந்தது.

தியாகவல்லி கண்களை இறுக மூடி, அண்ணன் செய்த தவற்றுக்குப் பிராயச்சித்தமாகப் பிரார்த்தனை செய்கிறாள்.

மகற்போதிற்குள் ஏழு வாயில் மதிற்கதவங்களைத் தகர்த்துக்கொண்டு பாண்டியப் படைகள் உள்ளே நுழைந்து விட்டன.

ஏழு மதில்களைத் தகர்ப்பதற்குள் இரு தரப்பிலும் பெருத்த சேதாரம். அந்த மதில்களையே யானையின் துணை கொண்டு இடித்தே சாய்த்து விட்டனர்.

முக்கிய பகுதியான — இதயப் பகுதியான அரண்மனையை நெருங்கி விட்டன, பாண்டியப் படைகள்.

இருதரப்புக்குரிய கடல் போன்ற சேனைகள் வெள்ளத்தோடு வெள்ளம் எதிர்ப்பன போல எதிர்த்துப் போராடினர்.

தனது அழகிய ரதத்தில் நின்று அம்புகளைச் சரமாரியாகப் பொழிகிறான் வேங்கைமார்பன்.

மறுபுறம் உக்கிரப் பெருவழுதிப் பாண்டியரின் வில், அம்புகளோடு நர்த்தனமிடுகிறது.

காளப்போர்த் தளபதிகள் வாளையுருவிக் கொண்டு பம்பரமாகச் சுழல்கிறார்கள். தென்னவன் வேளான் வீரசாகசமே புரிகிறான்.

யானைகள் ஒன்றோடொன்று மோதிப் பிளிறும் சத்தம் வேங்கைவனத்தையே அச்சுறுத்துகின்றது...

புரவிகள் முன்னங்கால்களைத் தூக்கியும் விரைத்தும் கனைத்தும் பேயாட்டமாடுகின்றன.

ஏழு வாயில்களிலுமல்லாது அரண்மனைத் தோட்டத்திலும் வீரர்களும், புரவிகளும் யானைகளும் வெட்டுண்டு துடிக்கிற காட்சி..

மேலே பிணந்தின்னிக் கழுகுகள் வட்டமிடத் தொடங்கி விட்டன.

கோட்டையின் நடுவே நீண்டு உயர்ந்திருந்த ஸ்தூபியில் அக்கினிக் குண்டம் எரிகிறது...

உக்கிரப் பெருவழுதிப் பாண்டியர் மட்டும் ஓர் ஆணையைக் கடுமையாக விதித்திருந்தார். யாரும் வேங்கைமார்பன் உயிருக்கு உலை வைக்கக் கூடாது. அவன் உயிரை மட்டும் பாதுகாத்துத் தர வேண்டும்.

இச்செய்தி காளிங்கனை எரிச்சலுறச் செய்திருந்தது. காலையில் தான் கேள்விப்பட்டிருந்தான்.

எதற்காக வேங்கைமார்பன் உயிர் காக்கப்பட வேண்டும் என்பதே அவனது பெருத்த கேள்வி. எனவே அதனை அழிக்க அவன் சந்தர்ப்பம் நோக்கினான்.

அவனது மாறுவேடம் பகபதியின் கண்களில் பட முடியாமல் செய்து விட்டது.

மாலை, வானில் உருவாகிக் கொண்டிருக்கிறது. ஏழு வாயில்களையும் எரியூட்டிக் கொளுத்த ஒரு புறம் புகை கிளம்புகிறது...

நெருப்பு ஜுவாலை எட்டிப் பார்க்கிறது..

வேங்கைமார்பன் அரண்டு போனான். ரதத்தை விட்டிறங்கி வாளையுருவிக் கொண்டு களத்தில் குதிக்க எண்ணமிடுகிறான்.

அந்தச் சமயத்தில்...

கவசம் அணிந்த வேங்கைமார்பனை அம்பெய்தியோ, குறுவாள் எய்தியோ கொல்ல முடியாது என்று தீர்மானித்த காளிங்கன், ஒரு யோசனையை முன் வைத்துச் செயல்படத் தொடங்குகிறான்...

எங்கும் வாட்கள் மோதும் ஓசைகள்; அவற்றில் எழுந்த மின்னல்களைக் கண்டு, இயல்பாக வானில் எழ வேண்டிய மின்னல்கள் பயந்து ஒளிந்து கொள்கின்றன.

தொலைவிலிருந்த *கல்கால் கவணை யந்திரத்தை நோக்குகிறான் காளிங்கன்.

ஒரு கவணையில் இரு அகப்பைகளில் பெரிய கல்லுருண்டைகள் இரண்டை வைக்கிறான். இரண்டு கல்லுருண்டைகளும் ஏக காலத்தில் ஒரே இலக்கை நோக்கிப் பாய வேண்டும்.

ரதத்தில் நின்றிருந்த வேங்கைமார்பனுக்குச் சரியாகக் குறி வைக்கிறான்.

அப்போதுதான் வாளையுருவிக் கொண்டு இறங்க முற்படுகிறான்.

அந்நேரம் பார்த்துக் கவணையைத் தட்டிவிட, வேகமாகப் பாய்ந்து சென்ற கல்லுருண்டைகள், ஒன்று மார்பைத் தாக்கியது. மற்றொன்று மார்புக்கு மேலே நெஞ்சுக்குழியைத் தாக்கியது.

ரதத்திலிருந்து தூக்கி எறியப்பட்டான் வீரமாதிலகம் வேங்கைமார்பன்.

தொலைந்தான் வேங்கைமார்பன் என்று மகிழ்ந்து கொள்கிறான் காளிங்கன். இனி திருமேனியைத் தட்டிச் செல்வது குறித்து அவனது சிந்தனை குறுக்கும் நெடுக்குமாய்ப் பாய்கிறது.

அடிபட்ட வேங்கைமார்பன் அண்ணாந்து கவனிக்கிறான். மார்பில் பட்ட வேகத்தில் மூக்கில் ரத்தம் கசிகிறது.

நீண்ட வண்டியில் வரிசையாகப் பெரிய பெரிய இரும்பு அகப்பைகளிருக்கும். ஒவ்வொரு அகப்பையிலும் கல்லுருண்டைகளை வைத்து 'ஸ்பிரிங்' முறையிலான பகுதியைத் தட்டிவிட்டால், கீழிருந்து அகப்பைகள் மேலெழுந்து சாய, கல்லுருண்டைகள் தொலைதூரம் வரை பாயும்.

ஓ... எனது கானப்பேரெயிலே!...

அங்கே, வேங்கைவனத்தில், காளிங்கன் வேகமாகப் புரவியில் வருகிறான்.

தியாகவல்லி கவனித்து விடுகிறாள்.

பசுபதி ஏமாந்தான்; காலம் வென்று விட்டது.

''இளவரசி! என் அண்ணன் காளிங்கன் வருகிறான். அவனிடம் பேச்சைப் பிடுங்குங்கள். ஆனால் நடந்த எதையும் சொல்லாதீர்கள். அவன் ஏதேனும் இசகு பிசகாகச் சொன்னால் நம்ப வேண்டாம்; இந்த இடத்தை விட்டும் நகர வேண்டாம். நான் அதுவரை மறைவாக இருக்கிறேன்!'' என்று கூறி மாளிகைக்குள் சென்றுவிட்டாள்.

புரவியை விட்டு இறங்கிக் கவனிக்கிறான்.

வேங்கைகள் உறுமினாலும் அறையில் அடைபட்டிருக்கின்றன. இதுவே ஒரு சாதகம்.

பத்து வீரர்களுடன் வேங்கைவனத்துள் பிரவேசிக்கிற போது, காவல் நின்றவர்கள் தடுக்க, அடுத்த விநாடி அவர்கள் தரையில் சாய்ந்தனர்.

வேங்கைகள் அக்காட்சியைக் கண்டு வெறி கொண்டு உறுமுகின்றன.

அவனது திட்டமே வேறு.

போரில் வெற்றி கண்ட பிறகு, இந்த அழிந்து பட்ட கானப்பேரெயில் யாருக்குத் தேவை? தேவை திருமேனி! மன்னர்மூலம் எதிர்பார்ப்பது மதியின்மை. எப்படியாவது திருமேனிக்குப் பாசாங்கு வார்த்தைகள் மூலம் நம்பிக்கை ஏற்படச் செய்து, சிலைக்கு அடியே செல்லும் சுரங்கத்தின் மூலம் அழைத்துச் சென்று விட வேண்டும். தன்னை ஏற்கக் கேட்க வேண்டும். மறுத்தால் பலாத்காரம் மூலம் ஏற்றுக் கொள்ளவேண்டும். இதற்கு மேல் யாரால் என்ன செய்து விட முடியும்? அனாதையாக விட்டுச் சென்று விட்டால், தலை மறைவாக இருக்கும் நம்மைத் தேடிப் பிடித்து மசனைத் தாரை வார்க்கவும் மன்னர் முயலலாம் அல்லவா? அடித்தால் அதிர்ஷ்டம்! இல்லையேல் இருக்கவே இருக்கிறது துரதிர்ஷ்டம்! முயன்று பார்க்க வேண்டியது தானே?

திருமேனியை நெருங்கிச் சென்று நின்றான் காளிங்கன்.

(தொடரும்)

அடுத்த வாரம்

அந்தரத்தில் அதிசயங்கள்!



ஓர் அமானுஷ்ய சக்தி பற்றிய

விசித்திர உண்மைத் தகவல்!



திருப்பு விழா

ஸுஜாதா விஜயராகவன்

மறையாகட்டப்பட்ட அரியதொரு பொருள் ஆங்காங்கேயும், பரவலாகவும், இட்டுத்திட்டாகவும், பொட்டுப் பொட்டாகவும் கண்டிப்பாகப் பெய்யும் என்ற நம்பிக்கையை டீ.வி. செய்தி அறிவிப்பாளர் மக்களுக்கு ஊட்டிக் கொண்டிருந்த நேரம். காலையில் பேப்பரில் படிக்க விட்டுப் போன பகுதிகளைப் பாராயணம் செய்து கொண்டிருந்தார் அப்பா.

''ஏண்டாப்பா இவ்விக்காவது வாங்கிண்டு வந்தியோ?'' பாட்டியின் மெல்லிய குரல் ஒலித்தது. பாட்டியின் வயது செஞ்சுரிக்குப் பதினைந்தோ இருபதோதான்குறைவு. இன்னும் மூக்குக் கண்ணாடி கிடையாது. யார் தயவும் இல்லாமல் பக்கத்துத் தெருக் கோயிலுக்குச் செல்லும் தெம்பு இன்னும் உரத்துடன் இருக்கிறது. பேச்சு ரொம்பக் குறைவு. பேசினால் ஆணி அடித்தாற்போல் நேரே பாயிண்டுக்கு வந்து விடுவாள்.

முகத்தில் ஒரு பெருமிதமான புன்னகையுடன், ''ஓ வாங்கிண்டு வந்துட்டேனே'' என்று அறிவித்தார். அதை அவருடைய ஜேம்ஸ்பாண்ட்—பாவம் அப்பாவுக்கும்ஜேம்ஸ் பாண்டுக்கும் ஒருவிதப் பொருத்தமும் கிடையாது — பெட்டியிலிருந்து எடுத்து வரும் பொறுப்பு என் தலையில் விழுந்தது.

ஒரு நைலான் வலைப் பைக்குள் அழகான ஜாடி வடிவத்தில் தொங்கிய ஒரு டானிக் பாட்டிலை வெற்றி வீரன் போல் ஒற்றைக் கையில் உயர்த்திக் கொண்டு வந்தேன். ஆச்சு போச்சு என்று அப்பாவிலிருந்து எங்கள் வீட்டு பிங்கி (நாய்) வரையில் எல்லோரும் நான் அதைக் கீழே போட்டு விடப் போகிறேன் என்று விதவிதமாகக் கூப்பாடு போட, பாட்டில் அப்பா கைக்கு வந்து சேர்ந்தது.

விஷயம் இதுதான். கூனல் இல்லாமல் இந்த வயதிலும் குடுகுடுவென்று ஓடித் திரியும் பாட்டிக்கு எங்கள் அனைவர் பேரிலும் ஒரு பரிதாபம். அனைவரும் ஜெனரல்டானிக் ஒன்றைத் தினம் சாப்பிட்டோமானால் விளம்பரக் குடும்பம் போல் ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் திகழ்வோம் என்பது பாட்டியின் அசைக்க முடியாத நம்பிக்கை. குடும்ப டாக்டரிடம் விவரத்தை எடுத்துச்சொல்லி நல்லதாக ஒரு டானிக் எழுதித்தரும் படி கேட்கச் சொல்லிப் பத்து நாட்களுக்கு மேல் ஆகிவிட்டன.

''அம்மா நீ கேட்ட மாதிரிஇந்த டானிக்கை எல்லா வயசுக்காரானும் சாப்பிடலாம். மார்க்கெட்டிலே இப்போதான் புதுசா வந்திருக்கு. மெடிகல் ரெப் இப்போதான் டாக்டர்கிட்டே சாம்பிள் குடுத்துட்டுப் போனான். பாட்டில் நன்னாருக்கே. மருந்து நன்னா இருக்கும்னு இதையே எனக்கு எழுதிக் குடுமேன்னு டாக்டரைக் கேட்டேன். தங்கமான மனுஷன். உடனே எழுதிக் குடுத்துட்டார்.'' அப்பா தம்பெருமையை எடுத்து விட்டார். பாட்டி கண்ணை மூடியவாறு ஜபமாலையை உருட்டிக் கொண்டிருந்தாள்.

''இது யாரார் எத்தனையெத்தனை ஸ்பூன் சாப்பிடணும்?'' குடும்பத் தலைவியின் பிராக்டிகல் கவலை. ஆறு குழந்தைகள் உள்பட ஒன்பது பேர் கொண்ட குடும்பத்தின் சமையலறையில் மொத்தம் ஐந்து ஸ்பூன்கள் தான் உண்டு. இதை எப்படி எல்லோருக்கும் திரவுவது. சாப்பிட்ட பிறகு ஸ்பூன்களை யார் அலம்புவது? இதெல்லாம் அவளுக்கு அந்த சமயத்திலும் தோன்றிய

பிரச்னைகள். ''பேசாம நாளையிலிருந்து இதை மொத்தமாக கொழம்பிலியோ ரசத்துலியோ கரைச்சுக் கொட்டிக் கொதிக்க வெச்சுடப்போறேன்'. ஒருத்தரொத்தருக்கா ஸ்பூன்லே யார் குடுக்கறது?'' பிரச்னைக்குஒருமுடிவும்அவளே அறிவித்து விட்டாள்.



பாட்டி அரைக்கண் திறந்து பார்வையை அப்பா மீது வீசினாள். ''ஏண்டாப்பா பாட்டிலைத்தொறந்துதானேவாங்கிண்டு வந்தே?''

''இல்லே இப்போதிறப்புவிழா நடத்தறேன்!

''கை வழுக்கறது. ஒரு டவல் கொண்டு வா. சுத்திண்டு தொறக்கறேன்.'' அப்பாவின் சகாயத்திற்குத் தங்கை நீலாவின் ஜலதோஷக் கர்சீபிலிருந்து, சின்னப் பாப்பாவின் முக்கோண நாப்கின் வரை வீட்டிலுள்ள துண்டுத் துணிகளெல்லாம் வந்து குவிந்தன.

''அப்பா, கொஞ்ச நாழி வெந்நீர்லே வெச்சாத் தொறந்துடும்ப்பா''-சின்ன அக்கா பாலா, பள்ளியில் படித்ததைக் கொஞ்சம் சொல்லிக் காட்டிக் கொண்டாள்.

''அப்பா கதவு இடுக்கிலே வெச்சு அமுக்கிப் பிடிச்சுண்டு திருகி எடுத்துடலாமே?'' என் பங்குக்கு நானும் சோடை போக விரும்பவில்லை.

''சும்மா இருடா அது தான்தானா நொறுங்கி வைக்கும்'' -குடும்ப சரித்திர அதாரிட்டியான அம்மா.

பெரியக்கா விமலா சின்னக் குரலில் கேட்டாள். ''பேசாம ஒரு ஆணியையும் சுத்தியலையும் வெச்சு மூடியிலே ஒரு தொளை போட்டுட்டா என்ன? அப்படியே டானிக்கை ஸ்பூன்லே கொட்டலாமே'' -இப்படிப்பட்ட சிறந்த அறிவின் காரணமாகவே அக்கா மூன்று முறை முயன்றும் பி. ஏ. தேறவில்லையோ என்று தோன்றியது.

நீலா அவளை விடவும் செட்டிக்காரி. ''அப்பா பிங்கி வாயிலே கடிக்க வெச்சுத் தொறக்கலாமே!'' அப்பாவின் கண்கள் கொட்டிய உஷ்ணம் நீலா கண்களில் மடை திறக்கச் செய்தது. ''நான் சும்மாத் தான் வேடிக்கைக்குச் சொன்னேன். அதுக்காக என்னை ஏன் மொறைக்கறேள்?'' கேவலும், அழுகையுமாய் இடத்தைக் காலி பண்ணினாள்.

''ஒரு சின்ன பிளேடால மூடியைச் சுத்தி லேசா அறுத்து வளையத்தைக் கட் பண்ணிடலாம்'' அண்ணாவின் உருப்படியான ஐடியா.

''இந்த வீட்டிலே ஒரு பிளேடு கிடையாதா? என்ன குடுத்தனம் நடத்தறேள்?'' அன்று அம்மாவை நேருக்கு நேர் சீறிப் பாய்ந்து ராஜாங்கப் பன்மையில் அப்பா இடித்துக் காட்ட, ''ஷேவிங் நீங்க பிளேடாலே செஞ்சுண்டா பிளேடு வாங்கி வெப்பேன். கரண்ட் நின்னு போய் ஒத்தைக் கன்னம் தாடியோடயாவது ஆபீஸ் போவேளே ஒழிய எலக்ட்ரிக் ஷேவரைக் கைவிட மாட்டேள் நீங்க'' என்று அம்மா எதிர்ப்பாணம் தொடுக்க, குழந்தைகளாகிய நாங்கள் எந்தப்பக்கம் பலம் அதிகம், எந்தக் கட்சியில்சேரலாம் என்று கணக்குப் பண்ணத் தொடங்கினோம்.

திடீரென்று வந்ததே ஆபத்து! எங்களுடைய பென்சில் பெட்டியைப் பெரியக்கா ஒவ்வொன்றாக எடுத்துக் குடைய, நான் ஒளித்து வைத்திருந்த அரை பிளேடு வசமாய் அகப்பட்டது. எனக்கு வாழ்க்கையே வெறுத்து விட்டது.

அரை பிளேடு கால் பிளேடாகஉடைந்து குப்பையில் எறியப்பட்டது. ஹூம்! பாட்டில் என்னவோ அப்படியே தான் இருந்தது!

இதற்குள் அப்பாவின் கிறலுக்கு மருந்து போடும் அமளி! ஒரு ரகசியம். அப்பாவைப் பொறுத்த வரையில் அம்மாவுக்கு அடுத்தபடி அவர் பயப்படும் விஷயம் இஞ்செக்ஷன், டிங்க்சர் அயோடின், வகையறாக்கள். டெட்.

அருள்வாக்கு

அயோத்தியிலே கோலாஹலமாகப் பட்டாபிஷேகம் ஆனவுடன் ராமர் பல பேருக்குப் பல பரிசு தரும் போது ஒரு முக்தாஹாரத்தை ஸீதைக்குப் போட்டார். அவள்அதை கழற்றிக் கையில் வைத்துக்கொண்டு சுற்றியிருந்த அத்தனை பரிவாரங்களையும் பார்த்துவிட்டு ராமனையும் அர்த்த புஷ்டியோடு பார்த்தாள். இரண்டு பேரும் பரிபூர்ண ஐகமத்யம் (ஒரே சித்தம்) கொண்ட தம்பதி. அதனால் அவர்கள் மனஸுக்கு மாத்திரம் தெரிகிற மாதிரி ஆஞ்ஜநேயரை அந்தப் பெரிய ஸதஸிலே கொண்டாடுவதற்கு ஒரு ப்ளான் போட்டுக் கொண்டார்கள்.

ஸீதை ராமரைப் பார்த்த பார்வையிலேயே முக்தா ஹாரத்தை அந்தப் பரிவாரத்திலே யாருக்குக் கொடுக்கலாம் என்பதற்கு அவருடைய அபிப்ராயத்தைக் கேட்டு விட்டாள். உடனே ராமர், "பராக்ரமம், புத்தி, பணிவு எல்லாம் எவனுக்குப் பூர்ணமாக இருக்கிறதோ, அவனுக்கே கொடு!" என்றார்.

பாராட்டிதழ் (ஸைடேஷன்) படித்தவுடன் 'அவார்ட்' கொடுக்கிற மாதிரி பேரைச் சொல்லாமலே ராமர் இப்படி சொன்னவுடன் ஸீதை மாலையை ஆஞ்ஜநேயருக்குக் கொடுத்து விட்டாள்.

பட்டாபிஷேக கட்டத்திலே இப்படி ஆஞ்ஜநேயருக்கு இரண்டு பெருமாகச் செய்ததற்கு ஈடு எதுவும் இல்லை.

ஒரு பெரிய மலைக்கு மேலே சந்திரிகையில் தாவள்யமாயிருக்கும் ஒரு மேகம் படிந்தால் எப்படியிருக்குமோ அப்படி அந்த முத்து மாலை ஆஞ்ஜநேய ஸ்வாமியின் பெரிய சரீரத்திலே புரண்டது.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



டாலே விட்டுக் காயத்தைச் சுத்தம் செய்வதற்குள் அம்மா, அண்ணா, அக்கா மூவரும் வேர்த்து விறுவிறுத்துப் போய் விட்டனர். அவ்வளவு தூரம் அப்பா ஆட்டம் ஆடிவிட்டார். ஒரு வழியாய் விரலில் ஒரு மொத்தையான துணிக்கட்டை அணிந்து கொண்டு மறுபடியும் கோதாவில் இறங்கினார்.

"கத்தி எங்கே? கத்தி எங்கே?" என்ற அதிகாரம் இந்த முறை.

"கத்திதானே? இந்தாங்கோ. தா...ரா...ளமா வெச்சுக்கோங்கோ. அதுலே நிச்சயமா ஒங்களாலே காயம் பட்டுக்கவே முடியாது" என்ற அம்மாவின் குத்தல் வாஸ்தவமாகவே கத்தியை விடக் கூராக இருந்தது... பாக்டரியில் அப்ரெண்டிஸாக இருக்கும் அண்ணா அதைச் சாணை பிடித்துத் தரவில்லை என்பது அவன் குற்றச்சாட்டு.

"சரிதான்மா. இதெல்லாம் நான் கொண்டுபோனா ஃபோர்மேன் "கத்தியைத் தீட்டாதே தம்பி புத்தியைத் தீட்டு"ன்னு கழுத்தைப் பிடிச்சுத் தள்ளிடுவான்" என்று அண்ணாவின் மறுதலிப்பு.

அக்காவின் மற்றுமோர் மணியான யோசனை. "அம்மா அரிவாமணையிலே வெச்சு நன்னா..." அவளை முடிக்க விடவில்லை அம்மா. "போறுண்டி சமத்து வழியறது. பாட்டில் என்ன பரங்கிக்காயா, வெச்சு நன்னா அரிய?"

சின்ன அக்கா பாலா எங்களது நக்கலைக் கேட்க நிற்காமல் ஓடினாள். அங்கே போய் அவள் என்ன சொன்னாளோ, எப்படிச் சொன்னாளோ ஐந்து நிமிடத்தில் பக்கத்து வீட்டுச் சாரங்க மாமா தூக்கக் கலக்கத்துடன் இரண்டு கைகளிலும் அரிவாளையும், கடப்பாரையையும் ஏந்தியவாறு வீரன், இருளன், காட்டேரி வகையில் ஒன்றைப் போல் வந்து நின்றார்.

நாங்கள் சிரித்து, சிரித்து உருண்டு, புரண்டு எழுந்து அவருக்கு விஷயத்தைப் புரிய வைப்பதற்குள் அவர் கோபித்துக் கொண்டு ஆயுத பாணியாகத் திரும்பிப் போய் விட்டார்!

அப்பா கண்களில் ஒரு வெறியே ஏறி விட்டது. டென்னிஸில் "கில்லர் இன்ஸ்டிங்க்ட்" என்று சொல்வார்களே அப்படி ஒரு வீரியத்துடன் "அதற்காச்சு தனக்காச்சு" என்ற துணிவில் பாட்டிலுடன் மறுபடி போராட இறங்கி விட்டார். காம்பஸ்கள், டிவைடர்கள், ஸேஃப்டிபின், குண்டூசி... ஒரு சாதாரண நடுத்தரக்குடும்பத்தில் இத்தனை கூரிய உபகரணங்களா என்று எங்களுக்கே கூட மலைப்பு ஏற்பட்டு விட்டது. ஒரு வழியாக மூடி எமெட்டாகப் பிய்த்து விழுந்தது. வெற்றியைக் கொண்டாடும் மூடில் யாருமே இல்லை. சின்னப் பாப்பா தூங்கி விட்டது. பக்கத்து வீட்டு மாமாவை அழைத்துவந்த பாலா போர்வைக் கடியில் பதுங்கி விட்டாள். பெரியக்கா விசும்பி முடிக்கவில்லை. தங்கையும் அவளோடு ஒத்து ஒற்றுமையாக விசும்பிக் கொண்டிருந்தாள். எனக்கோ பிளேடு போன துக்கம். அம்மாவுக்கோ பாட்டியால்

தான் இத்தனை கஷ்டமும் என்ற எண்ணம். அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பது போல் டானிக்கைச் சாப்பிட மறுத்து விட்டாள்.

ஸ்பூனில் கொட்டிய மருந்து சிந்திவிடக் கூடாதே என்று ஏகாக்கிர சிந்தையுடன் அதையே தியானம் செய்து கொண்டிருந்த அப்பா கடைசியில் பொறுமை இழந்து தானே அதைச் சாப்பிட்டார். சோர்வோடு தள்ளாடியவாறு அவர் படுக்க எழுந்து போனதைப் பார்க்கக் கொஞ்சம் பாவமாகத் தான் இருந்தது. மூடியை இழந்த பாட்டில் தலைமேலே ஒரு கிண்ணத்தைக் கவிழ்த்துக் கொண்டு குற்றவாளியைப்போல் மேஜையில் அமர்ந்தது.

பாட்டி தூங்கியிருப்பாள் என்று நாங்கள் நினைத்தது தவறு. ''ஏண்டிம்மா, ஒன் புருஷனுக்குக் கூடவே கொஞ்சம் டானிக் கொட்டிக் குடு. அடுத்த பாட்டிலைத்தொறக் கறதுக்குள்ளே இப்போ போன சக்தியெல்லாம் திரும்பி வந்து ஒடம்பு தேற வேண்டாமோ. பார்த்துச் செய்'' என்றாள். பாட்டி சின்ன வயதில் என்ன டானிக் சாப்பிட்டாள் என்பதை அப்புறமாக அவளிடம் கேட்க வேண்டும் என்று தோன்றியது.

ஒரு பாவம் கரைகிறது



—நாகராஜன்—

போட்டிக்கதை 8

அத்தையைப் பார்த்ததும் அழுகை நெஞ்சில் பொங்கிப் பொங்கி வழிந்தது. உதடு துடித்தது. கண்ணீர் இமையோரம் திரண்டது. கைக்குழந்தையை இறக்கிவிடத் தோன்றவில்லை. காலை இடிக்கும் சூட்கேஸை முதலில் எடுத்துவிட்டு இறங்கத் தோன்றவில்லை. அத்தை ரொம்ப நேரமாகப் பூமாவின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்திருக்க வேண்டும். அதனால்தான் சைக்கிள் ரிக்ஷா முதல் தடவை மணி அடித்ததும்முட்டாக்கைஇழுத்துப்போர்த்திக் கொண்டு முடியா விட்டாலும் கூட ஓடிவருகிறாள். பூமாவுக்கு அந்தக் காட்சி மிகுந்த வேதனை தருவதாக இருந்தது. அத்தைக்கா இப்படியொரு தலையெழுத்து. நம்பக் கூட முடியவில்லை!

உணர்ச்சிகளை வென்று தன்னிலைக்கு முதலில் திரும்பியது அத்தைதான்.

சூட்கேஸை வாங்கி நிலைப்படியில் சாத்தினாள்.

குழந்தையைப் பக்குவமாக வாங்கிக் கொண்டாள்.

பூமா இறங்கிப் பணம் கொடுத்ததும் ரிக்ஷா கிளம்பியது.

''வா'' என்று சொல்லிவிட்டுக் குழந்தையுடன் அத்தை உள்ளே நுழைந்தாள்.

ஒரே அறைதான் வீடு!

ஒரு பக்கம் படுக்கையை அடுக்கியிருந்தார்கள். கொஞ்சம் தள்ளி ஓரிரண்டு ஸ்வாமி படங்கள்!

நேர் எதிர்த்திசையில் ஸ்டவ் அடுப்பும் தட்டுமுட்டுச் சாமான்களும்.

கறுப்புக் கம்பளியில் படுத்திருந்தான் சீனி. சீனிதானா அவன்! ஒரு நிமிஷம் கழுத்தை உயர்த்தி இமைகளைச் சிமிட்டிச் சிமிட்டி முறைத்துப் பார்த்ததில் அது சீனிவாசன் தான் என்பது உறுதியானது!

மற்றபடி சாதாரண சீனிவாசனுக்கும் இதோ ஜாண்டிஸ் வந்து இரண்டாவது வாரத்தை வெற்றிகரமாகப் படுக்கையில் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த வியாதிக்கார சீனிவாசனுக்கும் நிறைய வித்யாசங்கள்

அத்தை மட்டும் என்ன! வற்றலாய்ப் போய் விட்டாள்! படுகிற கஷ்டத்தை வாய் விட்டுச் சொல்லவில்லை. மற்றபடி அவளும் ஒரு சீக்காளிதான்! இல்லையேல் அத்தையையும் பக்கத்துப் படுக்கையில் போட்டுத்தான் பாதுகாக்க வேண்டும்! பேச்சு மட்டும் கணீரென்று வருகிறது!

பூமாவுக்கு அத்தையிடம் மிகவும் பிடித்த அம்சம் இந்தப் பேச்சுதான்!

பேச்சில் தான் எவ்வளவு சாமர்த்தியம்! சாதுரியம்!

அப்பாவுக்கு அத்தையின் சாதுரியத்தின் மேல் அபார மதிப்பு!

ஆனால் அந்த மதிப்பெல்லாம், பூமாவின் கல்யாண விஷயத்தில் அத்தை காட்டிய கண்டிப்பில் சரிந்து விழுந்தது.

அத்தையின் முதல் பையன் ராகவன் பேங்க் வேலை 'கன்பர்ம்' ஆனதும் அப்பா அத்தையிடம் பேச்சை . ஆரம்பித்தார்.

''என் பையன் ராகவன் பணத்தை நான் ரொம்ப நம்பிண்டு இருக்கேன்! அதை வெச்சுத்தான் பொண்ணுகள் கல்யாணத்தை நடத்தணும்! நம்ம பூமாவுக்கு இப்போ கல்யாணத்துக்கு என்ன அவசரம்? காலம் வரட்டும்! நானே பார்த்து ஏற்பாடு செய்யறேன்''—

—பூமாவுக்கு அத்தையின் பேச்சு ஏமாற்றத்தைத் தந்தாலும், அவள் தந்த நம்பிக்கை மிகுந்த திருப்தியைத் தந்தது.

அதற்குப் பிறகு ராகவனுடன் அதிகமாகப் பேசுவதை நிறுத்திக் கொண்டாள்!

குழந்தைக்கு அத்தையே அவளின் பழைய புடவை ஒன்றை மடித்துத் தொட்டில் கட்டியிருந்தாள்.

பூமா முகம் கழுவிக் கொண்டு வந்த போது சிம்னி விளக்கில் அத்தை கோடாய் நின்று கொண்டு தூளி ஆட்டுவது தெரிந்தது.

முன்னால் எல்லாம் அத்தையின் கையில் எப்போதும் நாலும் நாலும் எட்டு தங்க வளையல்கள் குலுங்கும். கோல்டு ஃப்ரேம் போட்ட கண்ணாடியும், அத்தைக்கு ஒரு ராஜகளை கொடுக்கும்.

ராத்திரிக்கு என்று தனி சமையல். அப்பளம், கூட்டு என்று தினமும் திருநாளாக இருக்கும்.

அப்போதெல்லாம், தன் வீட்டில் இருக்கவே பூமாவுக்குப் பிடிக்காது. அத்தை வீட்டிலேயே இருப்பாள்.

வீட்டில் அப்பா தர்ப்பைப் புல்லுடன் பழைய வேஷ்டியைத் துவைத்துக் கட்டிக் கொண்டு திவச காரியங்களுக்குத் தயாராயிருப்பார். அம்மா சமையல் வேலைக்குப் போவதில் குறியாய் இருப்பாள்.

தன் வீட்டின் அவல நிலைதான் அவளை அத்தை வீடே கதியாய் ஆக்கியது.

அம்மாவுக்கு அத்தையைக் கண்டால் பயம்.

''நீ ஒண்ணும் சமையல்காரி இல்லை. புது நாட்டுப் பொண்ணும் இல்லே. வெட்கப் படட்! வெளியில் வா உறவுதானே! சபைக்கு வா...''

பெண்கள் சிரிப்பார்கள்.

பூமாவுக்கும் அம்மா ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறுள் என்று உள்ளூர வெட்கமாக இருக்கும்.

பணம் இல்லாவிட்டால் என்ன? மதித்துத் தானே கூப்பிட்டிருக்கிறார்கள்! உறவு இருக்கிறதே! இங்கேவந்துஇயல்பாய்நடந்து கொள்வது தானே! இதென்ன தேவையில்லாத கூச்சம்?

அம்மாவின் வேலையையும் சேர்த்துப் பூமாவே செய்வாள்! வந்தவர்களின் பார்வையையும், பாராட்டையும் கவர்ந்து கொள்வாள்!

அப்பாவிடம் அம்மா மாதிரி 'காம்ப்ளக்ஸ்' எல்லாம் கிடையாது!


கார்கள், ஸ்கூட்டர்கள் நடுவே அவர் பழைய சைக்கிளும் நிற்பது மாதிரி அவரும் அந்தப் பணக்காரக் கூட்டத்தின் நடுவே தெரிந்தாலும் மனிதர் கலகலப்பாகப் பேசுவார்.

குடுமியை ஒரு தரம் அவிழ்த்துக் கட்டிக் கொண்டு, அங்கவஸ்திரத்தைச் சரி பண்ணிக் கொண்டு, சமூத்தைத் திருப்பி, 'சர்ரென்று' ஒரு சிட்டிகை பொடியை இழுத்துக் கொண்டு – சென்ற தடவை காஞ்சி சின்னவாள் வந்த போது நடந்த யாகத்தைப் பற்றி ஏதாவது சுவையாகப் பேசுவார்.

அத்தையின் இரண்டாவது பையன் ராம்குமாரை ''மாப்ளே'' என்று சத்தமாகக் கூப்பிட்டுக் கிண்டல் பண்ணுவார்.

பூமாவுக்கும் குமாரைச் சீண்டுவது மிகவும் பிடிக்கும். ராகவன் ரிசர்வ்ட் டைப். குமார் அதற்கு நேர் எதிர்.

அவன் படிக்கும் போது எதிரில் நின்று வேடிக்கை பார்ப்பாள். சரிசமமாக உட்கார்ந்து கேரம் ஆடுவாள். ராம்குமார் டிகிரி



முடித்து ஒரு ப்ரைவேட் கம்பெனியில் ஸ்டெனோ — டைப்பிஸ்டாக வேலைக்குச் சேர்ந்த சமயம் அத்தையின் இரண்டு பெண் களுக்கும் கூட கல்யாணமாகியிருந்தது.

குமாரும் கூட பூமா விஷயத்தில் ஓர் உறுதியோடு தான் இருந்தான்! அத்தை அவனைப் புரிந்து கொண்டாள்.

சரியான சமயம் பார்த்து அவன் உறுதி யைச் சாய்த்து விட்டாள்! அன்று அத்தை யின் பேச்சை யதேச்சையாகப்பூமா கேட்டது இன்றும் கூட அத்தைக்குத் தெரியாது!

''குமார்! இந்த வருஷம் உன் கல்யா ணத்தை முடிச்சுடலாம்னு பார்க்கிறேன். ஒரு நல்ல வரன் வந்திருக்கு...''

''அம்மா... நான்... வந்து...''

''தெரியும்டா. நீ என்ன சொல்லப் போறேங்கறது எனக்குத் தெரியும். நான் பூமாவைக் காதலிக்கறேன்னு சொல்ல வர்றே இல்லே...''

அவன் அம்மாவின் இந்தத் தாக்குதலைக் கண்டு பிரமித்து நின்றான்.

''அவ உங்கிட்டே சாதாரணமாகத்தான் பழகுறா. அவ நேசிச்சது ராகவனைத்தான். அதுக்கப்புறம் மனசைத் தேத்திண்டுட்டா! இதெல்லாம் இந்த வயசுல சாதாரணம்! எங்க அண்ணா கிட்டே என்ன இருக்கு? தர்ப்பைக் கட்டும், பழைய சைக்கிளும்! நீயே யோசிச்சுக்கோ. நானைக்கு நீ ஒரு கஷ்டமும் இல்லாமல் சந்தோஷமா இருக் கணும்...''

பூமாவுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. நெஞ்சை அடைத்தது. கதவைத் திறந்து கொண்டு ஓடிவிட வேண்டும்போல் வந்தது! அது தப்பு! தான் ஒட்டுக் கேட்டது போல் ஆகிவிடும். எனவே மீண்டும் கண் களை மூடிக் கொண்டு உறங்க முயன்றாள்.


அந்த இரவுக்குப் பிறகு அத்தையும், அவள் பிள்ளைகளும் அந்த வீடும் அவளுக்கு அந்நியமாகிப் போயின!

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் கூட இது ஆச்சரியமாகிப் போனது!

வீட்டில் இருந்தபடி டைப்பும், ஷார்ட் ஹேண்டும் படிக்க ஆரம்பித்தாள். மனி தர்கள் தந்த கசப்பு அனுபவம் படிப்பில் 'கான்சென்ட்ரேட்' செய்ய உதவியது!

கடலில் நுட்பமான சிப்பிகள் சில வாழ்கின்றன. இவைகளில் பத்தாயிரம் சிப்பிகள் வரை சேர்த்தால் கூட ஒரு வத்திப்பெட்டி அளவு நிரப்ப முடி யாது.

—தெய்வயானை.



பிறகு பப்ளிக் சர்விஸ் கமிஷன் பாஸாகி வேலைக்குச் சேர்ந்தபொழுதில் கூட அத்தையை நமஸ்காரம் பண்ணப் போக வில்லை!

பூமாவின் வேலை நிரந்தரமானதும் மறு வருஷம் அத்தை சீனிக்கு அவளைப் பெண் கேட்டிருக்கிறாள்.

சீனி — எஸ்.எஸ். எல். ஸி. பெயிலாகி, ஒரு பிரைவேட் கம்பெனியில் ஆபீஸ்பாயாக இருக்கிறான். காலைச் சாய்த்துச் சாய்த்து நடப்பான். ''நொண்டிச் சீனி'' என்றால் அந்த வட்டாரத்திலேயே அவனைத் தெரியும்!

அவனுக்குப் பூமாவை அத்தை கேட்ட போது, அப்பாவிடம் திடமாகச் சொல்லி விட்டாள்!

''நீங்கள் வேறு யாரையாவது பாருங்கள் வெளியில்! ஒரு சமையல்காரன் என்றாலும் சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறேன்.''

சமையல்காரன் இல்லை! ஹோட்டல் வைத்து நடத்துபவனே கிடைத்து விட் டான்! முதலில் கொஞ்சம் தயக்கமாகத் தான் இருந்தது. நிரந்தரமில்லாத வரு மானம்! பெரிய ஹோட்டலுக்குப் போட்டி யாக விலையும் வைக்க முடியாது. ருசியும், அளவும் அதைவிட அதிகம் இருக்கவேண் டும்! கட்டுப்படியாகுமா?

பூமாவிற்கு ஆச்சரியமாக இருந்தது. அவள் கணவனின் பேச்சையும், பழகும் முறையையும், சாப்பாட்டில் ருசியையும், பாராட்டிப் பல பெரிய மனிதர்களே காரில் வந்து இறங்கிச் சாப்பிட்டுவிட்டுப் போவதைப் பார்க்கிற பொழுது நிறைய நம்பிக்கைகள் நெஞ்சில் மலர்ந்தன.

கல்யாணமான புதிதில் இடுப்பொடிய வேலை இருக்கும். எப்போதடா போய்ப் படுக்கையில் விழப்போகிறோம் என்றிருக்கும். கடைசியில் லாபத்தைக் கணக்கிடும்பொழுது பட்ட கஷ்டங்கள் அனைத்தும் காகித நோட்டுக்களாய் அஞ்சும் பத்துமாய்க் கண் சிமிட்டுவதைக் காணும் பொழுது மனம் சந்தோஷத்தில் துள்ளும்!

பூமா தன் அலுவலக வேலையை விட்டு விட்டாள்!

ஹோட்டல் வேலைக்கு மேலும் இரண்டு பேர்களைப் போட்டாயிற்று. ஹோட்டலில் கன்மைக்கா டேபிளும் டிஸ்டெம்பர் பூச்சும் புதிய பெயர்ப் பலகையும் மேலும் கூட் டத்தை வரவழைத்தது!

இந்த உழைப்பிலும் முன்னேற்றத்திலும் அத்தை முற்றாக மறைந்து போனாள் நினைவு களிலிருந்து. அவள் கணவன் இறந்து போனதோ அல்லது பையன்கள், அவளைக் கவனிக்காமல் விட்டுப் போனபோதோ, பார்க்கத் தோன்றவில்லை.

இதோ இன்று வந்தது கூட அவள் கணவ னின் வார்த்தைகளைத் கேட்டுத்தான்! அவரும் அத்தைக்குத் தூரத்து உறவாம்.! யதேச்சையாகப் பார்க்க வந்தவர் அவளின் நிலைகண்டு மனம் பதறிப்பூமாவைத் துணைக்கு இருக்க அனுப்பியிருக்கிறார்.



கண் ஒளி பெற வழி காட்டிடுவீர்!

நேத்ரகல்யாண்

சூப்பர் பம்பர்

சந்த் பரமானந்த் பிளைண்ட் ரிலீ:ப் மிஷின்
உதவி நிதிக்காக!

WIN Rs 7.40 CRORES

60 முதல் பரிசு ரூ 5 லட்சம் வீதம் (குலுக்கல் கடைசி 5 எண்களில்)

120 இரண்டாவது பரிசு ரூ 1 லட்சம் வீதம் (குலுக்கல் கடைசி 5 எண்களில்)

600 மூன்றாவது பரிசு ரூ. 10,000 வீதம் (குலுக்கல் கடைசி 4 எண்களில்)

6,000 4வது பரிசுகள்
ரூ. 500/- வீதம்
(குலுக்கல் கடைசி 3 எண்களில்)

60,000 5வது பரிசுகள்
ரூ. 50/- வீதம்
(குலுக்கல் கடைசி 2 எண்களில்)

6 லட்சம் 6வது பரிசுகள்
ரூ. 20/- வீதம்
(குலுக்கல் கடைசி எண்ணில்)

மொத்த விற்பனையாளர்கள் :
ஜாஸ்மின் & கோ.
புது தில்லி-110 001.

ஆர்கனைஸிங் ஏஜெண்ட் :
ஸ்வஸ்திக் லாட்டரி ஏஜென்ஸிஸ்
15, ஹோட்டல் காண்டினென்டல் அனெக்ஸ்
கன்னாட் பிளேஸ், புது தில்லி-110 001.
தொலைபேசி : 310374, 311208.

6 வரிசைகள் முத்தா ரூ. 20/- மட்டுமே

60% பரிசாக வழங்கப்படுகிறது

குலுக்கல் நாள் **22-11-84**

சூப்பர் ஸ்டாக்கிஸ்ட்: பிரியா லாட்டரி ஏஜென்ஸிஸ், 160, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை-600 005. பாண்டிச்சேரி ஸ்டாக்கிஸ்ட்: M/s D. R. ராஜசேகர், பெங்களூர் ஸ்டாக்கிஸ்ட்கள்: M/s மஹாலட்சுமி ஹால், M/s விஷ்ணு ஏஜென்ஸிஸ், M/s வாசுதேவ் ராஜ்னி, M/s பாலாஜி ஏஜென்ஸிஸ், M/s சுகால் லாட்டரி ஏஜென்ஸிஸ்.

பட்டுப் புடவை பரிசுத் திட்டம்

மூன்று முடிச்சு விழுந்த போது..

போட்டி: 25.



மூன்று முடிச்சு உங்கள் கழுத்தில் விழுந்த போது அல்லது நீங்கள் தாலி முடிந்த போது என்ன உணர்ச்சி ஏற்பட்டது? ஓமே வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப்பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். பிரசுரமானால் பரிசு. ஒருவருக்குக் குலுக்கல் முறையில் பட்டுப் புடவை. உறையின் மேல் ''மூன்று முடிச்சு'' என்று குறிப்பிடுதல் அவசியம்.

முடிவு தேதி: 5.11.84.

இன்னும் 28 பட்டுப் புடவைகளே பாக்கி. வாய்ப்பை நழுவ விடாதீர்கள். வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெறவும்.

என் பெயர் : ....

விலாசம் : ....

....

தூளியில் குழந்தை சிணுங்கியது. சாப்பிடும் போது அத்தை சொன்னது நினைவுக்கு வந்தது.

''பூமா நீ என்னை விட வயசில எவ்வளவோ சின்னவ. இருந்தாலும் நான் உங்கிட்ட மன்னிப்புக் கேட்டுக்கறேன். நீ எனக்கு எவ்வளவு உண்மையா உழைச்சிருக்கே! ஒரு சின்ன உதவி கூட பதிலுக்குப் பண்ண எனக்கு மனசு வரலியே! பணம் பையன்களோட எதிர்காலம்னு என்னோட சின்ன வட்டத்தைப் பற்றிய கவனமா இருந்தேனே தவிர என் வீடே சதியா இருந்த உன்னைக்கவனிக்கலே! என்பையன்கள் இப்போ லட்சியம் பண்ணலே. வேண்டாத பண்டமாயிட்டேன்! இப்போ எனக்கு எல்லாமே புரியறது. எவ்வளவு ஆசைகளோட நீ ஒவ்வொண்ணையும் எதிர்பார்த்திருப்பே! ஒவ்வொரு ஏமாற்றமும் உனக்கு எத்தனை துன்பத்தைத் தந்திருக்கும்...''

அத்தையால் மேற்கொண்டு தொடர முடியவில்லை.

பூமாவுக்கு மூச்சை அடைத்தது.

''நான் ஏமாந்தது நிஜம்தான்! ஆனால் இன்னிக்கு நான் நன்னு இருக்கறதுக்கு அந்த ஏமாற்றம் ரொம்ப உதவியா இருந்திருக்கு! யாருக்கு யாருன்னு முன்னுலேயே தீர்மானமாயிருக்கு! அத்தை பையன்னு ஆசைப்பட்டா நடந்திடுமா என்ன...?'' என்றாள்.

''நீ ஆயிரம் தான் சொன்னாலும் எனக்கு மனசு கேட்காது. இனிமேல் சீனி பிழைப்பானுன்னு எனக்குச் சந்தேகமாத்தான் இருக்கு. அப்படி அவனுக்கு ஏதாவது ஆயிடுத்துன்னு அதுக்கப்புறம் நான் அனாதையா ஆயிடுவேன்! அப்போ உன்கிட்டத்தான் அடைக்கலத்துக்கு வருவேன்! நீ எனக்கு உழைச்சதுக்கும், நான் உனக்கு உதவ மறுத்ததுக்கும் சேர்த்து—நான் இனிமேல் உன் ஹோட்டல்ல உழைப்பேன். வடைக்கு அரைச்சு, மாவாட்டி என்னால் ஆன எல்லா வேலேகளேயும் காலம்பூரா சந்தோஷமா செய்து என் பாவத்தைக் கரைச்சுப்பேன்!'' அத்தை சுய பச்சாதாபத்துடன் பேசினாள்.

''பெரிய வார்த்தையெல்லாம் பேசாதீங்கோ! சீனிக்கு எதுவும் ஆயிடாது! கொஞ்சம் சரியாப் போனதும் ரெண்டு பேருமே எங்கூட வீட்டைக் காலி பண்ணிண்டு வந்துடலாம்! அங்கே போயி நல்லா ட்ரீட்மெண்ட் கொடுத்தா சீனி சட்டாயம் பொழைச்சுடுவான். அது என்னோட கடமை! கவலேயே படாதேங்கோ...''

அவள் பேச்சும், விசுவாசமும், அத்தையை அடித்துப் போட்டிருக்க வேண்டும்! அந்த அடியில் மனசு தாங்காமல் தூக்கம் வராமல் கண்ணீர் வார்த்தபடி படுக்கையில் கிடந்திருக்க வேண்டும்!

அதனால் தான் குழந்தையின் சின்ன சிணுங்கல் சத்தம் கேட்டதும் சட்டென்று எழுந்திருந்திருக்கிறாள்.

தூளியின் கயிற்றைப் பிடித்துப் பூமாவின் தூக்கம் கெடாமல் ஆட்டிக்கொண்டிருக்கிறாள்.

ஆட்டட்டும்! அது அவளுக்குத் திருப்தி தரும் காரியம்!

வட்டமேஜை

● வாரியார் சுவாமிகளைப் பற்றிக் கட்டுரை அருமை! 64—வது நாயன்மாராகவே ஆத்திக அன்பர்களால் நினைத்து மகிழப்படும் வாரியார் சுவாமிகளைப் பற்றிய உண்மைகள். கல்கி செய்து வரும் ஆத்திகப் பணிக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு!
மயிலாடுதுறை. பழம்.

● உண்மை நிலையை யதார்த்தமாகச் சொல்லிய உஷா சுப்பிரமணியனின் கவிதை அபாரம்.
சென்னை—5. எஸ். சம்பத்குமார்.

● சுயநினைவிழந்து நிற்கும் நிலைதான் போதை. ஆனால் அந்த ஜெய்ப்பூர் விமான நிலைய அதிகாரிகளாகட்டும் அவர்களுக்குப் பின்னால் நின்ற மகாராஜா ராஜா... துணை அமைச்சராகட்டும், ஒரு எட்டு வயதுக் குழந்தையை நடத்திய விதம் இருக்கிறதே.. அது போதையல்ல; அதிகார மமதை'.
சென்னை—14. ஐயாறு எஸ். வாசுதேவன்.

● வலைப்பட்டிக்காரர் பேட்டியில் மிகவும் மனத்தை நிறைத்தது காஞ்சிப் பெரியவரைச் சந்தித்த நிகழ்ச்சிதான்!
கமுதி—3. பொ. பொன்ராஜ் குமார்.

● ''தங்கை தாயானள்'' சிறுகதை அருமை. அதில் உள்ள கருத்துக்கள் புதுமை.
கவுந்தப்பாடி. எஸ். பாரதி நாகராஜன்.

● தமிழக இ. காங்கிரஸ் உண்மையிலேயே கோஷ்டி மனப்பான்மையை விட்டு ஒருங் இணைந்துவிட்டால்தான் என்னபிரயோசனம்? மக்களின் நலம் காக்க எந்த அரசியல் கட்சியுமே நினைப்பதில்லை. பெயருக்குத் தான்வாய்ச் சவடால்... செயலில் ஒன்றும் இடையாது. மக்கள் விலை ஏற்றத்தால் எப்படி நலமோடு வாழ முடியும்?
சென்னை—56. டாக்டர் நாவலர் தாசன்.

● ஆமை புகுந்த வீடும், அமீனா நுழைந்த வீடும் உருப்படாது என்பது போல் அரசியல்வாதியின் அதிகார போதை தலை விடும் நாட்டை உருப்படச் செய்யாது என் பதைத் தலையங்கம் எடுத்துக் காட்டுகிறது.
லால்குடி. ஆர். சிவராஜ்.

● ஞானத்தந்தைத் திருமுருக வாரியார் அவர்கள் அழகிய இரு. உருவம் பிரசுரித்து அவரை 64—வது நாயன்மார் என போற்றுகிறார்கள் என்றும் கூறியுள்ளதைக் கண்டு சிலமிக்க அனைவரும் மகிழ்கிறார்கள். 64—வது நாயன்மாராகிய அவரின் திருநாமம் ''திருப் பணித் தொண்ட நாயனர்.'' இது கோயம் புத்தூரில் ஸ்ரீ சாந்தானந்த சுவாமிகள் முன் னிலையில் உறுதி செய்யப்பட்டுள்ளது.
மதுரை. ஸ்ரீ ராமமூர்த்தி பாகவதர்.

● வாசகர் எழுதியிருந்த சினிமா விமர்சனங்கள் நாலு நாலு வரிகளேயானலும் நயமாகவும், நையாண்டித்தனமாகவும்இருந்தன.
நெல்லிக்குப்பம். ரா. ஜோதிராமன்.

தீபாவளிக்கு முன் தீ விபத்து!



● 'உனக்காகக் காத்திருக்கிறோம் — நாடு காக்க நீ சீக்கிரம் பிறந்து வா' என்று காந்திஜிக்கு அழைப்பு விட்டிருக்கிறார் உஷா சுப்பிரமணியன் என்பதற்காக அழைப்பை ஏற்றுக் கொண்டு நீ பிறந்து விடாதே!
எத்தனை புத்தரும், ஏசுவும், காந்தியும் பிறந்து வந்தாலும் இந்தச் சமுதாயம் திருந்தப் போவதில்லை.
சென்னை- 57. இரணியல் 'கலை.'

● வழக்கம்போல, தீபாவளி வருவதற்கு முன்பாகப் பட்டாசுத் தொழிற்சாலையில் தீவிபத்து பற்றிய செய்தி வந்து விட்டது.
செங்கை மாவட்டம் மேல்பட்டி கிராமத்தில் பட்டாசுத் தொழிற்சாலை, வெடிமருந்து வெடிக்கவே, தீப்பற்றி 6 தொழிலாளர்கள் தீயில் சிக்கி மாண்டார்களாம்.
அபாயகரமான, அதேசமயம் நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்த பட்டாசு தயாரிக்கும் வேலையில் ஈடுபடுபவர்களின் உயிருக்குப் பாதுகாப்பு தரவேண்டியது நம் கடமை. நம்முடைய அரசு, தன் அதிகாரிகளைப்பட்டாசுத் தொழிற்சாலைகளுக்கு அனுப்பிப்பாதுகாப்பு ஏற்பாடுகளை, அடிக்கடி சோதனை செய்து வரவேண்டும்.
காட்டாங்குளத்தூர்.
—வி. கி. கிருஷ்ணரத்னம்.

(கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது)


வங்கமொழியின் பிரபல சிறுகதை, நாவலாசிரியையும் ஞானபீட விருது பெற்றவருமான ஆஷா பூர்ணாதேவி அவர்களின் சிறுகதை:

அவன் காவி உடுத்தியிருந்தானே யொழிய தலைமுடியைச் சடையாகத் திரித்துக் கொள்ளவில்லை. தாடியும் வளர்த்துக் கொண்டிருக்கவில்லை. இப்பொழுதெல்லாம் காணப்படும் நவீன சந்நியாசிகளைப் போல் கையில் 'ரிஸ்ட் – வாட்சும்' மூக்குக் கண்ணாடியும் மான் தோலில் செய்யப்பட்ட புது மோஸ்தர் செருப்புக்களையும் அணிந்து கொண்டிருந்தான். அவனுடைய காவி உடையின் பளபளப்பு அது பட்டுத்துணி என்று பறை சாற்றிக் கொண்டிருந்தது. இந்தச் சாமியார் காசிக்குப் போகும் எக்ஸ்பிரஸ் வண்டியில் முதல் வகுப்பில் ஜன்னல் ஓரத்தில் உட்கார்ந்திருந்தார்.

சுவாமிஜி, காசியில் நடக்கவிருக்கும் சமய மகாநாட்டில் கலந்து கொள்ளப் போய்க் கொண்டிருந்தார். அங்கு பல்வேறு சமயங்களைச் சேர்ந்த சாதுக்களும் சந்நியாசிகளும் கூடுகின்றனர். மூன்று நாட்கள் ஹிந்து மதத்தைக் காப்பாற்ற வழி வகைகள் என்ன என்பதைப் பற்றி விவாதித்து முடிவு காண்பதுதான் மகாநாட்டின் நோக்கம். வண்டி இன்னும் ஹவுரா ஸ்டேஷனை விட்டுப் புறப்படவில்லை. சார்ட்டில் ஸ்ரீமதி முகர்ஜி, ஸ்ரீமதி பானர்ஜி, மாஸ்டர் சாட்டர்ஜி என்று கிறுக்கலான எழுத்தில் எழுதப்பட்டிருந்தது. தன்னுடன் அப்பெட்டியில் பிரயாணம் செய்ய இருப்பவர்களுள் இரண்டு பெண்களும் ஒரு சிறுவனும் என்று அறிந்த போது சுவாமிகளுக்கு என்னவோ மாதிரி ஆகிவிட்டது.

மூன்று பேர் அவர் பெட்டிக்குள் எங்கிருந்தோ ஓடிவந்து விழுந்தார்கள். நாலாவது ஆசாமி பிளாட்பாரத்தில் நின்றுவிட்டான். அவன், ''சற்று, ஜாக்கிரதையாகப் போய் வா! நல்லவேளை வண்டியைப் பிடிக்க முடிந்ததே'' என்றான்.

வண்டிகளில் ஏறிய இளைஞன் தயாராகவே வந்திருந்தான்போலும், கைக்குட்டையை எடுத்து ஆட்டிக் கொண்டே கத்தினான்:



''அனில் அண்ணா போய் விட்டுவரேன்!'' நன்றாக வளர்ந்திருந்தான் இளைஞன். சந்தேகமில்லை — பணக்கார வீட்டுப் பையனாகத் தான் இருக்க வேண்டும்.

அவர் மனம் குழம்பியது. வந்த மூன்று பிரயாணிகளில் ஒருத்தி கிழவி. ஒருத்தி இளம் பெண். மூன்றாமவன் இந்தச் சிறுவன்.

இளம் பெண் காவி உடை உடுத்தியிருந்தாள். கண்களுக்குத் தங்க பிரேம் போட்ட மூக்குக்கண்ணாடி அணிந்திருந்தாள். அவளைப் பார்த்த மாத்திரத்திலேயே இவள் ஒரு செல்வச் சீமான்கள் குடும்பத்தில் பிறந்தவள் என்று தெரிந்து கொண்டுவிட முடியும்.

காவி உடுத்திய சந்நியாசினிகள் ஒன்றும் அதிசயமில்லை. அழகும் கவர்ச்சியுமிக்க ஒரு இளம்பெண் காவி உடையில் காணப்படுவது தான் குழப்பத்தை உண்டாக்குகிறது. ஒருவேளை காவி உடைதான் இன்றைய நாகரீகமோ! இந்தக் காலத்தில் பெண்கள் இம்மாதிரி தான் உடுத்த வேண்டும் என்ற நியதியில்லாமல் எப்படி எப்படியெல்லாமோ அணிந்து வருகிறார்களே! அம்மாதிரி இது ஒரு புது நாகரீக உடையோ?

பையனின் வாய் ஓயாப் பேச்சிலிருந்து சுவாமிஜி இவர்களைப் பற்றிச் சில தகவல்களைத் தெரிந்து கொண்டார். இவர்களும் அகில இந்திய சமயங்கள் மகாநாட்டுக்குப் போகிறார்கள் என்பதும் இதற்குக் காரணம் அந்த இளநங்கை என்பதும், கிழவி, அவளுடைய பாட்டி என்பதும், பையன் அவளுடைய தம்பி என்பதும் தெரிந்து கொண்டார்.

இந்தப் பையன் அவளுடைய தம்பியாக இருப்பானாகில் ஒருவேளை திருமணமாகி, கைம்மையுற்றவளாக இருக்க வேண்டும்.

கிழவி அந்தப் பையனை அடங்கியிருக்கச் செய்ய முயன்றாள். ஒரு பயனுமில்லை. பசிதான் அவனைக் கோபமாக மனம் போனபடி பேச வைத்து விட்டது! சந்நியாசி அவனுக்குப் பரிந்து பேசினார்.

''நீங்கள் சந்நியாசியாக இருந்தும் இதையெல்லாம் புரிந்து கொள்கிறீர்கள். இவனுக்கு ஒன்றுமே புரிவதில்லை'' என்றாள் பாட்டி.

சுவாமிஜி முறுவலித்துக் கொண்டே சொன்னார்: ''ஏன், இவரும் சந்நியாசி தானே!'' இந்த ஹாஸ்யத்தை அவரால் ஏனோ சொல்லாமல் இருக்க முடியவில்லை.

''சந்நியாசியாவது ஒன்றாவது — ஓயாமல் ஜமாய் பாபுவை (அத்தானை)யே நினைத்துக் கொண்டிருக்கிறாள். அதனால் தான்... சரி, எனக்கென்ன வந்தது. நான் பேசப் போவதுமில்லை, சாப்பிடப் போவதுமில்லை'' என்று சொல்லிவிட்டுச் சந்து மேல் பர்த்துக்குத் தாவி ஏறி, முகத்தைத் திருப்பி, முதுகை அவர்களுக்குக் காட்டியவாறு படுத்து விட்டான். அவன் ஜமாய்பாபுவைப் பற்றிப் பேச்சு எடுத்திருக்கக் கூடாது. என்ன செய்வது, ஏதாகிலும் உளறித் தொல்லையில் மாட்டிக் கொளவதே வழக்கமாகி விட்டது. அவன் அக்காளின் கல்யாணத்துக்கு ஒரு மாதத்துக்கு முந்திதான் பிறந்தான். இருந்தாலும் அவன் ஜமாய் பாபுவைப் பற்றிப் பேசுவதைப் பார்த்தால் அவரை அவன் ரொம்ப நன்றாக அறிந்தவன் போல் தோன்றும். இதில் அதிசயம் ஒன்றுமில்லை. அவன் பாட்டிதான் வாய் ஓயாமல் தன் மாப்பிள்ளைப்பேரனைப் பற்றிய குறைகளையும், நிறைகளையும் சதா கூறிக் கொண்டிருப்பாளே!


சந்து திடீரென்று எழுந்து, ''என்ன நீங்கள் கையில் சாப்பிட ஒன்றும் கொண்டு வரல்லையா?'' என்று கேட்டான்.

''ஆமாம். என் சாமான்களை எடுத்து வைப்பதிலேயே நேரம் சரியாகப் போய் விட்டது. உன் சாப்பாட்டை எடுத்து வைத்துக் கொள்ள மறந்து விட்டேன்.''

''நான் ஒருவன் இருக்கிறேன் எனக்குச் சாப்பாடு தேவைப்படும் என்பதே மறந்து விட்டதா? அழகுதான் போ!''

பாட்டி இப்போது, ''ராணி, போதும் நிறுத்து. அவனை அனாவசியமாகச் சீண்டாதே! சந்து கண்ணா! சாப்பிடுவதற்கு நான் நிறையக் கொண்டு வந்திருக்கிறேன். கவலைப்படாதே! ஆமாம் உனக்கு இப்ப பசிக்கத்தான் செய்யும்'' என்றாள்.

இப்படிச் சொல்லிக் கொண்டே பாட்டி, தான் ஒரு பாட்டிலில் கொண்டு வந்திருந்த கங்காஜலத்தில் தன் கைகளைக் கழுவிக் கொண்டாள். பிறகு ஒரு பித்தளை டிபன் காரியரை எடுத்துத் தன் முன் வைத்துக் கொண்டாள். திடீர் என்று சுவாமிஜியிருந்த பக்கம் திரும்பி, ''பாபா!... நான் நல்ல ஸந்தேஷ் கொண்டு வந்திருக்கிறேன். ஒன்றை ருசி பார்க்கிறீர்களா?'' என்றாள்.



ஆஷா பூர்ணதேவி

''வேண்டாம்! நான் - வேளை தவறிய வேளையில் சாப்பிடுவதில்லை!''

சந்து மிகுந்த சுவாரஸ்யத்துடன் சாப்பிடலானான். பாட்டி, சுவாமிஜியுடன் பேச்சுக் கொடுக்கலானாள்: ''சுவாமிஜி என்ன பேலூர் மடத்தைச் சேர்ந்தவரா?''

''ஆமாம், அம்மா!''

''பாபா என்ன காசி வரைக்கும் போகிறீர்களா?''

''ஆமாம் தாயே!''

''பாபா இருப்பது காசியில்தானோ?''

''இல்லை. நான் ஒரு நாலு நாட்களுக்குத் தான் அங்கே போகிறேன்.''

''அந்த ஹிந்து மகாநாட்டுக்கா?''

''ஆமாம்!''

இப்போது ராணியின் முகத்தில் சுவாரஸ்யமும் ஆர்வமும் குடிகொண்டன. அவள் ஊகித்தது சரிதான்!

பாட்டி மிகுந்த உற்சாகத்தோடு சொல்லுள்: ''நாங்களும் அங்கே தான் போகிறோம். இது என் பேத்தியின் பிடிவாதம். சாதுக்களும், சந்நியாசிகளும் கூடுகிறார்கள் என்றும் அந்த இடத்துக்கு அவள் போயே ஆக வேண்டும்...''

''இதை எல்லாம் அவரிடம் சொல்லி அவர் நிம்மதியை ஏன் கெடுக்கிறாய்?''

''பாபா, என் பேத்திக்கு எட்டு வருஷங்களுக்கு முன் கல்யாணமாயிற்று. ஆனால் கல்யாணமான சில நாட்களில் மாப்பிள்ளை பேரன் காணாமற் போய் விட்டான். அவன் ஹிமய மலைக்குத் தவம் செய்யப் போய் விட்டான் என்றார்கள் சிலர். வேறு சிலர் நீலயானந்தா என்ற புதுப் பெயரை வைத்துக் கொண்டு பேலூர் மடத்தில் சேர்ந்து விட்டான் என்கின்றனர்.''

சுவாமிஜிக்கு வியப்பாகப் போய் விட்டது. ''நீங்கள் சரியாக விசாரிக்கவில்லையா?''

''விசாரித்தோம் பாபா. ஆனால் அவ்வளவு தீவிரமாக விசாரித்தோம் என்று

உங்கள் கார் திடீரென்று ரிப்பேர் ஆகிவிட்டால், என்ன கோளாறு என்பதை அதிலேயே பொருத்தப்பட்டுள்ள கம்ப்யூட்டர் உங்களுக்கு அறிவித்து விடும்! யாரும் பொய் சொல்லி ஏமாற்றி உங்களிடம் பணம்பறிக்கமுடியாது! அமெரிக்காவில் இது அறிமுகமாகியுள்ளது.

ஆதாரம்: சொஸைட்டி
—சம்பத்குமாரி.



சொல்ல முடியாது. ஏனெனில் இவனுக்குத் தகப்பனுருமில்லை; மாமனுருமில்லை: நான் சொன்ன பெயருள்ள சுவாமிஜி யாரையேனும் உங்களுக்குத் தெரியுமா?''

''நீங்கள் என்ன பெயர் சொன்னீர்கள்...''

''நீலயானந்தா!''

சுவாமிஜி ஒரு கணம் மௌனம் சாதித்தார். ''எங்கள் அலகாபாத் கிளையில் 'நிரயானந்தா' என்ற பெயருள்ள சாமியிருப்பது எனக்குத் தெரியும். அவரை ஏற்றுக் கொள்ள எங்கள் தலைவர் தயங்கினார் என்பதும் தெரியும். ஏனெனில் அவர் திருமணமாகியிருந்தவர். பிறகு அவர் ரொம்ப தூரம் கெஞ்சிக் கேட்டுக் கொண்ட பிறகு எங்கள் தலைவர் ஏற்றுக் கொண்டார்...''

கிழவியும் சற்று நம்பிக்கை வந்தவளாக, ''அதுதான் அவன் பெயரோ என்னவோ! கொஞ்சம் விசாரித்துச் சொல்வீர்களா?'' என்று கேட்டாள்.

''அவர் தம் மனைவி, குடும்பம் யாவற்றையும் அவராகவே உதறிவிட்டு இப்பாதையை மேற்கொண்டு விட்ட பிறகு விசாரித்துத் தான் என்ன பயன்? நாங்கள் மக்களுக்குத் தொண்டு செய்ய வாழ்க்கையை அர்ப்பணம் செய்து விட்டவர்கள். நீங்கள் சொல்லும் சின்ன குடும்பத்துக்கப்பாலுள்ள பெரிய குடும்பம் எங்களது. ஆம், இப்படிப் பார்த்தால் நாங்களும் குடும்பஸ்தர்கள்தான். இதில் கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது?''

''நானும் இதைத்தான் சொல்கிறேன். ஆனால் இவளுக்கு இதையெல்லாம் யார் விளக்கிப் புரியும்படியாகச் சொல்வது? அவனை ஒரு தடவை பார்த்து விடவேண்டும். பார்த்து ஏண்டா இப்படிச் செய்தாய் என்று கேட்க வேண்டும் என்று துடிக்கிறாள்! வருஷக்கணக்காக அவனைத் தேடி அலைகிறோம்'' என்றாள் கிழவி.

சுவாமிஜிக்குக் காசி பிளாட்பாரத்தில் அமோகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. தன்னை அழைத்துப் போகக் காருடன் வந்திருந்த இளைஞர்களில் இருவரை அழைத்து, ''கொஞ்சம் பொறுங்கள். வருகிறேன்'' என்று சொல்லிவிட்டுப் பாட்டியைப் பார்த்து, ''அம்மா, நீங்கள் இங்கே தங்குவதற்கு ஏதாகிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா?'' என்று கேட்டார் சுவாமிஜி.

''ஓ, ஏற்பாடாகியிருக்கிறது. இங்கே எங்களுக்கே வீடு இருக்கிறது. என் வீட்டுக்காரருக்கு ஒவ்வொரு புனித க்ஷேத்திரத்திலும் வீடு கட்டி வைப்பதில் ஒரு ஆசை. இதையெல்லாம் அனுபவிப்பதற்குத்தான் ஒருவருமில்லை. அது போகட்டும். ஒரு விஷயம்...ராணி! அதை நீயேதான் சொல்லேன்!'' என்றாள் பாட்டி.

''முக்கியமான பிரசித்தி பெற்ற சுவாமிஜிக்கள் மடாதிபதிகள் தவிர மகாநாட்டுக்கு சாதாரண சாமியார்கள் கூட வருவார்களில்லையா?'' என்று கேட்டாள் ராணி.

''நிச்சயமாக, எத்தனையோ பேர் வருவார்கள். உயர்வு, தாழ்வு அடிப்படையில்



மக்களிடை பாகுபாடு செய்வதுண்டா!''

''என்னைப் போன்றவர்கள் மகாநாட்டுக்கு வரலாமா? அனுமதிப்பார்களா?''

''நிச்சயமாக வரலாம்.'' என்று கூறி அவர்களுக்கு உதவ முன்வந்தார் சாமியார்.

மகாநாடு மூன்று நாள் நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் காலை, பகல், மாலை என்று மூன்று பிரிவுகளாகவும் நடைபெற்றது. எனவே ராணியும், சுவாமிஜியும் வாயிலில், பந்தலில், வேலையாகப் போகும் போது — இப்படிப் பல தடவை ஒருவரையொருவர் எதிரும் புதிருமாகக் கடந்து போனார்கள். அவ்வளவே. பேசியிருந்தால் ஒரு வார்த்தை, இரு வார்த்தை தான் பேச வாய்ப்புக் கிடைத்தது.

வானில் நிலவு பால் பொழிந்து கொண்டிருந்தது. பாட்டியும், பேத்தியும் மொட்டை மாடியிலிருந்தனர். சந்து தன் புதிய நண்பனுடன் விளையாடப் போய் விட்டான். வேலைக்காரப் பெண் வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தாள். அப்போது சுவாமிஜி வந்தார். வேலைக்காரப் பணிப் பெண் அவரை உள்ளே அழைத்துக்கொண்டு வந்தாள்.

''வாருங்கள்! வாருங்கள்!'' என்று கூறிக் கொண்டே பாட்டியும் பேத்தியும் அவர் பாதங்களைத் தொட்டு நமஸ்கரிக்கலாயினர்.

''இது என்ன காரியம் செய்கிறீர்கள்? சந்நியாசிகள் பிறர் நமஸ்காரங்களை ஏற்கக் கூடாது. என்னுடன் இப்போது சுவாமி நிலையானந்தாவை அழைத்து வந்திருக்கிறேன். அவர் வெளியில் காரில் உட்கார்ந்திருக்கிறார்'' என்றார் சுவாமிஜி.

கிழவிக்கு ஆனந்தம் பிடிபடவில்லை. ''என்ன, அவரை அழைத்து வந்திருக்கிறீர்களா! அவரைப் பற்றி விசாரித்தீர்களா?'' என்று கேட்டாள்.

''ஓ, விசாரித்து விட்டேன். அவர் தாம் இன்னார் என்பதைச் சொல்லி விட்டார். அவர் உங்கள் பேத்தியின்...''

''பாபா! பாபா! நீங்கள் தெய்வமே தான். மனிதரல்ல — தெய்வமேதான்!''

''தாயே... கேளுங்கள். உணர்ச்சிவசப் பட்டு விட்டீர்கள். இவர்களிருவரும் ஒருவரையொருவர் ஒரு முறை சந்திக்கட்டும். அவர் தம் விருப்பத்தைச் சொல்லிவிட்டார். அவர் பேச்சினிடையில் தமக்குத் துறவு வாழ்க்கை அலுத்து விட்டதாகக் கூறினார். மகாநாட்டில் அவர் இவளைப் பார்த்து, தம் மனைவி தான் என்று தெரிந்து கொண்டுவிட்டார். எனவே நீங்கள் கேட்டுக் கொண்டால் அவர் இல்லற வாழ்க்கைக்குத் திரும்பக் கூடும்'' என்றார் சுவாமிஜி.

''பாபா... எவ்வளவு நல்ல சமாசாரத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். உங்களுக்கு...'' என்று கிழவி நெஞ்சம் விம்ம, குரல் தடுமாறக் கூறிக்கொண்டே போனாள். ராணி, பாட்டியின் வாயை அடக்கினாள். பின்னர் அமைதியான குரலில், ''நாங்கள் ஏன் இப்படிப்பட்ட அநீதியான கோரிக்கையைக் கேட்க வேண்டும்?'' என்று கேட்டாள்.



ஒலிம்பிக் போட்டிகளில் வெற்றிபெற்றவர் எவர் என்பதைத் தீர்மானிப்பது எப்படி? வெற்றியை நிர்ணயிப்பது மார்பு முதல் இடுப்பு வரையுள்ள உடல் பகுதிதான். தலையோ, கழுத்தோ, தோள் பகுதியோ முதலில் வெற்றிக் கோட்டை எட்டினாலும் அவர் வெற்றி பெற்றவராகக் கருத முடியாது! இதற்கு ஃபோட்டோ ஃபினிஷ் காமிராக்கள் உதவுகின்றன.
'சன்' இதழிலிருந்து.
—சீதாபஞ்சு.

''ஆனால் அவராகத்தானே திரும்பி வர விரும்புகிறார்'' என்று படபடப்புடன் கூறினாள் பாட்டி.

''பாட்டி போதும் நிறுத்து'' என்று கூறி விட்டு, சுவாமிஜியைப் பார்த்து, ''சுவாமிஜி நீங்கள் அவரிடம் சொல்லுங்கள் — அவர் ஏற்றுக் கொண்டுள்ள உயர்ந்த லட்சியப் பணியிலிருந்து அவரைக் கீழே இறக்க நான் விரும்பவில்லை என்று...''

''அப்படியானால் சரி, அதை நீயே அவரிடம் சொல்லேன் அம்மா!'' என்றார் சுவாமிஜி.

''முடியாது. நான் அவரைச் சந்திக்க மாட்டேன். நான் அவரைப் பார்க்க விரும்பவில்லை.''

''அவரைப்பார்க்க மாட்டாயா!'' என்று கிழவி நம்ப முடியாமல் கேட்டாள்.

''ஆம். பார்க்க மாட்டேன்.''

''உனக்குப் பார்க்க வேண்டுமென்றில்லையா?'' என்று சுவாமிஜி கேட்டார்.

''இல்லை!'' என்றாள்.

''ஆனால்...''

''இனி ஆனால் கீனால் இல்லை. நான் என் மனத்தில் உறுதி செய்து கொண்டு விட்டேன். நான் சந்நியாச ஆசிரமம் மேற்கொள்ளப் போகிறேன்'' என்றாள் ராணி.

''இது உன்னை நீயே ஏமாற்றிக் கொள்ளும் விளையாட்டல்லவா'' என்றார் சுவாமி.

இப்போது அவள் கண்களில் கனல் பறந்தது. ''ஒவ்வொருவருமே அந்த விளையாட்டுத்தானே விளையாடிக் கொண்டிருக்கிறோம்!'' என்றாள்.

''ஒரே ஒரு தடவை அவரைப்பார்த்து விட்டு வாயேன்!'' என்றாள் பாட்டி பரிதாபமாக. ''முடியாது!'' என்றாள் ராணி உறுதியாக.


தமிழாக்கம்: எஸ். வி. எஸ்.

பண்டிகைக்கால சிறப்புச் சலுகை

டான்சி

எஃகு மற்றும் மரச் சாதனங்கள் விலையில்

மாபெரும் தள்ளுபடி விற்பனை!





40% வரை



சிறப்புத் தள்ளுபடி

அக்டோபர்
15 முதல் 22 வரை

சிறப்பு, அழகு, சிக்கனம். ஆம். சிறந்த டான்சி பொருட்கள் குறைந்த அளவிலே உள்ளன. உடன் விரைவீர்!

உங்கள் தேவைக்கேற்ப சிக்கன விலையிலும் மனங்கவர் மரச் சாதனங்கள்!

டான்சி விற்பனை நிலையங்கள் :

- 1, ஒயிட்ஸ் சாலை, சென்னை-600 014. தொலைபேசி : 812273
- 681, அண்ணா சாலை, சென்னை-600 006. தொலைபேசி : 81816
- 23-27, அமெரிக்கன் கல்லூரிக் கட்டடம், மதுரை-625 002. தொலைபேசி: 33822
- 2023, நேரு ஸ்டேடியம், வ.உ.சி. பூங்கா, கோயம்பத்தூர்-641 018. தொலைபேசி : 30755
- 28-ஏ, நந்தி கோயில் தெரு, தெப்பக்குளம், திருச்சி-620 002. தொலைபேசி : 26983
- 13-15, முனிசிபல் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், நெடுஞ்சாலை, திருநெல்வேலி-627 001. தொலைபேசி : 3880
- சாரங்கபாணி கிழக்கு சந்நிதி தெரு, கும்பகோணம்-612 001. தொலைபேசி : 1615

டான்சி

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம்

(ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனம்)

1, ஒயிட்ஸ் சாலை, சென்னை — 600 014.

தொலைபேசி : 82161 தந்தி : TANSI டெலக்ஸ் : 41-7496 TNSI

DIPR/212/84(R)



1970லே கல்யாணம் ஆயிடுத்து. ஆனா 81லே தானே என் பொண்ணு உண்டானா!
என் அவ்வளவு வருஷம்?
அசடே!... 80லே தான் ராகமாலிகா புடவை கடை தொறந்தா. அன்னிலேருந்து என் மாப்ளே வட்டியும் முதலுமா ராகமாலிகா வுக்கும் பிரசவ ஆஸ்பத்ரி திருக்கும்தான் நடையா நடந்துண்டு இருக்கார்!
UMA FEATURES



பணம் படுத்தும் பாடு

II

பாங்குகள் அரசுடைமையாக்கப்பட்ட போது என்ன சொன்னார்கள்? 'தனியார் துறையில் பாங்குகள் பல மோசடிகளில் ஈடுபடுகின்றன. தனி நபர்கள் கொழுக்கிறார்கள். தேசிய உடைமையாக்கப்பட்டால் அதெல்லாம் இராது. மக்கள் பயனடைவர்' என்றார்கள்!

ஆனால் நடந்திருப்பது என்ன? மக்களவையில் துணை நிதி அமைச்சர் பூஜாரியே சொல்லியிருக்கிறார்:

81ல் கொள்ளை போனபணம் 83 லட்சம்
81ல் கொள்ளைபோன தங்கம்58.50லட்சம்
82ல் கொள்ளைபோன பணம் 140.48 லட்சம்.
82ல் கொள்ளைபோன தங்கம்16.37லட்சம்
83ல் கொள்ளைபோன பணம் 126.70 லட்சம்.
83ல் கொள்ளைபோன தங்கம்43.04லட்சம்

கொள்ளை போன பணமும், தங்கமும் லட்சக்கணக்கில்தான். ஆனால் மோசடிகள் கோடிக்கணக்கில் நடந்துள்ளன! கடந்த மூன்று ஆண்டுகளில் அரசுடைமையானவங்கிகளில் 69.40 கோடி மோசடி நடந்திருப்பதாக ஜனார்த்தன் பூஜாரியே தெரிவித்தார் நாடாளுமன்ற மக்களவையில்!

○ [illegible]



அரசுடைமையான பாங்குகளின் லட்சணம் இது!

பண வீக்கம்

எத்தனை பசுமைப் புரட்சி இருந்தாலும் ஆண்டுதோறும் அறுவடை அதிகரித்துக் கொண்டே போனாலும் விலைவாசிகள் மட்டும் கூடவே ஏறிக் கொண்டே போகின்றனவே தவிர இறங்குவதில்லை.

இதற்கு முக்கிய காரணம் மத்திய அரசாங்கத்தின் தவறான பொருளாதாரக் கொள்கைகளும் அதன் விளைவான பணவீக்கமும். பணவீக்கம் பல விதங்களில் ஏற்படுகிறது. ஓர் உதாரணம் பார்ப்போம்:

ரிசர்வ் பாங்கின் ஆண்டு அறிக்கை 82–83 ஐ விட 83–84–ல் ரிசர்வ் பணம் இரு மடங்காக அதிகரித்துள்ளதைச் சுட்டுகிறது.

ரிசர்வ் பணம் என்பது என்ன? கறுப்பும், வெளுப்புமாய் மக்களிடம் எவ்வளவு பணம் புழங்குகிறதோ அதுவும், பாங்குகளில் வட்டியில்லாமல் கரண்ட் அகௌண்டில் தூங்குகிறபணமும் சேர்ந்தது ரிஸர்வ் பணம். நோட்டு அச்சடிப்பதும் மக்களிடம் பணப் புழக்கமும் அதிகரிப்பதைத்தான் பணவீக்கம் என்கிறார்கள்.

மத்திய மாநில அரசாங்கங்கள் அவ்வப்போது மக்களிடம் கடன்கள் கோரிப்பெறுகின்றன. இந்தக் கடன் விண்ணப்பங்களைப் பத்திரிகைகளிலும் நாம் பார்க்கிறோம். இந்தக் கடன்கள் முழுவதும் மக்களால் தரப்படுவதில்லை. வங்கிகள் கொடுக்கின்றன. ரிஸர்வ் பாங்கும் தருகிறது. அண்மையில் மத்திய அரசின் கடன்களுக்காக ரிஸர்வ் பாங்க் 1338 கோடி தந்துள்ளது. இது பட்ஜெட்டில் துண்டு விழுந்த தொகையான 1600 கோடிக்கும் மேலாக அரசுக்குத் தரப்படு

வது. ஆகமொத்தம் 3000 கோடி பற்றுக் குறை!

மக்களின் சேமிப்பை அரசு கடனாகப்பெற்றால் அதனால் பண வீக்கம் அதிகரிக்காது. குறைவதற்கான சாத்தியக் கூறுகள் கூட உண்டு. ஆனால் ரிசர்வ் பாங்கு ஏகப்பட்ட கடன் அரசுக்குத் தரும் போது நோட்டு அச்சடிக்கப்படுகிறது. இப்படி இரண்டு மூன்று ஆண்டுகளாகவே ரிஸர்வ் பாங்கு கோடிக் கணக்கில் நோட்டு அச்சடித்து மத்திய அரசுக்கு நீண்ட காலக் கடன்களாக வழங்கியுள்ளது.

இப்படி அரசிடம் பணப் புழக்கம் அதிகமாகி அரசும் அதை உற்பத்திக்கு உதவாத இனங்களில் வாரிவிடும் போது பணவீக்கம் ஏற்பட்டு விலைவாசிகள் உயர்வதில் வியப்பே இல்லை.

ரிஸர்வ் பாங்க் பணி

ஏன் இப்படியெல்லாம் நடக்கவேண்டும்? மக்களை ஏன் வதைக்க வேண்டும்? நல்லசீரிய பொருளாதாரக் கொள்கைகளை அரசு வகுத்துக் கொள்ளக் கூடாதா? அதற்கு ரிஸர்வ் பாங்க் உதவக் கூடாதா என்றெல்லாம் நமக்குத் தோன்றுகிறதல்லவா?

முட்டாள்கள் பலவிதம்!

''சிறிது மூளையுள்ள முட்டாளைச் சமாளிப்பது போன்ற கஷ்டம் எதுவுமில்லை!''

—ரோச் பகால்டு.

''படு முட்டாளை விட, விவரம் தெரிந்த முட்டாள் மோசமான முட்டாள்!''

—மோலியர்.

''முட்டாள் தன்னைப் புகழ்பாட, தன்னை விட மோசமான முட்டாளைக் கண்டுபிடித்து விடுவான்!''

—பாயிலோ.

தொகுப்பு: சம்பத்குமாரி.



இந்தக் கேள்விகளுடன் ரிஸர்வ் பாங்கின் முன்னாள் கவர்னர் திரு. ஜகந்நாதனை அணுகினோம். ரிஸர்வ் பாங்கின் பணி குறித்து அவர் பேசினார்:

''ரிஸர்வ் பாங்கை மத்திய, மாநில அரசுகளின் வங்கி என்று சொல்லலாம். ரிஸர்வ் பாங்க் அரசுக்கு ஆலோசகராக இருந்து செயல்படுகிறது. ஆனால் மத்திய அரசுதான் நிதிக் கொள்கைகளை வகுக்க முடியும்.

''ரிஸர்வ் பாங்குக்கு முக்கியமான இரண்டு வேலைகள் உள்ளன. நாட்டில் எல்லா பாங்குகளையும் கண்காணிக்கும் பணி ஒன்று. மற்றொன்று, பாங்குகள் கடன் கொடுக்கும் முறையை ஒழுங்குபடுத்துவது; வழிமுறைப்படுத்துவது.

''நாட்டில் 42000 பாங்கு கிளைகள் இருக்கின்றன. இதில் 64000 கோடி ரூபாய் டெபாஸிட் செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாங்கும் தன்னிடமுள்ள டெபாஸிட்டில் 9 சதவீதத்தை ரிஸர்வ் பாங்கில் போட்டு வைக்க வேண்டும். பாங்குகள் தம்மிடமுள்ள பணத்தில் 36 சதவீதத்தை அரசுக்குக் கடனாகக் கொடுக்கின்றன.

''ரிஸர்வ் பாங்கு ஒவ்வொரு துறைக்கும் எவ்வளவு சதவீதத்தைக் கடனாக வழங்கலாம் என்று முடிவு செய்கிறது. 15 சதவீதம் விவசாயத் துறையில் உள்ளவர்களுக்கும், 40 சதவீதம் சிறு தொழில் அதிபர்களுக்கும் கடன் அளிக்கலாம். வணிகர்களுக்கு — அதுவும் குறிப்பாக மக்களுக்கு வேண்டிய அத்தியாவசியமான பண்டங்களை விற்கிறார்களே அவர்களுக்கு — கடன் கொடுப்பது கடினமாக்கப்பட்டுள்ளது பதுக்கலையும், கள்ளமார்க்கெட்டையும் தவிர்க்க இந்த நடவடிக்கை.

''தவிர 3 கோடிக்கு மேல் யாருக்காவது கடன் கொடுக்க வேண்டுமென்றால் ரிஸர்வ் பாங்கின் அனுமதி வேண்டும்.

''ரிஸர்வ் பாங்க் உத்தரவின்படி கிட்டத்தட்ட 3000 கோடி ரூபாய் உணவு கார்ப்பரேஷனுக்கு ஒவ்வொரு வருடமும் பாங்குகள் சலுகை வட்டியில் கடனாக வழங்குகின்றன. உணவுப் பண்டங்கள் பற்றாக் குறையைத் தவிர்ப்பது இதன் நோக்கம்.

''நோட்டு அடிப்பதற்கு நிதித் துறைதான் பொறுப்பே தவிர, எவ்வளவு அடிக்க வேண்டும் என்பதெல்லாம் ரிஸர்வ் பாங்கின் ஆலோசனையின் பேரில் தான் செய்யவேண்டும். நோட்டுக்களின் 'டிஸைன்கள்' கூட பாங்க் தான் போட்டுத் தர வேண்டும்.''

''நோட்டுக்களை, செல்லாததாக்குவதின் மூலம் (Demonetise) பணவீக்கத்தைக் குறைக்க முடியுமா?''

''1946—ல் முயற்சி செய்து தோல்வி அடைந்தோம். பர்மா, பாகிஸ்தான், ஸ்ரீலங்கா, ஆகிய நாடுகளில் கூட நோட்டுக்களை மதிப்பிழக்கச் செய்து பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தப் பார்த்தார்கள். ஆனால், தோல்விதான் கண்டார்கள்.''

அந்நியச் செலாவணி

''உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் போன்றவற்றின் பணம் ரிஸர்வ் பாங்க் மூலமாகத்தானே வருகிறது?''

''ஆமாம்! ஆனால், அவர்கள் டாலராகக் கொடுப்பார்கள். அதை ரிஸர்வ் வங்கிதான் ரூபாயாக நமது நாட்டின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்குக் கொடுத்து வருகிறது. ஆனால் திருப்பிக் கட்டும்போது டாலராகத்தான் கட்ட வேண்டும். வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள் இங்கு பணம் அனுப்பும் போதும் நமது ஏற்றுமதி பெருகும்போதும் இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்புத் தொகை உயர்கிறது. இறக்குமதிகள் செய்யும்போதும் உலக வங்கி, மற்றும் சர்வதேச நிதி நிறுவனம் ஆகியவற்றின் கடன்களைத் திருப்பித் தரும்போதும இந்த அந்நியச் செலாவணிக் கையிருப்பு குறைகிறது. ஆக, ஏற்றுமதியைப் பெருமளவு பெருக்குவதன் மூலம் தான் அந்நியச்செலாவணியை சம்பாதித்து உலகவங்கியின் கடனை அடைக்க முடியும்.''

''தற்போது நாட்டில் பாங்குகள் மக்களுக்குக் கடன்களை வாரி இறைத்துக்கொண்டிருக்கின்றன. இதனால் பணவீக்கம் பெருகாதா?''

''பொதுவாகவே பணப்புழக்கத்தைக் குறைத்தால் பணவீக்கம் குறையும். வாழ்க்கையில் கஷ்டப்படும் தனிப்பட்ட மனிதர்கள் முன்னேற இந்தக் கடன் தொகை உதவலாம். ஆனால் இதனால் பணப்புழக்கம் அதிகமாகிப் பண வீக்கம் அதிகரித்தால் விலைவாசி உயர்வால் இதே மக்கள் பாதிக்கப் படுகிறார்கள். எனவே ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் கடன் தொகை அதிகரிக்காமல் ரிஸர்வ் பாங்க் கண்காணிக்கிறது.''

சில சுவையான புள்ளி விவரங்கள்

- இந்தியாவில் 58 சதவீத பாங்குக் கிளைகள் கிராமப்புறங்களில் இருக்கின்றன.
- ரிஸர்வ் பாங்கிடம் எவ்வளவு தங்கம் இருக்கிறது என்பது பரம ரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறது. உத்தேசமாக இது 3000 கோடி ரூபாய்க்குக் குறையாது என்று நம்பலாம்.
- பஞ்சாபில் 9000 மக்களுக்கு ஒரு பாங்கு கிளை உள்ளது. அஸ்ஸாமில் 30,000 மக்களுக்கும், பீகாரில் 23,000 மக்களுக்கும், தமிழகத்தில் 14000 மக்களுக்கும் ஒருகிளை என்ற வீதத்தில் அமைந்திருக்கின்றன.
- தேசிய மயமாக்கப்பட்டபின் விஸ்தரிக்கப்பட்ட கிளைகளில் 78 சதவீதம் கிராமப்புறங்களுக்குச் சென்றிருக்கின்றன.

கட்டுரை: நமது நிருபர்கள்

திரு. ஜகந்நாதன் புகைப்படம்: சீதாராமராஜு

யோகாசன மகிமை


தைராய்டு சுரப்பிகள் இயங்குவதற்கு இந்த ஹலாஸனம் பெரிதும் துணை புரியும். முதுகெலும்புத் தொடர் சரிவர நெகிழ்ந்து கொடுக்கவும் கழுத்துப் பகுதியின் நரம்புகள் உறுதி பெறவும் உதவுவது இது.

'ஹலா' என்றால் கலப்பை என்று பொருள். இந்த ஆசன நிலை அப்படி ஒரு தோற்றத்தைத் தரும்.

ஹலாஸனத்தில் பல பயிற்சி நிலைகள் உண்டு.

மல்லாந்து படுத்துக் கால்களைச் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும். உள்ளங்கைகள், தரையில் அழுந்தியவாறு கைகளை உடம்போடு ஒட்டி நீட்டிக்கொள்ள வேண்டும். இது ஸ்திதி நிலை.

சேர்ந்துள்ள கால்களை அப்படியே 45 டிகிரிக்கு உயர்த்துவது முதல் பயிற்சி நிலை. அப்படியே கால்களை இன்னும் உயர்த்தி 90 டிகிரிக்குக் கொண்டு வருவது இரண்டாம் நிலை. அப்படியே உடம்பை மேலே உயர்த்திக் கால்களைத் தலைக்கு மேலே தரை மட்டத்துக்கு இணையாக நீட்டிக் கொள்வது மூன்றும் நிலை. இப்போது தாடை, மார்பைத் தொட்டுக் கொண்டு இருக்க வேண்டும். அடுத்த நிலையில், கால்களின் நுனியைத் தரையில் படியும்படி வைத்துப் பின்னர் கைகளைத் தலையோடு சேர்த்துக் கொள்வது. எடுத்த எடுப்பிலல்லாமல் படிப்படியாக நாளாவட்டத்தில் இறுதி நிலையை அடைய முயலவும். எத்தனை நாள்? அவரவர் உடல்வாகைப் பொறுத்தது இது. அவசரப்படக் கூடாது என்பதே முக்கியம். முயற்சியையும், தளர்த்தக் கூடாது.



ஹலாஸனம்

இறுதி நிலையிலிருந்து ஒவ்வொரு நிலையாகப் பழைய படி ஆகவேண்டும். இப்படி நிதானமாய்த் திரும்பும் போது தலையைத் தூக்கத் தோன்றும். அதை அனுமதிக்கக் கூடாது. எந்தக் கட்டத்திலும் நடுக்கம் (JERK) ஏற்படக் கூடாது. மெதுவாகவும், நிதானமாகவும் செய்யவேண்டும். தினமும் இரண்டு நிமிடங்கள் ஹலாஸனத்தில் இருக்கலாம்.

இருதய நோயுள்ளவர்கள், இரத்த அழுத்தநோய் உடையவர்கள், ஸ்லிப் டிஸ்க், உள்ளவர்கள் **ஹலாஸனம் பயிலக் கூடாது.**

ஹலாஸனம் இறுதி நிலையில் சீரான சுவாஸம் ஏற்படும். ஆஸ்துமா நோயாளிகளுக்கு நல்ல பலன் கிடைக்க இது உதவுகிறது. மூக்கடைப்பு விலகும்.

மூச்சை அடக்கிக் கொள்ள வேண்டியதில்லை. இயல்பாக எப்படி மூச்சு விட வருகிறதோ அப்படியே இயங்கினால் போதும். செயற்கையாக மூச்சை இழுப்பது, வெளிவிடுவது என்று எதுவும் தேவையில்லை. ஹலாஸனம் செய்து முடித்தபின் சற்று நேரம் சவாஸனத்தில் ஓய்வு கொண்ட பிறகு மத்ஸ்யாஸனம் அல்லது சக்ராஸனம் செய்வது நல்லது. இப்படிக் காம்ப்ளிமெண்டரியாக மாற்று ஆசனம் செய்வதன் மூலம், முதுகு, கழுத்து, மார்பு போன்ற உறுப்புக்கள் முன்புறம் வளைந்தது, எதிர்ப்புறமும் வளைந்து சமநிலைக்கு வர வசதியாக இருக்கும்.

விளக்கம்: விவேகானந்தா இளைஞர் மையம், சென்னை-5

கட்டுரை: **சுப்ர பாலன்**

படத்தில் ஹலாஸனம் பயில்பவர்: **பி. ரமேஷ்**

புகைப்படம்: **தாமு**





அந்த ஜூன் 16ம் நாள்

வெள்ளித்திரை

தலைப்பில் புதுமை இருப்பது போலவே படத்தையும் புதுமையாக எடுக்க வேண்டும் என்ற எண்ணத்தைப் பாராட்ட வேண்டும்.

வழக்கமான ஃபார்முலாக்களை ஒதுக்கி, மசாலா இன்றி ஒரு மர்மக் கதையை மர்மப் படமாகவே எடுக்க முயன்றிருக்கிறார்கள்.

ஆங்கிலப் படம் போல அமைய வேண்டும் என்ற ஆர்வத்துடன் செயல்பட்டிருப்பது புரிகிறது. அதிலும் ஜேம்ஸ் பாண்ட் பாணி அதீத கற்பனைகள் இன்றி ஒரு துப்பறியும் நாவலை ஹிட்ச்காக் பாணியில் படமெடுக்க முயன்றிருக்கிறார்கள்.

போலீஸைக் கடைசிக் காட்சியில் ஒப்புக்குக் கொண்டு வராமல் போலீஸ் இன்ஸ்பெக்டரே தொடக்கத்திலிருந்து புதிரை விடுவிக்க முற்படுவது போலக் கொண்டு போயிருப்பது... அப்பாடா இவர்களாவது நமது போலீஸை மதித்துச் செயல்பட்டிருக்கிறார்களே, என்று எண்ண வைக்கிறது.

நடிப்பைப் பொறுத்தமட்டில் வி. எஸ். ராகவன் ஜமாய்க்கிறார் என்று சும்மா சொன்னால் போதாது. கடைசிக் காட்சிகளில் நமது நெஞ்சங்களில் அவர் தோற்றுவிக்கும் திக் திக் வீடு திரும்பிய பிறகும் கூட நீடிக்கிறது! செந்தாமரை அவ்வப்போது மின்னல்.

டைரக்ஷன்: வி. எஸ். ராகவன் பாத்ரூமுக்குள் சென்று வெகு நேரமாகியும் வெளியே வராமல் போக போலீஸ் பரபரக்கிறதே அந்தக் காட்சி நினைவில் நிற்கிறது. மற்றபடி டைரக்டர் சண்முகம் பற்றிக் குறிப்பிடாமல் விடுவதே அவருக்கு நல்லது.

கதை, திரைக்கதை, வசனம் நமது 'புஷ்பா தங்கதுரை. மாத நாவல்களில் ஜகஜ்ஜாலம் பண்ணுகிற அளவுக்குத் திரையில் முடியாது என்பதை இந்தப் படம் நிரூபிப்பதாகத் தோன்றினால் அந்தத் தவறான கருத்து உருவாகக் காரணம் அவரல்ல. நல்ல டைரக்ஷன், திறமையான காமிரா, சிறந்த இசை அமைப்பு இவை இல்லாது போனதுதான்.

நடிக, நடிகையர் சோபிக்காமல் போனதற்கு டைரக்டரை ஒதுக்கி அவர்களை மட்டுமே காரணமாக்க முடியாது. நாவலைத் திரைக் கதையாக்கும் போது சினி ட்ரீட்மெண்ட் என்பதாக ஒன்றிருக்கிறதல்லவா? அது கவனிக்கப்பட்டதாகவே தெரியவில்லை.

போதாக் குறைக்கு சென்ஸார்கள் வேறு பாடாய்ப்படுத்தி.... எக்கச்சக்க வெட்டு...

16 எம். எம். பிலிமில் எடுத்து 35 எம். எம். க்கு பிரிண்ட் போட்ட சிக்கன நடவடிக்கை முன்னெச்சரிக்கையான புத்திசாலித்தனம்.

ஓடினால் சரி.

— ஜெயமன்மதன்

போட்டாரே ஒரு போடு!

பந்து உரு மாறி விட்டதால் வேறு ஒரு பந்து தருவிக்கப்பட்டு அப்பந்தை கார்ஃபீல்ட் சோபர்ஸ் வீச முற்பட்ட போது 'இப்பந்து புதிதாக இருக்கிறது' என ஆட்சேபணை எழுப்பினார் மட்டை பிடித்து ஆடிக் கொண்டிருந்த சோல்கர். 'இப்பந்து உங்கள் மட்டையில் படவா போகிறது? பேசாமல் இருங்கள்!' என்று சோபர்ஸ் போட்டாரே ஒரு போடு!

—சிதாபஞ்சு.



நீங்கள் கேட்டவை



○ மு. மதிவாணன், அரூர்.

? டிராஃபிக் போலீஸிடம் மாட்டிக் கொண்டதுண்டா?

! பட்டப் பகலில் மவுண்ட்ரோடில் — என்னமோ ஒரு அசட்டுத்தனம் — ஒரு யூடர்ன் அடித்தேன், மஞ்சள்கோட்டைக் குறுக்கே வெட்டி. யாருமில்லே, டிராஃபிக்குமில்லே என்று நினைத்துக்கொண்டிருந்த போது எங்கிருந்து தான் வந்தாரோ ஸார்ஜெண்ட்... 'ஸி, ஸி, ஸாரி ஸார்... மறுபடி இப்படி நேராம பார்த்துக்கறேன்' ..''விட்டுடச் சொல்றீங்களா? ஒண்ணு செய்வோம். இன்னிக்கு சாயந்திரம் ஆறு மணி வரை இங்கேயே நிற்போம். இன்னொரு மனுஷன் உம்மை மாதிரியே மஞ்சள் கோட்டைக்கடந்து யூ டர்ன் அடித்தால் உங்களை விட்டுடறேன்...'பரிதாபமாய் நான் நின்று அசடு வழிய... திடீர் திருப்பம்! அதிர்ஷ்ட தேவதை என் முன் தோன்றினாள். நான் செய்த பிழையையே செய்கிற இன்னொரு ஸ்கூட்டர் ஓட்டி உருவில்...! அப்புறம் ஏன் அங்கே நிற்கிறேன்!

டிராஃபிக் போலீஸிடம்



○ இவளா?..



○ ஷீ·



○ தபஸ்யா சின்னம்

○ பி. ப. கமலாகந்தர், கொச்சின்.

? பெண்கள் வேலைக்குச் செல்வதால் மட்டுமே ஒரு குடும்பத்தின் சரியும் பொருளாதார நிலை சீர்ப்படுமா?

! வேலைக்குச் செல்வதால் மட்டும் அது நடக்காது. இருவர் சம்பாத்தியத்தையும் எப்படிச் செலவிடுகிறார்கள், எந்த அளவுக்குச் சேமித்துக் குட்டி போட வைக்கிறார்கள் என்பதைப் பொறுத்துத்தான் பொருளாதாரம் சீர்ப்படும். பெண்கள் வேலைக்குப் போவதாலேயே பொருளாதாரம் மேலும் சீர்கெட்ட குடும்பங்கள் பல. அது எவ்வாறாயினும் தன் காலிலேயே நிற்க முடியும் என்ற நம்பிக்கையைப் பெண்கள் பெறுவது என்னவோ உறுதி.

○ நா. இருநாதன், சின்னக்குப்பம். ★

? திருமதி இந்திராகாந்தி தம் தந்தையிடம் பெற்ற அரசியல் பயிற்சி, திரு. ராஜீவ்காந்தி தம் தாயிடம் பெறும் அரசியல் பயிற்சி — ஒப்பிடுக.

! இவர்கள் ஒன்றும் அரசியல் பயிற்சி பெறவில்லை. அரசியல் தான் இவர்கள் வசதிக்காகப் பயிற்சி பெற்று அட்ஜஸ்ட் பண்ணிக் கொண்டு போகிறது.

○ ஆர். பூபாலன், கிருஷ்ணகிரி.

? தமிழ் நாட்டை ஜப்பானைப் போல் மாற்றுவோம் என்று அமைச்சர் பொன்னையன் பேசி இருப்பது குறித்து?

! வீக மூலைக்கு மூலை ஒட்டச் செய்திருக்கும் போஸ்டர் அவர் படத்தின் விளம்பரத்துக்காக என்றாலும் அது என்னவோ நமது அமைச்சர்களுக்காகவே ஒட்டப்பட்டிருப்பது போல் தான் நமக்குத் தோன்றுகிறது: வாய்ச் சொல்லில் வீரனடி!

○ வி. சௌரிராஜன், ஸ்ரீரங்கம்.

? புதுக் கவிதையில் ந. பிச்சமூர்த்தியின் செம்மையான பாதையைப் பலர் பின்பற்றுவதில்லையே?

! ந. பிச்சமூர்த்தி ஆன்மீக உணர்வுகளில் நிறைய நம்பிக்கை வைத்திருந்தார். ஏறக்குறைய துறவி மாதிரியே வாழ்ந்தார். இன்று புதுக்கவிதைத் துறையில் அத்தகைய முதிர்ச்சி உடையவர்கள் எத்தனை பேர்? அது ஒருபுறமிருக்க, ந. பி. வகுத்த பாதை செம்மைதான்; ஆனால் அது ஒன்று மட்டுமே செம்மையான பாதை என்று எப்படிக் கூற முடியும்?

○ லலிதா ஸ்ரீனிவாசன், சென்னை—4.

? தொலைக்காட்சியில் நீங்கள் மிகவும் விரும்பும் பகுதி எது?

! செய்திக்கு முன்னால் தெரியும் எலெக்ட்ரானிக் சமாச்சாரம்தான்!

○ ரம்யா, கோவை.

? இளையராஜாவின் கன்னம், விஜியின் கன்னம்— எது பம்?

! இந்த மாதிரி கேள்விக்கெல்லாம் பதிலளித்துக் கொண்டிருந்தால் என் கன்னம் பம்!

மாட்டிக் கொண்டீங்களா?

○ ரகுவீர், சென்னை-4.

? பக்தவத்சலம் அவர்களுக்கு 88-வது பிறந்த நாள் விழாவாமே? மூலைக்கு மூலை போஸ்டர் ஒட்டியிருக்கிறதே?

! அவர் இப்பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியரிடம் ஆழ்ந்த நட்புடையவர். எப்படிப் பட்ட நட்பு? 'கல்கி' அவரைப் பாராட்டி வாழ்த்தியும் இருக்கிறார், தாக்கியும் இருக்கிறார், கேலிச் சித்திரமும் போட்டிருக்கிறார்— பதவியிலிருந்த பக்தவத்சலத்தின் பேச்சு, செயல்களின் அடிப்படையில். ஆனால் நட்பிலே மாறுதலே கிடையாது. 'கல்கி' குடும்பத்தில் ஒரு விசேஷம். குறிப்பிட்ட – சிலரை மட்டுமே அழைத்து அடக்கமாக நடத்த எண்ணுகிறார் என்று வையுங்கள். பக்தவத்சலம் கேள்விப்பட்டு விடுவார். உடனே இருவருக்கும் பொதுவான ஒரு நண்பரைக் கூப்பிட்டு: 'அழைப்பிதழ் தபாலில் தவறியிருக்கும் இல்லென்று அனுப்பி விடச் சொல்லுங்கள்!' என்று நாசூக்காக நினைவூட்டி விசேஷத்துக்கு வந்து விடுவார்! ஏன், ராஜாஜியிடம் பக்தவத்சலத்துக்கு இல்லாத பக்தியா? பெருமதிப்பா? அப்படியிருந்தும் இந்தியா –பாகிஸ்தான் யுத்தத்தின் போது இந்தப் பத்திரிகையில் ஒரு கார்டூன்வர, அதை முதல்வர் பக்தவத்சலம் தேசத் துரோகமானது எனக் கருத, ராஜாஜி அந்தக் கார்டூனுக்குத் தாமே முழுப் பொறுப்பு ஏற்க, அவரையே அரெஸ்ட் செய்யப் போலீஸை 'அலர்ட்' செய்தவர் பக்தவத்சலம். அப்புறம் டில்லியிலிருந்து உள்துறை அமைச்சர் நந்தா ஃபோன் செய்து குறுக்கிட, காங்கிரஸ் தொண்டர்கள் சிலரை அனுப்பி கல்கி காரியாலயம் முன் ஆர்ப்பாட்டம் செய்யச் சொன்னதுடன் நிறுத்திக் கொண்டார். ராஜாஜி பொறுப்பேற்ற அந்த கார்டூன் பிரசுரமானது சரியா -தப்பா என்பது ஒருபுறமிருக்க, மாஜி கவர்னர்ஜெனரல் என்றாலும் கடமையைச் செய்யத் தயங்க மாட்டேன் என்ற பக்தவத்சலத்தின் வீரம் கவனத்திற்குரியது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பக்தவத்சலத்தினிடம் ராஜாஜிக்கு இருந்த மதிப்பும் அன்பும் அதிகரித்தது. அன்று லட்சியங்களும் உயர்ந்தனவாய் இருந்தன. அவற்றை அடையும் மார்க்கங்களும் உயர்ந்தனவாய் விளங்கின. கட்சிகாரர்கள் பக்தவத்சலத்துக்குப் பிறந்த நாள் அன்று மாலை போட்டு மரியாதை செலுத்தினால் போதாது. இதையெல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.


○ மங்களா சேஷாத்ரி, சென்னை.

? மறக்க முடியாத ஓர் அனுபவம் ஒன்றைக் கூறுங்களேன்?

! சமீபத்தில் திருச்சூர் போயிருந்தேன். அங்கே தபஸ்யா என்ற பெயரில் இலக்கிய – கலைப்பணி ஆற்றி வரும் ஒரு நிறுவனத்தின் ஆண்டு விழா. சாகித்திய அகாதமி அரங்கில் நடந்தது. மூன்று பக்கச் சுவர்களையும் மலையாள மொழியில் பிரபலமான இலக்கியமேதைகளின் வண்ண ஓவியங்கள் இருவரிசைகளாக (ஆயில் பெயிண்டிங்) அலங்கரித்தன. அதைப் பார்க்கவே பரவசமாயிருந்தது. அடடா தமிழ்நாட்டில் இப்படி ஓர் அரங்கம் எழுத்தாளர்களுக்காக இல்லையே என்று ஏங்கவும் வைத்தது. நவீன இலக்கியங்கள் போகிறபோக்கு ஒரு மாதிரி இருப்பதால் தபஸ்யா அதைக் குறை கூறிக் கொண்டிராமல் சத்தான பழைய இலக்கியங்களில் அதிகக் கவனம் செலுத்துகிறது. இதன் மூலமே ஒரு ஆரோக்கியமான மாற்றம் நவீன இலக்கியத்திலும் ஏற்படும் என நம்புகிறது. கவியரங்கு, கருத்தரங்கு தவிர ஓவியர்களுக்கு ஒரு 'ஒர்க் ஷாப்' நடந்தது. அதில் கேரளத்தின் பல்வேறு ஊர்களிலிருந்தும் இளம் ஓவியர்கள் வந்து கலந்து கொண்டு தங்கள் ஆற்றலைக் காட்டினார்கள். அவர்களுக்கு வழிகாட்டத் தேர்ந்த ஓவியர்கள் இருந்தார்கள். நாலு நாட்களும் எல்லோருக்கும் அவியல் எரிசேரி, காளன், ஓலன் சகிதம் கமகமக்கும் மலையாளச் சாப்பாடு போட்டார்கள். இ பிரயாணம் ஞான் சுகமாயிட்டு அனுபவிச்சு, மனஸிலாயோ?



○ பக்தவத்சலம்



○ நா. பிச்சமூர்த்தி



○ பொன்னீலன்

★ ரூ. 10 பரிசு பெறுபவர்:
நா. இரகுநாதன்.
சின்னக்குப்பம்,
அரூர் வட்டம்—636 903.

பி.எம்.மின் டூர் புரோகிராம்

'கருத்து'

நமது பிரதம மந்திரி எங்கேயாவது சுற்றுப் பயணம் செய்தால், அவரது நிகழ்ச்சி நிரலை மணிப்பிரகாரம் விவரமாகத் தயாரிக்கிறார்கள். எங்கள் வீட்டு பி. எம். (பிரியமுள்ள மனைவி!) மிற்கும் இம்மாதிரி ஒரு டூர் புரோகிராம் போட்டால்?

வியாழக்கிழமை 28-ம் தேதி

காலை 7: சாயங்காலம் மிஸஸ் சுதாமூர்த்தி வீட்டு நவராத்திரிக்கு எந்தப் புடவை கட்டிக் கொண்டு போவது என்பதை ஆராய்வார்.

காலை 8: மேற்படி பிரச்சினையைத்தொடர்ந்து ஆராய்வார். ('நான், இழமைக்குக் கட்டிக் கொண்டு போக மசண்டா ஒரு புடவை கிடையாது. சாயம் போனதும், தையல் போட்டதும் தான் என் ராசி ஹூம்.'' என்று அலுத்துக்கொள்ளுதல்.)

காலை 9: ஒரு பட்டுப் புடவையைத் தவணை முறையில் வாங்குவதற்குக் கணவரிடம் அனுமதி பெறுதல் (அதேசமயம் புடவை தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு லேசாகப் புன்னகை புரிதல்.)

காலை 10 முதல் மாலை 3 மணி வரை: 14 புடவைக் கடைகளுக்கு விஜயம் செய்து, பல புடவைகளைப் பார்த்துத் திருப்தி ஏற்படாமல், முதலில் சென்ற கடைக்கே போய் மறுபடியும் எல்லாப் புடவைகளையும்— குறைந்தபட்சம் 130 புடவைகளை— எடுத்துப் போடச் சொல்லிப் பார்த்து ஒரு புடவையை வாங்கிக் கொள்ளுதல். (''ஹூம். என்னமோ புடவை! ஒன்றுமே வது. தலைப்பு நன்றாக இருந்தால், பார்டர் சரியாக இல்லை. கலர் நன்றாக இருந்தால், தலைப்பு நன்றாக இல்லை'' என்பது போன்ற கமெண்ட்டுகள் அலுப்புடன் வீசப்படல்.)

3–4 மணி வரை

கடையிலிருந்து வீடு திரும்புதல் —வழியில் மீனு மாமி, ருக்மணி மாமி, பத்மா மாமி, அம்புஜம் மாமி, கோகிலா மாமி ஆகியவர்களுடன் ஐந்து, ஐந்து நிமிடங்கள் உரையாடல். புதுப் புடவையைக் காட்டி லேசாக ஐம்பம் அடித்துக் கொள்ளுதல். (''பீரோ பிடிக்காமல் புடவை இருக்கிறது. இருந்தாலும் நான், இழமை குறையக் கூடாது என்று எங்க அகத்துக்காரர் நிர்ப்பந்தப்படுத்தி வாங்கிக் கொள்ளச் சொன்னார்'' போன்ற சிற்றுரைகள் நிகழ்த்தப்படும்.)



4–5 மணி வரை: இரவு சமையலைச் செய்து முடித்தல். (இடைஇடையே, 'ஒருநாள் சீக்கிரம் ஆபீஸை விட்டு வரமாட்டாரே, இந்த மனுஷன் ஆபீஸே இவர் தலை மேலே ஓடற மாதிரி நினைப்பு. ஹூம்' என்று கணவரைப் பற்றி முணுமுணுப்பது.)

5–6 மணி: நங்கநல்லூர் மிஸஸ் சுதாமூர்த்தி வீட்டு விஜயம். (டாக்ஸிக்காரருடன் சண்டை.'அநியாயமாக சார்ஜைக் காட்டறது உன் டாக்ஸி மீட்டர்') அவர்கள் என்ன வாடகை கொடுக்கிறார்கள், மாத வருமானம் என்ன, தீபாவளிக்கு என்ன புடவை வாங்கினான், பிளாட் ஏதாவது வாங்கிப் போட்டிருக்கிறார்களா, ஏன் கலர் டி. வி. இன்னும் வாங்கவில்லை போன்ற முக்கிய விஷயங்களைப் பற்றி கருத்துப் பரிமாறிக் கொண்டுவிட்டு, விடைபெறுவார்.

6-30 மணி வீடு வந்து சேர்தல்

6-30 — 7-30 மணி

போய் வந்த விவரங்களையும், நடுநடுவில் சந்தித்த மாமிகள் மூலம் கிடைத்த முக்கியதகவல்களையும் டூர் ரிப்போர்ட்டாக கணவரிடம் சொல்லுதல். உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியவைகளை தனியாகப் பட்டியல் போட வேண்டியது. மறுநாள் டூர் பற்றி கணவரின் ஆலோசனையை ஒப்புக்குக் கேட்டு விட்டு, தனக்கு உகந்தபடி அமைப்பது.

(பி. எம்முடன் எதிர்வீட்டு லட்சுமியும் பக்கத்து வீட்டுப்பெண் மாலதியும் உடன் செல்வார்கள்.)



Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032 (Phone: 431543)

Assistant Editor: P. S. Mani

Editor: K. Rajendran


நல்லி
சின்னசாமி செட்டி
பனகல் பார்க், சென்னை

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka